# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம் வெள்ளி, ஆவணி (ஆகஸ்ட்) 24, 2018. இதழ் - 27

அரங்கம் பத்திரிகை மட்டுநகரில் கிடைக்கும் இடம்

EAST LINK AGENCY POST OFFICE

196, திருமலை வீதி, மட்டக்களப்பு.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

இது இலவசம்



அருகில் உள்ள அமிர்தத்தின் அர்த்தம் புரியாமல் போய்விட்டதா?


பக்கம் - 03



விமர்சனம் எது? தனிநபர் இழிவுபடுத்தலின் எல்லை எது?

எதற்கு விமர்சனம் செய்ய வேண்டும், எதற்கேல்லாம் கருத்துசொல்லும் சுதந்திரம் எமக்கு உண்டு

பக்கம் - 03



கணிதம் கடினமல்ல ...

கணித தத்துவங்களை நீங்கள் வெறுக்கலாம் அல்லது விரும்பலாம்.

பக்கம் - 03

உள ஆற்றுப்படுத்தலின் அவசியம்



அண்மையில் மட்டக்களப்பில் நான் சந்தித்த சில நிகழ்வுகள்

பக்கம் - 03





## 'தமிழ் கட்சிகளின் சந்திப்பு - கிழக்கு தமிழர் ஒன்றிய முயற்சிகளுக்கு கிடைத்த பெரு வெற்றி'

- செங்கதிரோன் கோபாலகிருஷ்ணன்

கிழக்கு தமிழர் விவகாரம் குறித்து அனைத்து தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடத்தப்பட்ட திறந்த உரையாடல் தமது முயற்சிகளுக்கு கிடைத்த ஒரு முதற்கட்ட பெருவெற்றி என்று கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான செங்கதிரோன் த. கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது, கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் தமிழர்களுக்கு உச்சபட்ச ஆசனங்களை பெற்றுக்கொள்வதை உறுதி செய்து கொள்வதற்காக அனைத்து தமிழ் கட்சிகளும், ஒரு பொதுச்சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கிழக்கு தமிழர் ஒன்றியம், அனைத்து தமிழ் கட்சிகளின் தலைமைகளை தனித்தனியாக சந்தித்து கேட்டுக்கொண்டிருந்தது.

அதன் அடுத்த கட்டமாக கடந்த புதன்கிழமை அந்த அமைப்பினர் அனைத்து தமிழ் கட்சிகளையும் ஒரேயிடத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

இலங்கை தமிழ் அரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி, தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி, அகில இலங்கை தமிழர் மகா சபை, ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆகிய 11 கட்சிகள் அந்தச் சந்திப்பில் கலந்துகொண்டன.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி (தமிழ் காங்கிரஸ்) இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை.

இந்த சந்திப்பில் கலந்துகொண்ட அனைத்து கட்சிகளும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒரே அணியில் போட்டியிடுவது என்ற கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் கொள்கையை வரவேற்றதாக கூறிய கோபாலகிருஷ்ணன், அந்த நிலைப்பாடு தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை தந்ததாகக் கூறினார். இருந்த போதிலும் தமிழரசுக் கட்சி இந்த நிலைப்பாட்டை ஆதரித்தாலும், தமது கட்சியின் சின்னத்தை விட்டுக்கொடுப்பதில் கொஞ்சம் தயக்கம் காண்பித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

முதல் தமிழ் கட்சியான தமிழ் காங்கிரஸோ அல்லது அதில் இருந்து பிரிந்து உருவான தமிழ் அரசுக்கட்சியோ, பின்னர் தமிழர் நலனை முன்னிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கியபோது, தமது சின்னத்தை விட்டுத்தர தயங்கவில்லை என்ற முன்னுதாரணத்தை அடிப்படையாக கொண்டு தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர்கள், கிழக்கு மக்களின் நலனை முன்னிட்டு, தமது கட்சி சின்னத்தை விட்டுக்கொடுத்து பொதுச்சின்னத்தில் போட்டியிடுவது குறித்து ஆலோசிக்க வேண்டும் என்று தான் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு தமிழர் ஒன்றியம் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிரானதல்ல என்ற அடிப்படையில், அனைவரும் ஓர் அணியில் போட்டியிடும் இந்த முயற்சியை தாம் ஆதரிப்பதாக தமிழரசுக் கட்சி கூறியதாகவும் கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

டெலோ மற்றும் புளொட் கட்சிகளைப் பொறுத்தவரை பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதற்கான இந்த திட்டத்தை அவை ஆதரித்த போதிலும், தாம் ஏற்கனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிப்பதால், அந்தக் கூட்டமைப்பின் இறுதி முடிவுக்கு கட்டுப்படுவோம் என்று தெரிவித்திருந்தன.

இதன் அடுத்தகட்டமாக இந்த கட்சிகள்

தொடர்ச்சி... (பக்கம் -03 )

## மருத்துவர்கள் பணியாற்ற மோசமான இடமாக மட்டுநகர் மாறுகிறதா?

### முகநூல் விஷமப் பிரச்சாரங்களின் விளைவு

மட்டக்களப்பு மருத்துவமனையின் மருத்துவ அதிகாரிகளை இலக்குவைத்து, சமூக ஊடகங்களில் போலியான பெயர்களில் தாக்குதல் நடத்தும் குற்றவாளிகளை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிடின், தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாக வைத்திய நலன்புரிச் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த சுமார் ஒன்றரை வருடமாக வைத்திய அதிகாரிகளை இலக்கு வைத்து நடத்தப்படும் இத்தகைய சமூக ஊடகப் போலிகளின் தாக்குதலால், மூன்றுக்கும் குறையாத மருத்துவ நிபுணர்கள் மட்டக்களப்பை விட்டு வெளியேறிவிட்டதாக கூறும் வைத்திய நலன்புரிச் சங்கத்தின் தலைவரான டாக்டர் எஸ். மதனழகன், மருத்துவர்கள் இப்படியான "போலி" முகவரிகளைக் கொண்ட முகநூல் பயன்படுத்தினர்களின் அவதூறு பிரச்சாரங்களினால், மிகுந்த

தொடர்ச்சி... (பக்கம் -02 )



## முறைகேடுகள் குறித்த நடவடிக்கைக்கு கோரிக்கை

வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள ஊழியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும், நிதி மோசடி குறித்து விசாரிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித்த போகொல்லாகமவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சிவக்கொழுந்து ஜெயராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக புதன்கிழமை 22.08.2018 ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு கிழக்கு மாகாண கல்வித்துறை சார்ந்த அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டியங்கும், பாரிய நிதி சார்ந்த அமைப்பாக வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள ஊழியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் உள்ளது.

திருகோணமலையில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டு இயங்கும் இந்நிறுவனம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வழிநடாத்தலில் சேமிப்பு, கடன் வழங்குதல், மரணாதாரக் கொடுப்பனவு, புலமைப்பரிசில் வழங்குதல் போன்ற இன்னும்பல செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

நீண்டகாலமாக இலாபத்தில் இயங்கி வந்த இச்சங்கமானது, 2010ஆம் ஆண்டிற்குப் பின்னர் நஷ்டத்தில் இயங்கி வருகின்றது.

இவ்விடயம் சம்பந்தமாக கூட்டுறவு அபிவிருத்தி முன்னாள் ஆணையாளர் திவாகர சர்மாவிடம் கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஆணையாளரினால் நிதிப் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் விளைவாக, நிதிக் கையாள்கை, நிதி மோசடி, ஆவணங்களை மறைத்தல் அல்லது அழித்தல் போன்ற செயற்பாடுகள் நிரூபணமானது.

ஆசிரியர்களின் உழைப்பிலான சேமிப்புப் பணத்தை அவர்களது அனுமதி பெறாமல் மாதிரிக் கையொப்பமிட்டு பணத்தைச் சூறையாடியமை இந்த விசாரணையில் நிரூபணமாகியது. மேலும் கடன் விண்ணப்பத்திலும் ஆசிரியர்களின் பெயரில் மோசடிக் கையொப்பத்தை இட்டு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது. இன்னும் விழா முற்பணங்கள் மோசடியாகப் பெறப்பட்டமையும் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆனாலும் அது குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.
இவை குறித்து சங்கத்தின் கருத்தை உடனடியாக பெறமுடியவில்லை. அது கிடைக்கும்பட்சத்தில் அதற்கு உரிய முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரிக்கப்படும்.

தொடர்ச்சி...

## மருத்துவர்கள் பணியாற்ற மோசமான இடமாக மட்டுநகர் மாறுகிறதா?

மன உளைச்சலுக்கு உள்ளாவதாகவும் குறிப்பிட்டார்.

குறிப்பாக பெண் மற்றும் சிரேஸ்ட மருத்துவர்கள் கூட இவ்வாறு இலக்கு வைக்கப்படுவதாகவும் அவர் கவலை வெளியிட்டார். கடந்த ஒன்றரை வருடமாகவே இந்த அவதூறு பிரச்சாரங்கள் தொடர்வதால், “இலங்கையில் மருத்துவர்கள் வேலை செய்வதற்கு மிகவும் மோசமான இடமாக மட்டக்களப்பு மாறிவிட்டது” என்ற கருத்து மருத்துவர்கள் மத்தியில் பரவி வருவதாகவும், அதனால் எவரும் இங்கு வருவதற்கு தயங்குவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

அதேவேளை, இப்படியான போலியான பிரச்சாரங்களால், பொதுமக்களுக்கு மருத்துவமனை மீதான மதிப்பு குறைந்துவருவதாகவும், மருத்துவர்களும் தமது பணியை சிறப்பாக ஆற்றுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் கூறினார் டாக்டர் மதனழகன். இது குறித்து பொலிஸாருக்கு தாம் புகார் செய்துள்ளதாக கூறும் அவர், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க தாமதிக்கும் பட்சத்தில், மருத்துவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவார்கள் என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் இணைய வழிக் குற்றங்கள் (சைபர் கிரைம்) சிவில் விவகாரமாக கருதப்படுவதால், அவை குறித்து பொலிஸார் சந்தேக நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக கூறப்படுகின்றது.

ஆனாலும், மருத்துவ துறையின் மக்களுக்கான சேவைகள் இத்தகைய விஷமிகளின் நடவடிக்கையால் பாதிக்கப்படுவதாக கூறும் வைத்திய நலன்புரிச் சங்கம், தாம் அடுத்த கட்ட கடுமையான நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்துவருவதாக கூறுகின்றது.

## மறுகா கலை இலக்கிய வட்டத்தின் நிகழ்வு




சமகால படைப்புலகம் பற்றிய சிந்தனைகளை உருவாக்குதலும் படைப்பாளிகளிடையே பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் பரிமாற்றத்தினை ஏற்படுத்தும் நோக்கில் “மறுகா” கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இருபொழுதில் கூடல் - பேசிப்பறைதல் இலக்கியச் சந்திப்பும் கலந்துரையாடலும் மட்டக்களப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் மட்டக்களப்பு தாழங்குடா தேசிய கல்விக் கல்லூரியில் இந் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சிறுகதை, நாவல், கவிதை, கலை என தினமும் இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள பேசிப்பறைதல் இலக்கியச் சந்திப்பில், 25ஆம் திகதி சனிக்கிழமை காலை காலை 9.15 மணிக்கு தொடக்க நிகழ்வு நடைபெறவுள்ளது. இவற்றுக்கான ஏற்பாடுகளை “மறுகா” கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் த.மலர்ச்செல்வன் செய்துள்ளார்.

## மட்டக்களப்பு வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவில் செல்வராஜா



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு உறுப்பினராக ஈஸ்ட் லகூன் ஹொட்டல் நிறுவனத்தின் தலைவர், தேசபந்து முத்துக்குமார் செல்வராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

சுகாதார, சுதேச வைத்திய மற்றும் போஷாக்கு அமைச்சரான ராஜித சேனாரத்னவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவராகவும், கிழக்கு மாகாண சுற்றுலாச் சபையின் பணிப்பாளராகவும் இவர் செயற்படுகிறார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறந்த தொழில்முனைவோரில் ஒருவராக கணிக்கப்படும் செல்வராஜா அவர்கள், மாவட்டத்தின் சிறந்த சமூக சேவகராகவும் திகழ்கிறார்.

## அகில இலங்கை தமிழ்மொழித் தினப்போட்டியில் காரைதீவு விபுலாநந்தா மாணவி முகுர்த்தனா முதலிடம்!

அகில இலங்கை தமிழ் மொழித்தின தேசிய மட்டப்போட்டியில் காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரி மாணவி செல்வி ரவீந்திரன் முகுர்தனா முதலிடம் பெற்றுச்சாதனை படைத்துள்ளார்.

இவர் பிரிவு 5இல் தமிழியல் கட்டுரைவரைதல் இலக்கியநயம் என்ற பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதாக கல்வியமைச்சின் தமிழ்மொழிப்பிரிவு உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஜி.சடகோபன் கடிதமூலம் அதிபருக்கு அறிவித்துள்ளார்.

அகில இலங்கை தமிழ்மொழித்தினப் போட்டிகள் கடந்த யூலை மாதம் 14, 15 ,21, 22 ஆகிய தினங்களில் கொழும்பில் நடைபெற்றன.

காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியில் க.பொ.த உயர்தரம் கணிதப்பிரிவில் பயிலும் செல்வி ர.முகுர்த்தனா காரைதீவைச்சேர்ந்த க.ரவீந்திரன், ச. யோகேஸ்வரி ஆசிரிய தம்பதிகளின் புதல்வியாவார்.

மாணவி.ர.முகுர்த்தனாவின் சாதனையை அதிபர் தி.வித்யாராஜன் ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலை கல்விச்சமூகம் பாராட்டியுள்ளது.

(காரைதீவு நிருபர் சகா)

## அம்பாறையில் கடும்வரட்சி : தண்ணீருக்கு அலையும் தமிழ்மக்கள்!



அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக கடும் வரட்சி நிலவிவருகின்றது. இதனால் குடிதண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான பகுதிகளில் நீர்நிலைகள் வற்றிவருகின்றன. கால்நடைகள் உரிய தீவனமின்றி அலைந்து திரிகின்றன. வேம்புமரங்கள் பட்டுவருகின்றன. பச்சைநிற பயிர் பச்சைகள் மஞ்சளாகி வருகின்றன. மரங்களுக்கு ஒருவகை நோய் பீடித்துவருகின்றது.

தினமும் மாலைவேளைகளில் மழைக்கான அறிகுறிகள் தென்படுகின்றபோதிலும் மழைபொழிவதில்லை. இதனால் பிரதேசம் வரண்டுபோயுள்ளது.

குறிப்பாக அம்பாறையின் தென்கோடியிலே ஏ4 பிரதான சாலையிலுள்ள பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சங்குமண்கண்டி, களுகொல்ல, ஊறணி, செல்வபுரம், றொட்டை போன்ற தமிழ்மக்கள் வாழுகின்ற பிரதேசங்கள் வரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக இப்பிரதேசங்களில் குழாய்நீர் இணைப்புகள் பொருத்தப்படாமையினாலும் வரட்சியினாலும் குடிதண்ணீருக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது.

மக்கள் நலன்கருதி பொத்துவில் பிரதேச செயலகம் இராணுவ சிவில் படையினரின் உதவியுடன் மக்களுக்கு வாரத்தில் இருமுறை தண்ணீர் பவுசர்களில் தண்ணீரை விநியோகித்து வருகின்றது. அதற்கும் முண்டியடிப்பு.



அவர்களிடமுள்ள கொள்கலன்களில் இந்த நீரைப்பிடித்து நிரப்பி ஒருவாரத்திற்கான குடிதண்ணீர் தேவையைப் பூர்த்திசெய்கிறார்கள். தண்ணீரின் அருமை இப்போதுதான் புரிகிறது என்கிறார்கள் அவர்கள்.

தண்ணீர்த்தட்டுப்பாடு தொடர்பில் மக்களிடம் கேட்டபோது:
வழமையாக நாம் சங்குமண் கண்டிப்பிள்ளையார் ஆலயத்திலுள்ள கிணற்றில் தண்ணீர் எடுப்போம். ஆனால்

தொடர்ச்சி... (பக்கம் -23 )





## தேசிய விஞ்ஞான மன்றத்தின் விருது பெற்ற அருட்சகோதரி கலாநிதி யோசவ்வா

2018 ஜுலை மாதம் 25ம் திகதி கல்வி அமைச்சினால் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வின்போது தாண்டவன்வெளி, திருச்சிலுவைக் கன்னியர் மட இல்லத்தலைவியான அருட்சகோதரி. கலாநிதி யோசவ்வா அவர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவ்விருதானது கிழக்குப்பல்கலைக் கழக விரிவுரையாளர் ஒருவரது முதுமாணிப் பட்டத்திற்கான ஆய்வினை மேற்பார்வை செய்து, குறித்த காலப்பகுதிக்குள் சிறந்த முடிவினைப் பெற்றுக்கொடுத்தமைக்காக வழங்கப்பட்டது. இந்த ஆய்வானது முன்பள்ளி சிறார்களின் போசாக்கு சம்பந்தமாக கிழக்கு மாகாணத் தாய்மார்களின் அறிவினை மேம்படுத்துவதற்காக ஒரு நிகழ்ச்சித் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, அதன் பிரதிபலனை அறிவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும்.

விருதுபெற்ற அருட்சகோதரி கலாநிதி யோசவ்வா அவர்களை தாண்டவன்வெளி புனித காணிக்கை அன்னை ஆலய இறைமக்கள் ஆகஸ்ட் 12 ஆம் திகதி ஞாயிறு திருப்பலி நிறைவில் பாராட்டி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

அருட்சகோதரி அவர்கள் 1995ம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு சீலோவாம் வைத்தியசாலையில் பணிபுரிந்து வருவதுடன், கடந்த இருபது வருடங்களாக கிழக்குப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணிபுரிந்து, பல நூற்றுக்கணக்கான தாதிய பட்டதாரிகளை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். 2007ல் நீரிழிவு நோய்க்காரணிகள் மற்றும் நோயின் தாக்கங்கள் குறித்த ஆய்வினை நோர்வே, துரொம்ஷொ பல்கலைக்கழகத்தில் பூர்த்தி



செய்ததன் மூலம் கலாநிதி பட்டத்தினையும் பெற்றுள்ளார். இலங்கைத் தாதியரிடையே முதன் முதலாக தாதியத்தில் கலாநிதி பட்டத்தினைப் பெற்றவர் என்ற பெருமையும், அருட்சகோதரிகளிடையே கலாநிதிப்பட்டம் பெற்றவர் இவர் ஒருவர் மட்டுமே என்ற பெருமையும் இவருக்குண்டு.

வூஸ் என்ற சர்வதேச நிறுவனம் வருடா வருடம் பல துறைகளில் ஆய்வுகளை மேற்கொண்டவர்களைக் கருத்திற்கொண்டு கௌரவித்து வருகின்றது. அவ்வகையில் 2012ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட நூறு பேரில் மருத்துவ விஞ்ஞான ஆய்வினை மேற்கொண்டதற்காக இவரும் ஒருவராக தெரிவு செய்து கௌரவம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அம்பாறையில் சிறுபோக நெல்அறுவடை தீவிரம்! பெரும்போகம் ஆபத்தில்?



அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல்அறுவடை மிகவும் மும்முரமாக நடைபெற்றுவருகின்றது. பெரும்பாலும் அறுவடைஇயந்திரத்தால் அறுவடை இடம்பெற்றுவருகின்றது.

வழமையாக மாவட்டத்தின் சிறுபோக நெற்செய்கைக்காக 1லட்சத்து 20ஆயிரம் ஏக்கர் காணி பயன்படுத்துப்படுவது தெரிந்ததே. ஆனால் சேனநாயக்க சமுத்திரத்தில் நீர்மட்டம் குறைந்திருந்த காரணத்தினால் இம்முறை சிறுபோகத்திற்கு ஆக 36ஆயிரம் ஏக்கர் காணிக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டது.



அறுவடைசெய்யப்பட்ட நெல்லை பிரதானவீதியின் இருமருங்கிலும் விவசாயிகள் உலர வைக்கின்றனார்கள்.

அம்பாறை மாவட்ட விவசாயத்திற்கு நீரை வழங்கும் பிரதான நீர்வழங்கு மையமாகத்திகழும் சேனநாயக்க சமுத்திரத்தின் நீர்மட்டம் என்றுமில்லாதவாறு வெகுவாகக்குறைந்துள்ளது. பருவமழை பொய்த்ததே இதற்கு பிரதான காரணமாகும்.

மொத்தமாக 7லட்சத்து 70ஆயிரம் ஏக்கர்அடி நீர் கொள்ளளவு கொண்டது இச்சமுத்திரம். ஆனால் அம்மட்டம் இன்று அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தில் 50ஆயிரம் ஏக்கர் அடியாக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தநீர் ஆக குடிநீருக்காகவும் மீன்வளர்ப்பிற்காகவும் மாத்திரமே போதுமானதாகும்.

தற்போது சிறுபோக நெல் அறுவடை இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் அறுவடைக்கு வயல்கள் தயாராகவுள்ளன.

அதனிடையில் சில பகுதிகளில் அடுத்து பெரும்போகத்திற்கு விவசாயிகள் தயார் செய்கின்றார்கள். ஆனால் நீர் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுக்கும் சாத்தியமுள்ளது.

வழமையாக மாவட்டத்தில் பெரும்போகத்தின்போது ஒரு லட்சத்து 50ஆயிரம் ஏக்கர் காணியில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது தெரிந்ததே


இன்றைய வரட்சிநிலை நீடித்தால் பெரும்போக நெற்செய்கைக்கு அனுமதி வழங்கமுடியாத துர்ப்பாக்கிய நிலை தோன்றும் என நீர்ப்பாசனத்திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.



அதன்படி பார்த்தால் பெரும்போக நெற்செய்கை அறவே செய்யமுடியாத நிலைதோன்றும். இது நாட்டின் மொத்த தேசிய நெல் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சியைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல் மாவட்ட விவசாயிகளின் ஜீவனோபாயத்திற்கு பாரிய சவாலாகவும் மாறும்.

(காரைதீவு நிருபர் சகா)

## குல்தீப் நய்யார் காலமானார்



இந்தியாவின் மூத்த பத்திரிக்கையாளரும், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினருமான குல்தீப் நய்யார் புதனிரவு டெல்லியில் காலமானார். அவருக்கு வயது 95.

பன்முக திறமையாளராக அறியப்பட்ட குல்தீப், பஞ்சாப் அருகேயுள்ள சியால்கோட் பகுதியில் 1924 ஆம் ஆண்டு பிறந்தார்.

பத்திரிக்கையாளர், தூதர், மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் எழுத்தாளர் என தடம் பதித்து, அனைத்து துறைகளிலும் சிறந்தி விளங்கியவர் குல்தீப்.

அரசியல் தலைவர்கள் பலரும் குல்தீப் நய்யார் குறித்த அஞ்சலி செய்தியை பகிர்ந்து வருகின்றனர்.

## கேரள வெள்ள நிலவரம்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரளா மாநிலம் மெல்ல மெல்ல தனது இயல்புநிலைக்கு திரும்பிக் கொண்டிருக்கிறது. நிவாரண முகாம்களில் இருந்த மக்கள் தங்கள் வீடுகளுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள்.

இப்போதுள்ள சூழ்நிலையில் கேரளாவில் நோய் தொற்றை எதிர்ப்பதுதான் பெரிய சவாலாக இருக்கிறது என்கிறார் கேரள சுகாதாரத் துறை அமைச்சர் ஷைலஜா டீச்சர்.



இதற்கு மத்தியில் வெளிநாடுகள் அளிக்கும் நிதியை பெற்றுக் கொள்ளலாமா, வேண்டாமா என்பது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

கேரளாவின் வெள்ள நிவாரணத்துக்காக ஐக்கிய அரபு அமீரக அரசு அறிவித்த ரூ.700 கோடி நிதியுதவியை ஏற்க இந்திய மத்திய அரசு மறுத்துள்ளதாகச் செய்தி வெளியாகி இருக்கிறது.

அது போல, கேரள வெள்ள நிவாரணத்துக்காக நிதியுதவி அளிக்க முன் வரும் நாடுகளுக்கு நன்றி கூறுங்கள். அதேநேரம் அந்த நாட்டின் நிதியுதவியை ஏற்க வேண்டாம்” என்று தூதரகங்களுக்கு இந்திய அரசு அறிவுறுத்தி உள்ளதாக ஊடகங்கள் கூறுகின்றன.

# விமர்சனம் எது? தனிநபர் இழிவுபடுத்தலின் எல்லை எது?



எதற்கு விமர்சனம் செய்ய வேண்டும், எதற்கேல்லாம் கருத்துசொல்லும் சுதந்திரம் எமக்கு உண்டு என்று நம்மில் பலருக்கு தெளிவு இல்லை, இதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று எம் கல்வி முறையும்தான். கூடவே சமூகத்தில் ஊறிப்போய் இருக்கும் தப்பான கற்பிதங்களுமாகும் .

ஒருத்தர் ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலை பற்றியோ சட்டங்கள், கொள்கைகள் பற்றி கருத்து தெரிவித்தால், நாம் அவர் சொன்ன அந்த விடயம் பற்றி விமர்சிக்கலாம், அந்த விமர்சனம் நாட்டின் பொருளாதார சமூக தேவைக்கேற்ப விமர்சிக்கப்படவேண்டும். அதை விடுத்து அந்தத் தனி நபரின் வாழ்கையை பற்றியோ அவரின் குடும்பம் பற்றியோ விமர்சிப்பது எமக்கு ஜனநாயக விழுமியங்களில் அக்கறை இல்லை என்பதனையும் அந்த விடயம் சார்ந்து ஆழமான அறிவும், விளக்கமும், திறனும் இல்லை என்பதையே பறைசாற்றும். கூடவே நீங்கள் மற்றவரின் படுக்கை அறையை

## விமர்சனம் என்ற பெயரில் பெண்கள் இலக்கு வைக்கப்படுகிறார்கள், அவர்களின் நடத்தை இலக்கு வைக்கப்படுகின்றது

எட்டிபார்க்கும் நபர் என்பது திண்ணமாகும்.

உதாரணமாக சில காலமாக முஸ்லிம் பெண்கள் தனியார் விவாக விவாகரத்து

நளினி ரட்ணராஜா
மனித உரிமை
செயற்பாட்டாளர்

சட்டம் திருத்தப்படவேண்டும் என்ற கோஷத்தை வைக்கின்றனர். அங்கே சட்டத்தில் உள்ள குறைகள் அல்லது அவர்கள் சொல்லும் காரணத்தை விமர்சிப்பதை அல்லது சான்றுகளுடன் அவர்கள் “பிழை” என்று நிரூபிப்பதை விடுத்து “இவளுகளுக்கு முக்காடு போடவே தெரியாது கதைக்க வந்துட்டாளுகள்” என்ற விமர்சனம் அல்லது “இவளுகள்ட புருஷன் மார உதைக்கணும் அல்லது இவள்ட உடையை பார்த்தால் இவள் முஸ்லிமே இல்லை” என்ற விமர்சனங்கள் எழுகின்றன.

இதேபோல் யாரவது பாலியல்தொழில் அல்லது கருத்தரிப்பு சட்டமாக்கப்படவேண்டும் என்று கூறினால் “நீ பாலியல் தொழில் செய்கிறாயா அல்லது உன் பிள்ளையை அனுப்பு முதலில் என்ற விமர்சனங்கள்” அல்லது “ஓ இவ கருக்கலைப்பு எத்தினை செய்து இருக்காவோ? இவட அக்கா தங்கச்சிக்கு செய்யட்டும்” என்ற அருவருக்கத்தக்க விமர்சனங்கள் சர்வசாதரணமாக சொல்லப்படுகின்றன.

இதேபோல் தான் பெண்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்றாலோ அல்லது குறிப்பாக பெண்கள் வந்தாலோ அதிலும் அவள் தனித்து வாழும் பெண்ணாகவோ அல்லது துணைவரை பிரிந்து வாழும் பெண்ணாகவோ இருந்தால் “இவைக்கு குடும்பத்தையே நடத்த தெரியாது நாட்டை ஆழப் போறாவாம்‘‘ என்ற விமர்சனங்கள் வருகின்றன.

இதேபோல் ஒருவரின் கருத்தை விமர்சிக்கலாமே ஒழிய கருத்து சொல்பவரின் நடத்தையை மனப்பாங்கை, அறிவை விமர்சனம் செய்வதும் ஏற்று கொள்ளமுடியாதது. உதாரணமாக “உனக்கு இந்த விடயம் சம்பந்தமாக அறிவு இல்லை, நீ அறிவாளி என்று காட்ட முயற்சிக்கிறாய், அல்லது தெரிந்ததெல்லாம் சொல்ல வேண்டும் என்பதற்காக கொட்டாதே” என்று கூறுவது போன்றவை கருத்து சொல்லும் நபரை கீழ்த்தரமாக பேசுவதாகும். இது அந்நபரின் கௌரவத்தை பாதிக்கும் செயலாகும். ஒருத்தர் சொல்லும் கருத்து நீங்கள் பேசும் விடயத்துக்கு பொருத்தமில்லாததாக இருக்கலாம், பிழையாக இருக்கலாம் அனால் அதை சொல்லும் உரிமை கொடுக்கப்படவேண்டும். அதை விடுத்து அவரை பதில் கருத்து சொன்ன முறையை விமர்சிக்க முடியாது.

மகிந்த ராஜபக்ஷ தனிமனிதனாக நல்லவர் என்று பலர் கூறுகின்றனர். இருக்கலாம். இங்கே அரசியல் வாதியாக நாட்டின் ஜனாதிபதியாக அவருடைய அரசியல், கொள்கை, கொண்டுவந்த சட்டதிட்டங்களை விமர்சிக்க எல்லோருக்கும் உரிமை உண்டு; ஆனால் அவரின் தனிப்பட்ட வாழ்வை விமர்சிக்க எவருக்கும் உரிமை இல்லை, ஆனால் அவர்களுடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கள் நாட்டை, மக்களை பாதித்தால் கட்டாயம் விமர்சனம் செய்யலாம், கேள்வி கேட்கலாம்.

இதேபோல ஹிட்லரும் பாகிஸ்தான் அதிபர் பேர்வஸ் முஷாரப்பும் தனி நபர்களாக நல்லவர்களாகவே கருத்தப்படுகின்றனர், அதற்காக அவர்கள் அரசியல் நடத்திய முறையை யாரும் ஏற்று கொள்வதாக

தொடர்ச்சி... (பக்கம் -00 )

## அரங்கம் வாசகர்களுக்கு

# நாமும் செய்யலாமா? - ஒரு தோட்டப் போட்டி..

சியாமளா ஆனந்தா

கிழக்கின் வனப்பு மிகு பூமியில் எத்தனையோ வனப்புமிகு இளைஞர்கள், நடுத்தர வயதினர் ஏன் எங்கள் ஆணி வேரான முதியவர்கள் கூட இருக்கின்றார்கள்.

அவர்களில் பலர் பொழுதை எப்படி கழிப்பது என்று தெரியாமல் TV பார்ப்பது, நண்பர்களுடன் பொழுதை கழிப்பது என்று இருக்கிறார்கள். இவையும் நமக்கு தேவைதான். எனினும் மீதமிருக்கும் பொன்னான நேரத்தை வீணாக மண்ணாக்கி கொண்டிருப்பார்கள்.

“மண்” என்றவுடன்தான் ஞாபகம் வருகின்றது. நமது மீதமான பொன்னான நேரத்தை மண்ணுடன் செலவு செய்தால், நம் மட்டக்களப்பு மண்ணை மட்டுமன்றி நம் வாழ்வாதாரத்தையும் உயர்த்துவதற்கு ஒரு வழிகாட்டலாகத்தான் உங்களுக்கு இந்த பக்கம்.

இதை நீங்கள் தனியாக உங்கள் வீட்டிலோ அல்லது உங்கள் நண்பர், நண்பிகளுடன் சேர்ந்து அவர்கள் வீட்டிலோ செய்யலாம். ஒரு இலகுவான “நம் பயிரை நாமே வளர்ப்போம்“. இது ஒன்றும் விண்வெளியை தொடச் செய்யும் விஞ்ஞானம் அல்ல. நம் படிக்காத அம்மம்மா, அப்பப்பா சொல்லிச் சென்ற “தோட்டக்கலை”. அவ்வளவுதான்.

இதில் என்ன “புதிர்” என்றால், நம் மட்டக்களப்பில் முன்பைவிட நம் முற்றங்களின் அளவு குறைந்து கொண்டே வருகின்றது. அதனால்தான் இதையொரு போட்டியாக உங்கள் முன் வைக்க விரும்புகிறேன். போட்டிக்கு என்று விதிமுறைகள் இல்லை, முற்றுமுழுவதும் உங்கள் எண்ணங்களை புதுவிதமான ஆக்கங்களாக எதிர்பார்கிறேன்.

அதாவது இந்த தோட்டம் வளர்க்கும் போட்டிக்கான கால அவகாசம் 6 மாதங்கள், இதில் வெற்றிபெறும் நபருக்கு அரங்கம் வார இதழ் 10,000 ரூபாய் ரொக்க தொகை வழங்கி கௌரவிக்கும். உங்கள் தோட்டத்தை ஆரம்பிக்க முதல் ஒரு படம் (Photo/Vedio). 5 மாத கால அளவில் இன்னுமொரு படம் (Photo/Vedio) எடுத்து எங்கள் அரங்கம் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கவும். அந்த தோட்டத்தின் வனப்புக்கு ஏற்ப உங்களுக்கு பரிசுத்தொகை கிடைக்கும்.

## உள ஆற்றுப்படுத்தலின் அவசியம்

அண்மையில் மட்டக்களப்பில் நான் சந்தித்த சில நிகழ்வுகள் மனதுக்கு அவ்வளவு மகிழ்ச்சியை தரவில்லை.

ஒரு வகை வன்செயல் மனோநிலையில் மக்கள் எல்லாம் இருக்கிறார்களோ என்ற எண்ணத்தை மனதில் அது தோற்றுவித்தது.

விடயங்களை கலந்துரையாடி தீர்த்துக்கொள்ளும் போக்கு பலவீனமடைந்து காணப்படுகின்றது.



பூபாலரட்ணம் சீவகன்

ஒருவார்த்தைக்கு மேலே விடயங்களை, அடுத்தவர் சொல்வதை உள்வாங்கி, ஆலோசித்து, தீர்த்துக்கொள்ளும் பாங்கு இல்லாமல் போய்விட்டதோ, வன்முறை மட்டுமே தீர்வுக்கான வழி என்ற நிலை மக்களின் மனதில் பதிந்துவிட்டதோ என்று கருதத்தோன்றுகிறது.

இது போர்கடந்த பூமிதான். அதுவும் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்கள். இந்தக் காலகட்டம் மக்களை மிகுந்த மன அழுத்தத்துக்கு உள்ளாக்கியிருக்க வேண்டும். போரின் வடுக்கள் அவர்களின் மனதை விட்டு அகலாத காரணந்தான், அவர்களை தீர்வுக்கு வழியில்லை என்ற விரக்திக்கு உள்ளாக்கியிருக்கின்றதோ?

போருக்கு பின்னரான காலத்தில் மக்களை ஆற்றுப்படுத்த நிறைய முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனாலும், போரினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும், தேவையும் அவர்களுக்கு முற்று முழுதான ஆற்றுப்படுத்தலுக்கு இடம் தரவில்லை போலும்.

மீள்குடியேற்றம் போன்ற விடயங்களில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், ஆற்றுப்படுத்தல் என்பது இங்கு நிறையவே தேவைப்படுகின்றது என்பதை மக்களின் போக்கும், செயற்பாடுகளும் காண்பிக்கின்றன.

எப்படியிருந்தாலும், எனது கருத்து ஒரு மேலோட்டமான பார்வைதான். இது குறித்து ஆழமான ஆய்வு தேவைப்படுகின்றது. ஆனால், ஆற்றுப்படுத்தலும், புனர்வாழ்வுக்கான நடவடிக்கைகளும் இங்கு மிகவும் அதிகமான அளவிலும், உடனடியாகவும் தேவைப்படுகின்றன.



# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
அலையப்போடி நல்லரத்தினம்(அதிபர்)
அறிவாலயம் பவுண்டேசன்

# அருகில் உள்ள அமிர்தத்தின் அர்த்தம் புரியாமல் போய்விட்டதா?





‘பாலைக் கொடுத்துவிட்டு, வெந்நீரை குடிப்பதும், பச்சை இலைவகை மரக்கறிகளை கொடுத்துவிட்டு, காய்ந்த மரக்கறிகளை பெற்றுச்செல்வதும் படுவான்கரைப்பிரதேச மக்களிடையே பழகிப்போன போக்காகிவிட்டது’, என தாண்டியடி சந்தையின் முன்னின்று கவிதாவும் சின்னப்பிள்ளையும் பேசிக்கொண்டனர்.

கவிதாவின் ஆதங்கம், ”படுவான்கரைப் பிரதேசத்திலே உடனடியாக கிடைக்கின்ற, நஞ்சற்ற உணவு வகைகள் பல இருக்கின்றன. பசுப்பாலும் கிடைக்கின்றது. ஆனால் அவற்றினை உண்பதில் ஆர்வம் செலுத்துவது படுவான்கரைப்பகுதி மக்களிடம் குறைந்து செல்கின்றது. அவ்வாறு சென்றால், நோய் தேடித் தொற்றிக்கொள்ளும் சமூகமாக படுவான்கரை சமூகம் மாற்றப்பட்டுவிடுமோ?, எதிர்காலம் பிள்ளைகளின் பிறப்பு எவ்வாறாகிவிடுமோ?,” என்பதுதான். மனக்கவலையுடன் இருந்துகொண்டிருந்த கவிதாவிற்கு, சந்தையில் வருகைதந்து பலரும் காய்ந்த மரக்கறிகளை வாங்கிக்கொண்டு செல்ல. அவளின் அங்கலாய்ப்புக்களும் இன்னமும் அதிகரித்தன. இதனால் பக்கத்தில் நின்ற சின்னப்பிள்ளையிடம் தனது கருத்துக்களை உயர்ந்த தொனியிலும், மனக்கவலையுடனும் கூற ஆரம்பித்தாள்.

“வாரத்தில் ஒரு நாள் சந்தைக்கு வந்தால், சந்தையில் கிடைக்கும் காய்ந்த மரக்கறிகளை வாங்கி கொண்டு செல்வதுதான் இப்போதைய நாகரீகமாச்சு. அப்போதெல்லாம் படுவான்கரைப் பகுதியில் கறிக்கு குறைவிருக்காது. ஒரு சுண்டு அரிசெடுத்து சோறு சமைத்தால், பெரிய சட்டியில் கறி சமைப்பார்கள், பாத்திரமொன்றில் சோற்றை எடுத்தால், சோற்றை கறி மறைத்துவிடும். இப்பெல்லாம் கறி குறைவு, சோறு அதிகம். இதற்கு காய்ந்த மரக்கறியின் விலை அதிகமாகி விட்டதுவும் காரணமே. காய்ந்ததை உண்பதிலே எமது மக்களும் ஆர்வமாகிவிட்டனர்” என கவிதாவைப் பார்த்து, சின்னப்பிள்ளை பேசிக்கொண்டார்.

மரக்கறி வாங்குவதற்கு கடைக்குச் செல்லத்தேவையில்லை. காலடியிலும்,

## பாலும் கீரைகளும் போய், காய்ந்த மரக்கறியை உண்ணும் சமூகமாக மாறும் படுவான்கரை

குடத்தடியிலும், சுற்றுவேலிகளிலும் கொடிகொடியாய் படர்ந்திருக்கும். இலையும், காயும், பூவும் கறிக்கு உதவும். இதனால்தான் கறிக்குப் பஞ்சமில்லை. இப்பெல்லாம், வேலிகளும், மதில்களும் அபிவிருத்தி காண்கின்றதே தவிர, வீட்டுத்தோட்டங்கள் குறைவடைந்தே செல்கின்றன. பணம் கொடுத்து வாங்காது, இயற்கையாகவே கிடைக்கும் இலைவகை உணவுகளை நகர்புற மக்களுக்கு கொடுத்துவிட்டு, கிருமிநாசினி விசிறிய, சந்தையில் காய்ந்துகிடக்கின்ற உணவுகளை உண்கின்ற தியாகவாதிகளே படுவான்கரைப்பகுதியில் தற்போது உள்ளனர்.


படுவான்கரைப்பகுதி என்றாலே, பசுமையான வயல்வெளிகளும், பசுமாடுகளுமே காட்சிதரும். பசுமைக்காட்சிகளே பலரின் பசியையும் இல்லாமலாக்கிவிடும். வேளாண்மையும், மாடுகளும் சொரியும் பாலினால் மகிழ்ச்சி காண்பர்கள் படுவான்கரை மக்கள். மகிழ்ச்சியின் உச்சம், எச்சமாகவும் அரிசிக்கடைகள் இல்லை. சோற்றுடன் தயிர் உண்ணாத குடும்பங்களும் இல்லை. இந்நிலைமாறி, இடர்ந்துவிழும் இடங்கள் தோறும் அரிசிக்கடைகளும்,

## நாவுக்கு சுவை ஊட்டி ‘பிள்ளைகளுக்கு கொள்ளி வைக்கும்‘ சமூகமாக படுவான்கரை மாறிவிடக்கூடாது.

பால்சேகரிப்பு நிலையங்களும் அமையப் பெற்றுள்ளமையினால், உள்ளூரிலே கிடைக்கும் நெற்களை விற்றும், பாலினை சேகரிப்பு நிலையங்களில் கொடுத்துவிட்டு



பணத்துடனே செல்லும் காலங்களாக



மாறிவிட்டதனால். தயிர், ஆடை உண்பதுவும், பால்குடிப்பதுவும் குறைந்துவிட்டன.


பல்வேறு போசணைக்கூறுகளை வழங்குகின்ற பசுமையான இலைவகைகளையும்,

பால் போன்ற உணவுகளையும் உண்பதிலிருந்து தவிர்த்ததினால், போசணைக் குறைபாடுடையவர்களாக படுவான்கரைப்பிரதேச சிறுவர்கள் சிலர் இருக்கின்றனர்.

போசணைக் குறைப்பாட்டினை தவிர்ப்பதற்காக தொண்டு நிறுவனங்களும், அரச நிறுவனங்களும் இணைந்து சில செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகின்றனர். கையினாலே நெல்குற்றி உணவு உண்டவர்களாவும், வளைந்து நெளிந்து வேளாண்மை வெட்டுவர்களாவும், பாரம்துாக்குவதில் வீரர்களாகவும் மிளிருவதற்கு உண்ட உணவிலிருந்த நிறைவான சத்தும் காரணமேயாகும். நோய்களை எதிர்க்கும் சக்திகளும் உடம்பிலே நிறைந்திருந்தமையினால், இலகுவில் நோய்தொற்றும் ஏற்படவில்லை என்றாள் சின்னப்பிள்ளை.

கற்பதற்கும், ஞாபகசக்தியியை கூட்டிக்கொள்வதற்கும், களைப்பின்றி வேலை செய்வதற்கும், சுறுசுறுப்பாய் இயங்குவதற்கும் இயற்கை உணவுகளும், உடனடியாக கிடைக்கும் உணவுகளுமே தீர்வாகும். வயல்தோறும் திராய்களும்,

பொன்னாங்கண்ணிகள் போன்ற உணவுகளை பிடிங்கி உண்பது குறைந்தமையும், சோளன், குரக்கன், இறுங்கு, கௌப்பி, உழுந்து, எள்ளு போன்றவற்றைக் கொண்டு பிட்டும், ஏனைய முறையிலான உணவு வகைகளை உண்டமையெல்லாம், கைவிட ஆரம்பித்தமையினால், பாடசாலைகளில்



போசாக்குறைப்பாடுடைய மாணவர்கள் பலரும் இருக்கின்றனர். இதனால் விளையாட்டுச் செயற்பாடுகளிலும், ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முழுமையாக ஈடுகொடுக்க முடியாது, சோர்ந்து செல்கின்றவர்களாவே காணப்படுகின்றனர்.

படுவான் பாலகன்

அருகில் இருப்பதனாலும், இலகுவில் கிடைப்பதனாலும், தினந்தோறும் காண்பதினாலும் அப்பொருளின் மகிமையும், அதனது செல்வாக்கும் சூழ்ந்து இருப்பவர்களுக்கு தெரிவதில்லை. தூரத்தில் இருப்பவர்களே அதனது மகிமையையும், செல்வாக்கினையும் அறிந்து கொள்கின்றனர். இதனால் அதற்கான முக்கியத்துவத்தினை அளிப்பதுடன், தேடிச்செல்கின்றனர் என்று தனது மனதில்பட்டதையெல்லாம் கவிதா கொட்டித்தீர்த்தாள்.

உற்பத்தி செய்யப்படும் உணவுவகைளை நாம் உண்ண வேண்டும். நாம் உண்டதன் பின் எஞ்சியுள்ள மீதியை பிறருக்கு கொடுக்க வேண்டும். ஆனால் தாம் பயன்படுத்தாமல், எல்லாவற்றையுமே பிறருக்கு கொடுத்துவிடுகின்ற நிலை இல்லாமல் ஆக்கப்பட வேண்டும். இதனை படுவான்கரை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

முறையான உணவுப் பழக்கவழக்களை கடைப்பிடிக்க வேண்டும். பிள்ளைகளின் உடலாரோக்கியத்தில் அதிக கவனத்தினை செலுத்த வேண்டும். இயற்கையான உணவிலே சுவை அதிகமிருக்கின்ற நிலையில், செயற்கை சுவையூட்டிகளை இட்டு, நாவிற்கு சுவையை கூட்டி, பிள்ளைகளுக்கு கொள்ளி வைக்கும் சமூகமாக மாறிவிடக்கூடாதென்பது கவிதாவின் மனக்கவலை. இவ்வாறு பேசிவிட்டு இருவரும் அவ்விடத்திலிருந்து நகர்ந்தனர்

# அம்பாறை மாவட்டத் தமிழர்கள் : (ஓர் அரசியல் வெட்டுமுகம்)

## பகுதி 15

அம்பாறை மக்களை மீண்டு கைவிட்ட கூட்டணி தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரும் முன்னெடுப்புக்களை இப்பத்தி எழுத்தாளர் கொழும்பில் ஆரம்பித்ததையும் இம்முயற்சிக்கு அப்போது பாராளுமன்ற உறுப்பினர் அல்லாத இரா.சம்மந்தன் அவர்கள் (1989ம் ஆண்டு நடைபெற்ற விகிதாசார முறையிலான முதற் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் இரா. சம்மந்தன் அவர்கள் தமிழ் விடுதலை கூட்டணி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் இணைந்து தமிழர் விடுதலை கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தில் போட்டியிட்ட பட்டியலின் தலைமை வேட்பாளராக போட்டியிட்டிருந்தார். இத்தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து தமிழர் விடுதலை


யோசப் பரராஜசிங்கம்

கூட்டணியில் எவரும் தெரிவாகவில்லை) பச்சைக்கொடி காட்டியதையும் அறிந்த மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் அவர்கள், மட்டக்களப்பு – அம்பாறை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை கூட்டத்தை மட்டக்களப்பில் கூட்டி, "தமிழர் விடுதலைக்கூட்டணி ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டு சேரக் கூடாது. தனித்தே செயற்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை எடுப்பித்து அத் தீர்மானத்தை தமிழர் விடுதலை கூட்டணியின் தலைமைப் பீடத்திற்கு அனுப்பி, இப்பத்தி எழுத்தாளரின் ஒற்றுமை முயற்சிக்கு தடை போட்டார். இதனால் இவ்வொற்றுமை முயற்சி தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை. தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடுவது தனது தனிப்பட்ட அரசியல் நலனையும் அதன் மூலம் தமிழர் விடுதலை கூட்டணியின் கட்சி நலனையும் பாதிக்கும் என யோசப் பரராஜசிங்கம் கருதினார். ஏனெனில் 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் கட்சிகள் இணைந்து போட்டியிட்ட உதய சூரியன் பட்டியலின் தலைமை வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் அ.அமிர்தலிங்கமும் யோசப் பரராஜசிங்கமும் கூட்டணிச்சார்பில் போட்டியிட்டிருந்த போதிலும் விருப்பு வாக்கின் அடிப்படையில் இவர்கள் இருவரும் தெரிவாகாமல் ரெலோ சார்பில் நிறுத்தப்பெற்ற ஜனாவும், ஈ.பி. ஆர்.எல்.எவ் சார்பில் நிறுத்தப்பெற்றிருந்த பிரின்ஸ் காசிநாதர் மற்றும் சாம் தம்பிமுத்து ஆகியோருமே தெரிவாகியிருந்தனர். இந்த அனுபவம் யோசப் பரராஜசிங்கம் அவர்களை பயங்காட்டியிருந்தது.

1994 பாராளுமன்ற தேர்தலும், அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கமும்.

தமிழ் மக்களுக்கோர் ஐக்கியப்பட்ட அரசியல் தலைமையை வழங்குவதற்று முன்வருமாறு தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளிடமும், 1989இலிருந்து 1994 வரை அரசியலில் இருந்த அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளிடமும் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னரே அம்பாறை மாவட்ட தமிழர்கள் மகாசங்கம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அதுமாத்திரமன்றி எதிர்வரும் பொதுத்தேர்தலில் (16.08.1994ல் நடைபெற்ற) அம்பாறை மாவட்டத்திற்கான வேட்பாளர் தெரிவில் அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கம் கலந்தாலோசனை செய்து தீர்மானங்களை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டிருந்தது. இவ்வேண்டுகோள் வீரகேசரி 11.05.1994 இதழில் வெளியிடப்பட்டிருந்தது. கொழும்பு சென்று, தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களிடம் அம்பாறை மாவட்டத் தமிழர்கள் மகாசங்க செயலாளர் திரு.ரி.இராமக்கிருஸ்னன் இப்பத்தி எழுத்தாளர் சகிதம் நேரில் எடுத்துச் சொல்லியும் இருந்தார்.

ஆனால் எதிர்பாராத வேளையில் இலங்கையின் 9வது பாராளுமன்றம் 1994.06.24ம் திகதி நள்ளிரவுடன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவினால் கலைக்கப்பட்ட பின்னர் ஒற்றுமை குறித்து எவ்வித காத்திரமான நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், சகல தமிழ் அரசியல் கட்சிகளும் தனித்தனியே போட்டியிடுவதற்கான முனைப்புகளில் ஈடுபடத் தொடங்கின.

அம்பாறை மாவட்டத் தமிழர்களை பொறுத்தவரை அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் வடகிழக்கின் ஏனைய மாவட்டத் தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை விட வித்தியாசமானவை. விசேட தன்மை வாய்ந்தமை. அவர்கள் வாழும் சூழ்நிலையில் கையாள வேண்டிய அரசியல் அணுகு முறைகளும் வித்தியாசமானவைகளாக இருக்க வேண்டியிருந்தது.
அம்பாறை மாவட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தனியே போட்டியிடுவது அம்பாறை மாவட்ட தமிழர்களின் அரசியல் எதிர்காலத்தை பாதிக்கும். ஒற்றுமை அணியாக அல்லாமல் தமிழ் கட்சிகள் தனிதனியே அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்டால் தமிழ் மக்களின் வாக்குகள் நாலா பக்கமும் சிதறுண்டு தமிழ் மக்களுக்கு இம்மாவட்டத்தில் கிடைக்க கூடிய ஒரேயொரு பாராளுமன்ற பிரதிநிதித்துவமும் பறிபோய்விடக்கூடிய ஆபத்து எதிர்நோக்கியிருந்தது. இந்நிலையில் அம்பாறை மாவட்டத் தமிழர்களின் சமூக பொருளாதார அரசியல் மேம்பாட்டிற்காக பல வருடங்களாக பாடுபட்டு வரும் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் இக்கட்டானவொரு வேளையில் அம்பாறை மாவட்டத் தமிழர்களை அரசியல் ரீதியாக வழிநடத்தும் பொறுப்பை ஏற்பதற்கு முன்வந்தது.

இதன் முதற்கட்டமாக 02.07.1994 அன்று கல்முனை இராமக்கிருஸ்ண வித்தியாலய மண்டபத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் அவசர பொதுக்கூட்டம் ஒன்றினை கூட்டியது. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் சங்கத்தின், இப்பத்தி எழுத்தாளர் தலைமையிலான நடவடிக்கை குழு கொழும்பு சென்று சகல அரசியல் கட்சி தலைமை பீடங்களையும் சந்தித்து அம்பாறை மாவட்டத்தில் ஒரே அணியாக போட்டியிடுமாறும், இது சாத்தியமில்லாதவிடத்து அம்பாறை மாவட்ட தமிழர்களின் சார்பில் அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் நிறுத்தவுள்ள சுயேற்சை குழுவிற்கு வழிவிடுமாறும் வேண்டியது. ஏனைய கட்சிகள் உடன்பட்ட போதிலும் இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி உடன்படாமல் யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த மாவை சேனாதிராசாவை தலைமை வேட்பாளராக நிறுத்திப் போட்டியிட்டது. அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஒருவரை தலைமை வேட்பாளராக நிறுத்தும்படி அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தினால்



தம்பியப்பா கோபாலகிருஸ்ணன்

விடுக்கப்பட்ட கோரிக்கையும் தமிழர் விடுதலை கூட்டணியால் நிராகரிக்கப்பட்டது. இந்த நிலையில்

01. அம்பாறை மாவட்ட தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதி அம்பாறை மாவட்டத்தை சேர்ந்தவராக இருக்கவும்,
02. அம்பாறை மாவட்ட தமிழர்களை அரசியல் ரீதியாக வழிநடாத்த அம் மண்ணில் தகுதியானவர்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து காட்டவும் அம்பாறை மாவட்ட மகாசங்கம் சுயேச்சை குழுவை 1994ல் தேர்தலில் போட்டிக்கு நிறுத்தியது. இச்சுயேச்சை குழுவுக்கும் இப்பத்தி எழுத்தாளரே தலைமை தாங்கினார்.

ரெலோ, புளொட், ஈரோஸ் இணைந்த அணியும் வெளிச்ச வீட்டு சின்னத்தில் போட்டியிட்டது. தமிழர் விடுதலை கூட்டணி அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடாது இருந்திருக்குமானால் ரெலோ, புளொட், ஈரோஸ் இணைந்த அணி போட்டியிடாமல் சுயேச்சை குழுவிற்கு வழிவிட்டிருக்கக் கூடும். தேர்தலின் முடிவு அம்பாறை மாவட்ட தமிழர்கள் தங்களுக்கென இருந்த ஒரேயொரு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பறிகொடுத்து அரசியல் அனாதையானார்கள். அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கம் காட்டிய சரியான அரசியல் பாதையை அறிவுபூர்வமாக உணராது வாக்களித்தமை தமிழர் விடுதலை கூட்டணிக்கு அளித்த சுமார் 24000 வாக்குகளையும் பாவித்து அக்கட்சி ஓர் தேசிய பட்டியல் ஆசனத்தை பெற்றுக்கொள்ளவும் அந்த ஆசனத்தை அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த ஒருவருக்குத்தானும் பின்னர் வழங்காமல் அனைத்தையும் கூட கொழும்பு மாவட்டத்தை சேர்ந்த நீலன் திருச்செல்வத்துக்கு வழங்கப்படவே இறுதியில் வழிவகுத்தது. இத்தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஜனநாயக சூழல் இல்லை என்று காரணம் கூறி தமிழர் விடுதலை கூட்டணி போட்டியிடவில்லை. இதனால் யாழ் மாவட்டத்தை சேர்ந்த தமிழர் விடுதலை கூட்டணி தலைவர்களுக்கு தேர்தலில் போட்டியிடும் ஆசையை தீர்த்துக்கொள்ள யாழ். மாவட்டத்துக்கு வெளியே இடம் தேவைப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் (திகாமடுல்ல தேர்தல் மாவட்டம்) மாவை சேனாதிராசாவும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் எம். சிவசிதம்பரம் மற்றும் வி. ஆனந்தசங்கரி ஆகியோரும் போட்டியிட்டனர். இது தமிழர் விடுதலைக் கூட்டணியை பிடித்திருந்த யாழ் மேலாதிக்க சிந்தனையின் கடைந்தெடுத்த வெளிப்பாடாகும். 1989ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணியின் சார்பில் உதயசூரியன் பட்டியலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட்ட மட்டக்களப்பு மாவட்டம் கல்லாறு கிராமத்தை சேர்ந்தவரும் கல்முனையில் வசித்தவருமான சட்டத்தரணி கோபன் கந்தையா அவர்களுக்கு தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டது.

அதேபோல் விடுதலை கூட்டணியை சேர்ந்தவரும் வவுனியா நகரசபை தலைவராகவும் விளங்கிய கேதீஸ்வரனுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் நியமனம் மறுக்கப்பட்டது. சொந்த மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு இவ்வாறு நியமனம் தமிழர் விடுதலை கூட்டணியால் மறுக்கப்பட்டதுக்கு காரணம் அம்பாறை மாவட்டத்தில் மாவை சேனாதிராஜா போட்டியிடுவதற்கும், வன்னி மாவட்டத்தில் மு.சிவசிதம்பரம், வி.ஆனந்தசங்கரி ஆகியோர் போட்டியிட சந்தர்ப்பம் வழங்குவதற்காகவே.

அம்பாறை மாவட்ட தமிழர்களின் நலன்களினை விட தனிநபரான மாவை சேனாதிராஜாவின் நலனும் வன்னி மக்களின் நலனை விட தனிநபர்களான மு.சிவசிதம்பரம், வி.ஆனந்தசங்கரி ஆகியோரின் நலன்களுமே தமிழர் விடுதலை கூட்டணிக்கு பிரதானமாக இருந்தது. மேலும் 1994ம் ஆண்டு பொது தேர்தலில் தங்களுக்கென்றிருந்த ஒரேயொரு பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தையும் பறிகொடுத்துவிட்டு சுதந்திர இலங்கையின் 1947-1977 வரை 30 ஆண்டுகள் அரசியல் அநாதைகளாக இருந்து, மீண்டும் அரசியல் அநாதைகளாகிவிட்ட அம்பாறை மாவட்ட தமிழர்களின் மேல் தமிழர் விடுதலை கூட்டணிக்கு உண்மையான, உள ரீதியான அக்கறை இருந்திருக்குமானால் 1994ம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணிக்கு கிடைத்த தேசிய பட்டியல் ஆசனத்தை அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த தமிழர் ஒருவருக்கு வழங்கியிருத்தலே நியாயமானது.

ஆனால் நியாயத்துக்கு மாறாக கொழும்பை சேர்ந்த நீலன் திருச்செல்வத்துக்கே இவ் ஆசனத்தை வழங்கியது. தனது சொந்த மக்களுக்கே நியாயம் வழங்காத தமிழர் யாழ் மேட்டுக்குடி அரசியல் தலைமை சிங்கள அரசாங்கத்திடம் நியாயம் கேட்பதற்கு என்ன தார்மீகத்தைக் கொண்டிருக்கிறது?

-- தொடரும் --



# பாணமை அரசனின் இராஜத்துரோகம்

## பால்டியசின் குறிப்புகளிலிருந்து 02

போனவாரம் போரைதீவு, பழுகாமம், சம்மாந்துறை ஆகிய மூன்று அரசுகளையும், அவற்றுக்கிடையே இடம்பெற்ற சகோதரச் சண்டைகளையும் பார்த்தோம். நாம் பால்டியசை மேலும் ஊன்றிப் படிக்கும் போது சுவையான பல தகவல்கள் கிடைக்கின்றன. 1600ஆம் ஆண்டு காலத்தில் கிழக்கில் இருந்த அரசுகளாக அவர் விவரிப்பவை ஐந்து. கொட்டியாரம், மட்டக்களப்பு, பழுகாமம், போரதீவு மற்றும் பாணமை. இவற்றில் பாணமையைப் பற்றியே மிக விரிவாக எழுதியிருக்கிறார் அவர்.



1592இல் கண்டியின் மன்னனாக அரசுக்கட்டில் ஏறினான் விமலதர்ம சூரியன். விமலதர்மனுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே வளர்ந்த பகையின் பலனாக 1594இல் ஒரு பெரும்போர் இடம்பெற்றது. அதன்போது, கண்டி அரசின் பக்கத்தில் இணைந்திருந்த படையின் விவரங்களை முழுமையாக பதிவு செய்திருக்கிறார் பால்டியஸ். மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டு படியுங்கள்.

யாழ்ப்பாண அரசிலிருந்து 19,900 வீரர்கள், 10 போர்யானைகள், 40 கோட்டைகள், 3000 எருதுகள், 2000 முன்னணிவீரர்கள் என்பன கண்டி அரசுக்கு உதவியாக வழங்கப்பட்டிருந்தன. 7,890 வீரர்கள், 600 முன்னணிவீரர்கள், 1000 எருதுகள், 30 போர் யானைகள், 25 சாதாரண யானைகள் என்பன கொட்டியார மன்னனின் உதவி. 5,890 வீரர்கள், 1,000 முன்னணிவீரர்கள், 3 போர்யானைகள், 25 சாதாரண யானைகள் என்பன பழுகாம மன்னனின் உதவி. மட்டக்களப்பு மன்னன் 9,890 வீரர்கள், 2000 முன்னணிவீரர்கள், 2,500 எருதுகள், 4 போர்யானைகள், 30 சாதாரண யானைகள் என்பவற்றை வழங்கியிருந்தான். பாணமை மன்னன் இன்னும் சில இளவரசர்களுடன் இணைந்து, 59,896 வீரர்கள், 2,140 முன்னணிவீரர்கள், 630 யானைகள், 16,000 எருதுகள். ஏனைய சிங்கள மன்னர்களும் இணைந்து கண்டி அரசின் படை, மொத்தம் 1,51,896 படைவீரர்களையும், 75 போர்யானைகளையும், 1000 சாதாரண யானைகளையும், 29,500 எருதுகளையும் கொண்டிருந்தது.

எனினும் இப்போரில் மன்னாரிலிருந்து பெரும்படையுடன் வந்த போர்த்துக்கேயரே வெல்லும்படி ஆனது. விமலதர்மன் பின்வாங்கி வெல்லசையில் மறைந்து வாழ்ந்தான் எனினும் மூன்று மாதங்களில் மீண்டு வந்த விமலதர்மன், போர்த்துக்கேயரைத் தோற்றோடச் செய்து, மீண்டும் கண்டியைக் கைப்பற்றிக் கொண்டான்.

விமலதர்மனுக்குப் பிறகு 1604இல் ஆட்சிக்கு வந்த செனரத் மன்னன், முறையான அரச பரம்பரையில் வந்தவன் அல்ல. அவன் விமலதர்மனுக்கு சகோதரன் முறையானவன் என்றும், பௌத்த பிக்குவாக இருந்தான் என்றும் சொல்லப்படுகிறது. அவன் அரசனாக முடிசூடிய பின், விமலதர்மனின் மனைவியான அரசி தோனா கதரீனாவை மணந்துகொண்டான். அவன் போர்த்துக்கேயருக்கு மேலதிகமாக உள்நாட்டில் எழுந்த கிளர்ச்சிகளையும் பெருமளவு சந்திக்க நேர்ந்தது. செனரத்துக்கு எதிராக கிளர்ச்சி கண்ட முதன்மையான சிற்றரசர்களில் ஒருவன் பாணமை மன்னன். 1612 செப்டம்பரில், பாணமை, கொட்டியாரம் ஆகிய அரசுகளின் மன்னர்கள் கண்டி மன்னனுக்கு எதிராக போர்த்துக்கேயருடன் இணைந்திருக்கிறார்கள் என்ற செய்தி செனரத் மன்னனை சென்றடைகிறது.

செப்டம்பர் 23 திகதியிட்ட அவனது கடிதத்தில் பதினாறு நாட்களுக்குள் கண்டி அவைக்கு சமூகம் தரவேண்டும் என்ற செய்தி இருவருக்கும் அனுப்பப்படுகிறது. அப்போது நோய்வாய்ப்பட்டிருந்த கொட்டியார மன்னன் உடனடியாக தன் மாமனை அனுப்பி திடீர் அழைப்பாணைக்கான காரணம் என்னவென்று அறிந்துகொண்டதுடன், ஒக்டோபர் 9ஆம் திகதி தானே வருகைதந்து, தான் போர்த்துக்கேயருடன் சேரவில்லை என்று ஆதாரங்களுடன் நிரூபித்துச் சென்றான். ஆனால், உண்மையில் போர்த்துக்கேயருடன் இணைந்திருந்த பாணமை மன்னன் கண்டி அவைக்கு சமூகமளிக்கவில்லை.

கண்டி அரசனின் ஆணையின் கீழ் மீகோணை (நீர்கொழும்பு) இளவரசனும் ஊவா இளவரசனும் 1613 ஜனவரி முதலாம் திகதி, 35,000 வீரர்களைக் கொண்ட படையுடன் பாணமை மீது போருக்கு எழுந்தனர்.

பாணமை மக்கள் அந்தப் பெரும்படையை தங்களால் சமாளிக்கமுடியாது என்பதை உணர்ந்துகொண்டார்கள். பாணமைப் பிரதிநிதிகள் சிலர் பரிசுகளுடன் போருக்குத் தலைமைதாங்கிய இரு இளவரசர்களையும் சந்தித்தும் போர்த்துக்கேயர் தொடர்பான பாணமை மன்னனின் எந்தவொரு முடிவிலும் சாதாரண மக்களான தமக்கு எந்தவொரு சம்பந்தமுமில்லை, ஆதரவுமில்லை என்பதை அவர்கள் எடுத்துக்கூறியதை இரு இளவரசர்களும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் அந்தப் படையெடுப்பின் இருமாதச் செலவுக்குச் சமனான 4,57,000 லரினென்கள் பெறுமதியான பணத்தையும் கண்டிக்கான ஆண்டுத் திறையையும் பாணமை மக்கள் கொடுக்கவேண்டி நேர்ந்தது.

பாணமை மன்னன் ஆறேழு நாட்களுக்குள் சரணடைய வேண்டும் என்ற ஆணையுடன் பணயக்கைதிகளாக சிலரையும் அவர்கள் வழங்கவேண்டி ஏற்பட்டது.

பாணமை அரசன் சரணடைந்தான். அரசவையில் அவன் மீதான குற்றப்பத்திரிகை வாசித்துக்காட்டப்பட்டது. "கண்டி இளவரசி ஹந்தான அதகாசியை மணந்த நீ சீதனமாக மட்டக்களப்பு மற்றும் பழுகாமம் அரசுகளையும் பெற்றுக்கொண்டாய். ஆனால் இப்போது கண்டி அரசுக்கே துரோகமிழைத்திருக்கிறாய். ஐயாயிரம் லரினென்களை கையூட்டாகக் கொடுத்து, அரசனைக் கொல்ல ஒரு

மைங்கணான் மகிழறிவன்


முரடனை அனுப்பியிருக்கிறாய். அதைச் செய்து முடித்தால் மேலும் 20,000 லரினென்களும் வேறு பரிசுகளும் தருவதாகச் சொல்லியிருக்கிறாய்" என்ற குற்றப்பத்திரிகையும், ஆதாரமாக அவனே அந்த முரடனுக்கு கைப்பட எழுதிய கடிதமும் அனைவருக்கும் காட்டப்பட்டது.

பாணமை மன்னன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். "நான் செய்தது தவறு தான். என்னை அரசர் மன்னிக்கவேண்டும்" என்று அவன் கோரினான். கூடவே தான் பெருமைக்குரிய அரச வம்சத்தில் வந்தவன் என்பதையும், தன் முன்னோர்கள் கண்டிக்குச் செய்த உதவிகளை நினைத்துப்பார்த்து, தான் மன்னிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்தான்.

போர்த்துக்கேயருடனான தொடர்பில் அவனுக்கு உதவிய வேறு 62 பேரும் சிறைகளுக்கு அனுப்பப்பட்டு பின்பு மரணதண்டனை விதிக்கப்பட்டனர். அரசவையின் முடிவின் பேரில், மெத்தம கொனுரையில் இருந்த கோட்டையில் அவன் சிறைவைக்கப்பட்டான். அங்கிருந்து, பாணமை மன்னன் தன் உயிரைக் காப்பாற்றும்படி கோரி கண்டி அரசனுக்கு எழுதிய உருக்கமான கடிதமொன்றை பால்டியஸ் விவரிக்கிறார்.

மார்ச் இருபதாம் திகதி, கண்டி மன்னனால் நியமிக்கப்பட்ட 50 பிரபுக்களைக் கொண்ட அவையில் அவன் மீதான குற்றச்சாட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பாணமை மன்னன் செய்தது மிகப்பெரும் இராஜத்துரோகம் என முடிவெடுத்த அவர்கள், அவனுக்கு மரண தண்டனை விதித்தனர். மார்ச் 24ஆம் திகதி காலையில் அதை நிறைவேற்றுவதற்கான ஒப்பம் செனரத்தால்



வைக்கப்பட்டது.

அரசனுக்குரிய வெள்ளை நிறத்தால் அலங்கரிக்கப்பட்டு கொலைமேடை நிறுவப்பட்டிருந்தது. அருகே கதிரையொன்றில் அமரவைக்கப்பட்டான் பாணமை மன்னன். ஆரம்பத்தில் ஆழ்ந்த அமைதியுடன் விளங்கிய அவன், அவனுக்குரிய தீர்ப்பு வாசிக்கப்பட்டதும், சூழ்த்திருந்த மக்களைப் பார்த்து அரற்றத் தொடங்கினான்.

தான் உயிர் தப்புவதற்கு ஒரேயொரு வாய்ப்புக் கூட இல்லையா என்று அவன் விம்மி அழுதுகொண்டிருந்தான். அவனோடு கண்ணீர் வழிய நின்றுகொண்டிருந்த அவனது பள்ளியறைக் காவலர்களிடம் அவனது ஆடையை அகற்றுமாறு ஆணை வழங்கப்பட்டது. அவன் மரபுப்படி அவர்களுக்கு நகைகளை அன்பளிப்பாக வழங்கினான்.

பின்பு தாம்பூலம் தரித்துக்கொண்ட மன்னன் பார்வையாளர்களைப் பார்த்து "அரச குலத்தில் பிறந்த எனக்கு ஈமக்கிரியைகள் அரசமுறைப்படி நடக்கவேண்டும் என்பதே என் இறுதி ஆசை" என்று சொன்னான். பின் கண்கள் கட்டப்பட்ட நிலையில் தலையறுத்து அவனுக்கான மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அவனது இறுதி ஆசைப்படி, அரச மரியாதையுடன் அவனது இறுதிக்கிரியைகள் இடம்பெற்றன.

ஏப்ரல் 8ஆம் திகதி, செனரத்தின் மாமன் சமரபாகு, பாணமையின் புதிய அரசனாக அங்கு ஐம்பதாயிரம் வீரர்களுடன் சென்றான். அவனை ஏற்காத மக்களால் கலகம் வெடித்தது. 125 கிளர்ச்சியாளர்களைக் கொன்றே அவன் ஆட்சியில் அமரமுடிந்தது.

கொஞ்சகாலத்தின் பின் சூழல் அமைதியான பின், தன்னோடு வந்த படையையும் உரிய திறையையும் கண்டிக்கு அனுப்பினான். அதற்குப் பின்னும் போர்த்துக்கேயர் பாணமை அரசைத் தம் வசம் கொணர முயன்றுகொண்டிருந்தனர்.

அவர்கள் அனுப்பிய பரிசுகளும் தூதும் எவ்விதப் பதிலும் அளிக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்பட்டன.

பாணமை மன்னனின் இந்த சிரச்சேதம், நமக்கு இன்னும் பல வரலாற்றின் கதவுகளைத் திறந்துவிடுகின்றது. அவற்றை விரிவாக அடுத்தவாரம் பார்ப்போமா?



# பட்டறிவு

## சிங்கள சமூக அமைப்பில் கன்னிப் பரிசோதனை சடங்கு (பகுதி -2)

சிங்கள சமூகத்தில் நிலவும் கன்னித்தன்மை பரிசோதனை முறையானது சிங்கள சாதியமைப்பை மறுதலித்துவிட்டு பார்க்க முடியாது. கன்னித்தன்மை பரிசோதனையில் இன்றும் இலங்கையில் கொவிகம (சிங்கள சாதியப் படிநிலையில் முதலாவது சாதியாக இருத்தப்பட்டுள்ள இந்த சாதி தமிழ்ச்சமூகத்தில் வெள்ளாருக்கு சமமான விவசாயத்தை சார்ந்த சாதி) சாதியிலும், அதன் கிளைச்சாதிகளான ரதல, கொவி, பட்டி போன்ற சாதிகளே அக்கறை காட்டி வருவதாக சிங்களச் சாதியம் பற்றி



ஆய்வு செய்பவர்கள் குறிப்பிடுகின்றனர். அதிலும் குறிப்பாக உயர் மத்தியதர வர்க்கத்தினரிடம் அதிகளவு இருப்பதாக கூறப்படுகிறது. சம்பிரதாயபூர்வமாக கோலாகலமான முறையில் திருமணத்தை நடத்த தகுதியுள்ள சிங்கள பௌத்தர் உயர் மத்திய தரவர்க்த்தினரிடமே திருமணச்சடங்குகளில் ஒன்றாக இந்த கன்னித்தன்மை பரிசோதனை நடக்கிறது.

இந்த கன்னித்தன்மை பரிசோதனையை மேற்கொள்வதும் சிங்கள சாதியமைப்பில் பிற்படுத்தப்பட்ட சாதியான ஹேன எனும் சாதியைச் சேர்ந்தவர்களே. இச்சாதியினர் தமிழ்ச் சமூகத்தில் வண்ணார் சாதிக்கு ஒப்பான சலவைத் தொழிலை மேற்கொள்ளும் சாதியாக இருத்தப்பட்டுள்ளது. இந்த சாதியினர் எண்ணிக்கையில் சிறியதாக இருந்தாலும் நாட்டில் பல பாகங்களில் பரந்து சுருங்கி வாழும் சாதியினர். இவர்களுக்கு அரச மற்றும் நிலப்பிரபுத்துவ பரம்பரையினருக்கு மாத்திரமே உடுதுணி துவைப்பது சாதித் தொழிலாக வைக்கப்பட்டது. ஆண் பெண் என இருபாலாரும் குறிப்பிட்ட உயர் சாதியினரின் வீடுகளுக்குச் சென்று துணிகளைச் சேகரித்து துணிகளில் கட்டி தலையில் சுமந்துகொண்டு சென்று துவைப்பர். ஏனைய தாழ்த்தப்பட்ட சாதியினரின் உடுதுணிகளை இவர்கள் துவைக்க மாட்டர்கள். அதற்குக் கீழ் உள்ள சாதியினரின் உடைகளைத் துவைக்க "பலி" எனும் சாதியினரே அதனை செய்வரென பேராசிரியர் ருல்ப் பீரிஸ் குறிப்பிடுவார்.

இந்த உடுதுணி துவைப்பதை விடவும் உயர் சாதியினருக்கு இவர்களின் தேவை வேறு வழிகளில் இருந்தன. பிறப்பு, பூப்படைதல், திருமணம், மரணம் போன்ற நிகழ்ச்சிகளிலும் ஹேன மாமாவின் அல்லது "றெதி நெந்தா" (துணிமாமி) ஆகியோரது உதவி தேவைப்படுகிறது. இவர்களின் இந்தச் சேவை பற்றி சமூகத்தில் பொதுவாக கேலி செய்யும் போக்கும் நிலவுவதாக கொள்ளப்படுகிறது.

திருமண முதலிரவின் போது திருமணக் கட்டிலில் விரிப்பதற்காக வெள்ளை விரிப்பொன்று மணமக்களுக்கு வழங்கப்படும். முதல் பாலுறவின் போது மணப்பெண்ணிடமிருந்து சிறிதளவு இரத்தம் கசிந்து இந்த வெள்ளை விரிப்பில் காணப்படுவதன் மூலம் அவள் கன்னி என நிரூபிக்க அதுவே மிகச் சரியான சான்றெென கருதப்படும்.

எனது சிங்கள நண்பி ஒருவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் தன்னோடு பயின்றவரை திருமணம் முடித்தபோது, கன்னித்தன்மை பரிசோதனை முறையிலிருந்து தப்ப செயற்கையாகவே இரத்தக்கறையை வெள்ளைத் துணியில் படவைத்தார்கள். இன்று ஒரு சிங்களச் சூழலில் பெண்ணிய எழுத்தாளராக இருக்கும் இவர், சம்பிரதாயங்கள் எப்படி விடயமறிந்தவர்களையும் இழுத்துவைத்துக் கொள்கிறது என்பதை அடிக்கடி குறிப்பிடுவார். இவ்வாறு மணமகன் கன்னித்தன்மையை எதிர்பார்க்கிறானோ இல்லையோ, தமது மகள் கன்னித்தன்மையைக் கொண்டவள் என்று பெண்வீட்டாரும், தனது மகன் கன்னித்தன்மையுள்ள பெண்ணைத்தான் திருமணமுடித்தார் என்பதை மாப்பிள்ளை வீட்டாரும் பெருமிதம்கொள்ளும் சடங்காகவும் இது இருக்கிறது. இந்தச் சடங்கை செய்யாவிட்டால் சமூகத்தில் கௌரவத்திற்கு இழுக்கு நேரிடும் என்று பயம்கொள்வதையும் காணமுடிகிறது.

கன்னிப்பரிசோதனை சடங்கு

கன்னிப்பரிசோதனை மேற்கொள்ளும் சடங்கை "இச திய மங்கல்ய" என்று அழைப்பார்கள். ஆனால் அந்த சடங்கின் உண்மையான பொருள் "தலையில் நீர் வார்த்தல்" என்று கூறலாம். சில பிரதேசங்களில் "இச திய பலன்ட யாம" என்றும் கூறுவார்கள். அதாவது "தலையில் நீர் பார்த்தல்" என்று தமிழில் அதனை மொழியாக்கம் செய்யலாம். சம்பிரதாய பூர்வமான குடும்பங்களில் வெள்ளைத்துணியை பரிசோதித்துப் பார்க்கும் நிகழ்ச்சி திருமணத்திற்கு அடுத்த நாள் நடக்கும். "றெதி நெந்தா" சென்று அந்த விரிப்பை பார்வையிடுவார் அல்லது மணமகனின் தாயாரோ, மூத்த பெண்ணொருவரோ கூட அதனைச் சென்று பார்வையிடமுடியும். இறுதியும் உறுதியுமான முடிவைத் தெரிவிக்க விபரங்களுடன் முடிவு கூறுவதற்காக, திருமணத் தம்பதியரின் உறவினப் பெண்களுடன் "றெதி நெந்தா" அழைத்துச் செல்லப்படுவார். சில சந்தர்ப்பங்களில் இரண்டாம் பயணம் எனப்படும் "தெவனி கமன" வின் போது (அதாவது தேனிலவு கழிப்பதை முதல் நாளும் வெள்ளைத்துணி பார்ப்பது மறுநாளைக்கு மாற்றப்படும்.) அந்த வெள்ளைத்துணியை இதற்குரிய சம்பிரதாயங்கள் பின்வருமாறு மெற்கொள்ளப்படும்.

1. மணமகள் இரண்டாம் பயணத்திற்கு சிவப்பு ஆடையால் அலங்கரிக்கப்படுவாள்.

2. மணமகனின் தாயார் சிவப்பு மலர்ச் செண்டு கொடுத்து மணமகளை வரவேற்பார்.

3. மணமகனின் குடும்பத்தினர், மணப் பெண்ணின் பெற்றோருக்கு சிவப்பு பூக்கொத்தை அனுப்பி வைப்பார்.

4. மணப்பெண், மணமகள் வீட்டுக்கு வரும்போது றபான் அடித்து பட்டாசு கொளுத்தப்படும்.

என்.சரவணன்



5. மணமகனின் தயார், விசேட பரிசுகளைக் கொடுத்து மணப்பெண்ணை வரவேற்பாள்.

"றபான்' தாளம் இசைக்கப்படாவிட்டால் அந்தப் பெண் "கற்பற்றவள்' என்கிற செய்தியை ஊர் வாசிகளும் அங்கு கூடியிருப்பவர்களும் அறிந்துகொள்வார்கள்.

குற்பிட்ட அந்த வெள்ளைத்துணியை "கிரிகடஹெலய" என்று அழைப்பார்கள். அந்த வெள்ளை விரிப்பில் இரத்தக்கறை காணப்படாவிடில், அதாவது மணப்பெண் பரீட்சையில் தோல்வியடைந்தவளென்றால், அந்த அப்பாவிப்பெண் பகிரங்கமாகவே அவமதிப்புக்குள்ளாவாள். அத்தகைய தருணத்தில் மணப்பெண் நடாத்தப்படும் விதமானது இரண்டாம் பயணத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்திலும், குறிப்பிட்ட குடும்பங்களினதும் பிரதேசங்களதும் சம்பிரதாயங்களைப் பொறுத்தும் வேறுபடும். இரண்டாம் பயணத்தின்போது "பரீட்சையில் தேறாத" மணப்பெண் தொடர்பாக கடைபிடிக்கப்படும் சம்பிரதாயங்கள் சில..

1. இரண்டாம் பயணத்திற்கு ஆடம்பரமற்ற வெள்ளைச் சேலை உடுத்தும்படி மணப்பெண்ணை வற்புறுத்துதல்.

2. மணமகனின் தாயார் வெள்ளை மலர்களுடன் மணமகளை எதிர்கொள்வாள்.

3. வரவேற்காமல் மணமகனின் தந்தை அல்லது யாரும் ஒரு ஆணைக்கொண்டு மணமகளை வரவேற்பது.

4. சுவரில் மாட்டியிருக்கும் படங்களை மறுபக்கமாகத் திருப்பித் தொங்கவிடல்.

5. மணமகனின் உறவினர் மணப்பெண்ணின் உறவினர்களை உபசரிக்க மாட்டர்கள். அவர்களை அவமதிக்கும் விதமாக திருமண அலங்கார மேசையைத் தவிர்த்து ஓரமாகப் போடப்பட்டிருக்கும் மேசையில் உணவருந்தும்படி அவர்களுக்குத் தெரிவிப்பது.

6. உபசரிப்பதற்கு முன் கொண்டைப் பலகாரங்களின் கொண்டையை உடைத்து விடுவது.

7. அனைத்து விருந்தினர்களின் முன்நிலையிலும் மணமகனின் தாயார் ஐசிங் சீனியினால் செய்யப்பட்ட வெள்ளை றோசாப்பூவொன்றை கேக்கில் வைப்பாள்.

8. வாழைப்பழத்தை அடியியிலிருந்து தோலுரித்தல்.

9. விருந்தினர்கள் முன்னிலையில் மணமகன் குடும்பத்தார் தமது அதிருப்தியை தெரிவிக்கும் விதமாக சிறு சொற்பொழிவை நடாத்துதல். (இது மிக அரிதாகவே நடக்கும்.)

"துாய்மை"யான மணப்பெண் கிடைக்காததையிட்டு தமது வருத்தத்தைத் தெரிவிக்கும் சொற்பொழிவை ஆற்றிவிட்டு அவர்களை வரவேற்பதும் நிகழும். மணப்பெண் "கன்னி" இல்லை என்று கூறி மீளவும் மணப்பெண்ணின் பெற்றோரிடம் ஒப்டைக்கும் நிகழ்ச்சிகளும் இதன் போது நிகழ்ந்துள்ளன. இந்த சம்பிரதாயங்களை மேற்கொள்ளாத இடங்ளில் கூட முதலிரவின் போது இரத்தம் வெளியேறாவிட்டால் கடந்தகால ஒழுக்கத்தை சந்தேகித்து மனைவியின் மீது வன்மம்கொள்ளும் நிலைமையும் இருந்திருக்கிறது.

இலங்கையில் முஸ்லிம் சமூகத்தில் இவை எப்படி நிலவியது என்பது பற்றி அடுத்த இதழில் பார்ப்போம்...



# மலைகளைப் பேசவிடுங்கள்

## மனிதப் பண்டங்களான மலையகத் தமிழர்கள்

மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை Human Cargo எனும் படைப்பை எழுதியதாக கடிதப்பரிமாற்றங்கள் மூலம் அறியக் கிடைக்கின்றது. எனினும் அத்தகையதொரு படைப்பினை வாசிக்க கிடைக்கவில்லை. ஆனாலும் அவரது அந்த தலைப்பே போதுமானது. அது ஒரு வரி கவிதை. இரண்டு சொற்களிலான கட்டுரை என அதனை வர்ணிக்கலாம்.

மனிதர்களை மனிதர்களாக அன்றி பண்டங்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்வது போன்று இரண்டு நாடுகளுக்கு இடையே பரிமாற்றம் செய்திருக்கிறார்கள். ஒன்று 1800 களில் ஆரம்பித்து 1930 வரையான காலப்பகுதிவரை வெவ்வேறு கால கட்டங்களில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கை நோக்கி ஏற்றி வரப்பட்டிருக்கிறார்கள். அதேபோல 1964



க்குப்பின் 1990 கள் வரை இந்தியாவுக்கு ஏற்றி விடப்பட்டுள்ளார்கள்.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் குறித்த மக்களின் விருப்பமோ, தெரிவோ முக்கியம் பெறவில்லை. எல்லாமே சூழலினால் தீர்மானிக்கப்பட்ட, பலவந்தப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளாகவே நடந்தேறி முடிந்திருக்கின்றன. இதில் இந்தியாவில் இருந்து வருகை தொடர்பான பல்வேறு பதிவுகள் பாடல், நாவல், கவி, கட்டுரை வடிவங்களில் பேசப்பட்டிருப்பதுபோல், இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டதும் கூட அத்தகைய இலக்கிய வடிவங்களுக்குள் அடக்கப்பட்டிருக்கின்றன.

எனினும், இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்டபோது இருந்த ஆவணங்களை விட இந்தியாவுக்கு திருப்பி அனுப்பபட்டபோது சில ஆவணங்கள் அரச உயர் மட்டங்களில் தீர்மானிக்கப்பட்டவையாக உள்ளன. அத்தகைய ஆவணங்களின் தொகுப்பாக அதன் உள்ளடக்கம் தொடர்பான விவரணமாக இந்த வாரம் முதல் மனிதப் பண்டங்களான மலையகத் தமிழர்கள் எனும் தலைப்பில் 'மலைகளைப் பேசவிடுங்கள்' பத்தி தொடர்கிறது.

இந்தியாவில் இருந்து பெருந்தோட்டக் கைத்தொழிலில் கூலித்தொழிலுக்காக அழைத்துவரப்பட்ட தமிழ் மக்கள் உத்தியோகபூர்வமாக இலங்கை இந்திய அரசுகளின் பிரதமர்கள் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் ஊடாக இந்தியாவுக்கு திருப்பி அனுப்பபட்டனர்.

அந்த ஒப்பந்தம் சிறிமா- சாஸ்திரி ஒப்பந்தம் என அழைக்கப்படுகின்றது. 1964.10.30 ம் திகதி கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்ததில் அப்போதைய இந்திய பிரதமரும் இலங்கை பிரதமரும் கையொப்பம் இட்டுள்ளனர். அந்த காலப்பகுதியில் 975,000 (ஒன்பது லட்சத்து எழுபத்தையாயிரம் பேர்) இந்திய வம்சாவளி ஆட்கள் இலங்கையில் வசிப்பவர்களாக அடையாளம் காணப்பட்டனர். அப்போதைய நிலையில் அது இலங்கையின் இரண்டாவது அதிகளவு சனத்தொகை அளவாகும்.

மேற்படி ஒப்பந்தத்தின் கீழ் 525000 பேருக்கு இந்தியாவும் 300000 பேருக்கு இலங்கையும் 7:4 எனும் விகிதத்தில் பங்கிட்டுக்கொண்டனர். எஞ்சிய 150000 பேரைப்பற்றி பின்னர் பரிசீலிக்கப்படும்

மல்லியப்புசந்தி திலகர்

எனவும் தீர்மானிக்கப்பட்டது. இந்த உடன்படிக்கையின் பிரகாரம் 506000 பேர் இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்திருப்பதாக அறிக்கையிடப் பட்டுள்ளது.



மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை பிரஜாவுரிமை வழங்கும் பொருட்டு 1967 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க இந்து – லங்கா ஒப்பந்தம் (நடைமுறைப்படுத்தல்) சட்டம் இயற்றப்பட்டது.

இந்த சட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1964 ஒக்டோபர் 30 ம் திகதி செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை குறித்து 1964 நவம்பர் 10 ம் திகதி காலம் சென்ற பிரதமர் (திருமதி) சிறிமாவோ பண்டாரநாயக்க மேலவையில் விடுத்த அறிக்கை, பல்வேறு உள்ளார்ந்த அர்த்தங்களை ஆங்காங்கே விதைத்துச் செல்வதனை அவதானிக்கலாம்.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் அந்தஸ்து மற்றும் எதிர்காலம் என்பன தொடர்பில் இந்திய பிரதமருக்கும் இலங்கை பிரதமருக்கும் இடையே கைச்சாத்தான உடன்படிக்கையானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வுடன்படிக்கை 1964 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிப்பட்டது.

இவ்விடயம் பற்றி இரு பிரதமர்களுக்கிடையே 1964 ஒக்டோபர் 24 ம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை புதுடில்லியில் நடைபெற்ற கலந்துரையாடல்கள் மிகவும் சிநேகபூர்வமாகவும் நல்லெண்ணம் கொண்டதாகவும் அமைந்திருந்தன.

1930 களில் கண்டிப்பிரதேசங்களில் பெருந்தோட்டங்களைத் திறந்து வைத்ததோடு ஆரம்பமான இப்பிரச்சினையின் வரலாறு பற்றிய சிறு விளக்கமொன்றை இங்கு வழங்குவது பொருத்தமுடையதாகும்.

1815 மற்றும் 1848 ஆம் ஆண்டுகளிலேற்பட்ட தேசிய எழுச்சிகளை அடுத்து, தான் குடியிருக்கும் காணி தன்னுடையதுதான் எனக் குடியிருப்பாளர்களால் உறுதியாக நிரூபிக்கப்பட்ட காணிகள் தவிர்ந்த கண்டிய மாகாணங்களில் இருந்த காடு மற்றும் சேனைக்காணிகள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு 'வெற்றுக்காணிகள் கட்டளைச் சட்டத்தின்' கீழ் முடிக்குரிதாக்கப்பட்டன. கோப்பி மற்றும் தேயிலைத் தோட்டங்களை ஆரம்பிக்கும் நோக்குடன் இக்காணிகள் பெயரளவிலான சிறுவிலைகளில் பிரித்தானிய முதலாளிகளுக்கு விற்கப்பட்டன. இப்பெருந்தோட்டங்களில் தொழில்புரிய தென்னிந்தியாவில் இருந்து குடிபெயர்ந்த தொழிலாளர்களை பிரித்தானியர் பயன்படுத்தினர்.

பெருந்தோட்டங்களில் தொழில் புரிவதற்கான இந்தியத் தொழிலாளர்களை ஆட்திரட்டல் செய்ய விசேட முகவர் அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றிற்கு சட்டத்தால் விசேட வசதிகளும் உத்தரவாதமும் செய்யப்பட்டன. குடிவரவுத் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிக்க 1923 ஆம் ஆண்டில் ' இந்தியக் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர்' என்றழைக்கப்பட்ட விசேட அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

அதைத்தொடர்ந்து 1931 ஆம் ஆண்டில் இத்திணைக்களமானது இந்தியத் தொழிலாளர்களுக்கு பிரயோகிக்கத்தக்கதான விசேட சட்டங்களை நிர்வகிப்பதற்கு பொறுப்பாகவிருந்த, இப்பொழுதும் பொறுப்பாகவுள்ள பொதுவானதொரு தொழிற்திணைக்களமாக மாற்றப்பட்டது.

புகையிரத போக்குவரத்து, பொதுவேலை (PWD), கொழும்புத் துறைமுகம் போன்ற அரச திணைக்களங்களில் பணியாற்றுவதற்கும் அத்துடன் நகர்ப்புறங்களில் கடை உதவியாளர்களாகவும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளராகவும் மற்றும் வீட்டுவேலைக்காரர்களாகவும் பணியாற்றவென இந்நாட்டிற்குள் வந்த



இந்திய தொழிலாளர்களின் மற்றுமொரு பிரிவும் இருந்தது.

பிரதான குடிவரவான பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அனுபவித்தது போன்று இவர்கள் இலங்கைச் சட்டத்தின் கீழ் விசேட சலுகைகளை அனுபவிக்கவில்லை.

(சிறிமாவின் அறிக்கை தொடரும்)

(இதுவரையான அறிக்கையில் இருந்து சில முடிவுகளை நாம் பெற முடியும்.

1. கண்டி சிங்கள மக்கள் பாவிக்காத காடுகளே பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு பயன் படுத்தப்பட்டது. பிரித்தானிய கம்பனிகள் அவற்றிற்கும் விலை செலுத்தியே கொள்வனவு செய்துள்ளன.

2. இந்திய வம்சாவளியினர் பெருந்தோட்டங்களில் நாட்கூலிக்கு தொழிலாளர்களாக வருவதற்கு முன்பதாகவே வேறு பிரிவினரான புகையிரத, பொதுப்பணி போன்ற துறைகளில், துப்பரவு ஏற்பாட்டுத் தொழில்களில் இந்திய வம்சாவளியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

# விளையாட்டு

## மீண்டும் மட்டக்களப்பில் சூடு பிடிக்கும் டெனிஸ்



இலங்கை டெனிஸ் விளையாட்டு சம்மேளனமும் மட்டக்களப்பு டெனிஸ் விளையாட்டு பயிற்சி நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்து நடாத்தும் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான டெனிஸ் விளையாட்டு சுற்றுப்போட்டி 17.08.2018 அன்று பயிற்சி நிலையத்தின் தலைவர் சுதனின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவான் அவர்களும், கௌரவ விருந்தினர்களாக மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வர் ஜோர்ச்பிள்ளை மற்றும் மட்டக்களப்பு ஹட்டன் நஷனல் வங்கியின் பிரதி முகாமையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். போட்டியில் கலந்துகொள்ளும் சிறுவர்கள் பெற்றோர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது போட்டிகளில் பங்கு பற்றவுள்ள சிறார்களுக்கான சீருடையை மாநகர முதல்வர், பயிற்சி நிலைய தலைவரிடம் இருந்து பெற்றுக் கொண்டு வெளியிட்டு வைத்தார். இதனைத் தொடர்ந்து விருந்தினர்களால் டெனிஸ் பந்துகள் வீசப்பட்டு போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மீண்டும், மட்டக்களப்பு மாவட்டத்தில் டெனிஸ் விளையாட்டை ஊக்குவிக்கும் முயற்சிகள் நடப்பதால், புதுத்தெம்புடன் சிறார்களை பெற்றோர் ஊக்கப்படுத்தி, மட்டக்களப்பில் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கபடி, கூடைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை ஊக்கப்படுத்துவது போன்று டெனிஸ் விளையாட்டையும் புத்துயிர் பெற இச்சுற்றுப்போட்டி வழிசமைக்கும் என இந்நிகழ்வில் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவான் அவர்கள் தெரிவித்தார்.

## புளும் பீல்ட் விளையாட்டு கழகத்தில் ஒரு மட்டு. வீரர்



இலங்கையில் உள்ள பிரபல கிரிக்கெட் கழகங்களில் ஒன்றான புளும் பீல்ட் விளையாட்டு கழகத்தில் மட்டு வீரரான ரெட்ணராஜா தேனுரதன் விளையாடி வருகின்றார் என்பது மட்டக்களப்பில் உள்ள பலருக்கு தெரியாத அல்லது அவர்கள் பொருட்படுத்தாத ஒரு விடயம். அதில் என்ன தாற்பரியம் இருக்கிறது என்று நீங்கள் கேட்கலாம்.

அதற்கு முதலில் புளும் பீல்ட் விளையாட்டுக் கழகத்தை, அதன் பின்னணியை நீங்கள் அறிய வேண்டும்.



ஒரு கிரிக்கெட் வீரர் தேசிய அணியில் இடம்பிடிக்க வேண்டுமாயின் ஏ தரத்திலான கழகத்தில் தன்னை முதலில் பதிவு செய்து அக்கழகத்திற்காக போட்டிகளில் பங்கேற்க வேண்டும். அதுவே இவ்வீரருக்கான ஆரம்பப்படிகளாகும்..

புளும் பீல்ட் விளையாட்டு கழகம் 1892ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒரு கழகமாகும். இக்கழகத்தில் தேசிய அணி வீரர்களான இலங்கையின் முதல் டெஸ்ட் அணித்தலைவர் பந்துல வர்ணபுர, 1996ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை நம் நாட்டிற்கு கொண்டு வந்த அணியின் சனத் ஜயசூரிய மற்றும் குமார் தர்மசேன, அதிரடி துடுப்பாட்ட வீரர் திலகரெட்ன டில்சான், திலின கண்டம்பி கசுன் ராஜித ஆகியோர் இந்தக் கழகத்தின் ஊடாகவே வந்தவர்கள். இதுதான் அதன் பாரம்பரியம். இப்படியான ஒரு கழகத்தில் ஆடுவது எவருக்கும் உலக கிரிக்கட்டுக்கான ஒரு அறிமுகமாகவே பார்க்கப்படுகின்றது. இப்படியான ஒரு அணியில் இடம்கிடைத்து ஆடுவது எமது மட்டக்களப்பு மண்ணின் வீரருக்குப் பெரும் வாய்ப்புத்தானே. அந்த வாய்ப்பை அடைய அவரை ஊக்குவித்தது கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்.



மட்டு வீரர் ரெட்ணராஜா தேனுரதனை நாம் பார்த்தால், இவர் தனது கல்வியை மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் ஆரம்பித்தவர்.

ரெட்ணராஜா தேனுரதனின் கிரிக்கெட் விளையாடும் திறனை கண்ட இந்துக்கல்லூரியின் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் ஜவ்வனன் அவருக்கு சில ஆலோசனை கூறி இவரது கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவித்தார். ஒரு சகல துறை ஆட்டக்காரரான இவர் பாடசாலை மட்டத்தில் 19 வயதிற்குட்பட்டோருக்கான போட்டிகளில் பல சாதனைகளை படைத்ததுடன், சிகரத்தின் சமர் என மட்டக்களப்பில் வர்ணிக்கப்படும் மட்/இந்துக் கல்லூரிக்கும் மட்/கல்லாறு மகா வித்தியாலயத்திற்கும் இடையிலான நட்பு ரீதியான 05 போட்டிகளில் பற்குபற்றி சாதனை படைத்ததுடன் அணித் தலைவராகவும் திகழ்ந்துள்ளார்.

2016ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர் அன்வர் டீன் அவர்களின் பயிற்சியின் கீழ் கிழக்கு மாகாண பாடசாலை கிரிக்கெட் அணிக்கு தலைமைதாங்கி மட்டக்களப்பிற்கு பொருமை சேர்த்த இவர் மட்டக்களப்பில் 46 வருட வரலாறு கொண்ட கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் வீரராகவும் திகழ்கின்றார்.

இவரது திறமையையும் தன்னம்பிக்கையையும் கண்டு கொண்ட கோட்டைமுனை விளையாட்டு கழகம் இவரை புளும் பீல்ட் விளையாட்டு கழகத்தில் இணைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு அதில் வெற்றியையும் கண்டுள்ளது.

புளும் பீல்ட் விளையாட்டு கழகத்தின் கிரிக்கெட் பயிற்சியாளர்களான மொகான், புத்திக, சஜித்திர மற்றும் ஜெகன் முபாரக் போன்றோரின் வழிநடத்தலில் பல புதிய நுணுக்கங்களை கற்றுக் கொண்டதுடன் புற்தரையிலான மைதானத்தில் தன் சாதனைகளை படைத்து 23 வயதிற்குட்பட்ட பல போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இங்கிலாந்தில் இருந்து வருகை தந்த புருட்ஸ்பரி கிரிக்கெட் கழகத்துடனான போட்டியில் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றியும் 28 ஓட்டங்களை பெற்றும் சிறப்பாட்டக்காரராக தெரிவுசெய்யப்பட்டு, தன் திறமையை நிரூபித்துள்ளார். தற்போது 2018ல் நடைபெறும் போட்டிகளிலும் பங்குபற்றி வருகின்றார். போகவேண்டிய தூரம் நிறைய இருக்கிறது.

--- ஜெயா ---

## பூப்பந்தாட்ட பயிற்சி பட்டறை

BATTICALOA DISTRICT BADMINTON ASSOCIATION



மட்டக்களப்பு மாவட்ட பூப்பந்தாட்ட சங்கமும், உலக தமிழர் பூப்பந்தாட்ட சங்கமும் இணைந்து சர்வதேச தரத்திலான பயிற்சியாளர்களை கொண்ட பூப்பட்தாட்ட பயிற்சி பட்டறையினை 01.09.2018ம் 02.09.2018ம் திகதிகளில் மட்டக்களப்பு பூப்பந்தாட்ட சங்க உள்ளக விளையாட்டு அரங்கில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே பூப்பந்தாட்டத்தில் ஆவர்வம் உள்ள பாடசாலை விளையாட்டு வீர்கள் தங்களின் வரவினை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு

S.முத்துலிங்கம் T.P NO : 0772774672

செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட பூப்பந்தாட்ட சங்கம்

## மட்டக்களப்பில் ஜனாதிபதி கிண்ண உதைபந்து சுற்றுப்போட்டி

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் 67 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மட்டக்களப்பு தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இளைஞர் முன்னணியின் ஒழுங்கமைப்பில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி(ஜனாதிபதி சவால் கிண்ணம்) ஒன்றை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் வி.எஸ்.சுஜாந் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் ஜனாதிபதி சவால் கிண்ணக் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியானது மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் (31.8.2018)31ம் திகதி முதல் நடைபெற உள்ளதாகவும், இவ் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 24 உதைபந்தாட்ட அணியினர்கள் பங்குபற்றுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddmunai Sports Club- Baticaloa





# நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 15

## மக்கள் திலகத்தின் இலங்கைப்பயணம்

### எம்.ஜீ. ஆரின் 'எங்கவீட்டுப்பிள்ளை' ஒளிப்படக்கலைஞர் ராஜப்பன்!

"ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்" என்று எமது முன்னோர்கள் ஒரு முதுமொழி சொல்வார்கள். அவ்வாறு ஒரேசமயத்தில் தனக்கும் வருமானம் தேடிக்கொண்டு அதன்மூலம் மற்றும் ஒருவரின் புகழை மேலும் மேன்மைப்படுத்திய ஒருவர் பற்றிய கதையை இங்கு சொல்லவிரும்புகின்றேன்.

ஆனால், அவரது ஒளிப்படம்தான் எனக்கு கிடைக்கவில்லை! இத்தனைக்கும் அவர் கொழும்பில் ஒரு காலத்தில் புகழ்பெற்ற சிறந்த ஒளிப்படக்கலைஞர். சொந்தமாக ஒரு ஸ்ரூடியோவும் நடத்தியவர்.

கேரளாவிலிருந்து இளம் வயதிலேயே இலங்கைத் தலைநகரம் வந்து, ஒளிப்படக்கலைஞராக வளர்ந்து, பின்னாளில் சொந்தமாகவே ராஜா ஸ்ரூடியோ என்ற நிறுவனத்தையும் தொடங்கியவர். முன்னாள் இலங்கை அதிபர் மறைந்த ரணசிங்க பிரேமதாசவின் நம்பிக்கைக்குரியவராகவும் திகழ்ந்து, அவர் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்த வேளையில் கட்டிடப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் சபையிலும் அங்கம் வகித்தவர்.

மத்திய கொழும்பில் புதுச்செட்டித்தெருவில் ராஜா ஸ்ரூடியோவையும் பின்னாளில் அதன் அருகாமையில் ஒரு அச்சகத்தையும் நிறுவியவர். இவரது மனைவி கௌரீஸ்வரி அக்கால கட்டத்தில் இலங்கையில் புகழ்பெற்ற கர்னாடக இசைப்பாடகியாவார்.

கௌரீஸ்வரி கனகரத்தினம் என்ற இயற்பெயர் கொண்டிருந்த அவர் ராஜப்பனை திருமணம் செய்தபின்னர் கௌரீஸ்வரி ராஜப்பன் என அழைக்கப்பட்டார்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட இரண்டாவது தமிழ்த்திரைப்படம் தோட்டக்காரி. இதில் ஒரு பாடலுக்கு இவர் பின்னணிக்குரல் வழங்கியவர். பல மேடை இசைநிகழ்ச்சிகளிலும் தோன்றி இலங்கையின் பல பாகங்களிலும் புகழ்பெற்றிருந்தார்.

ராஜா ஸ்ரூடியோவின் ஒரு தளத்தில் சங்கீத வகுப்புகளும் நடத்தினார்.

ராஜப்பன் தலைநகரில் ஒரு சிறிய ஒளிப்படக்கருவியை (கெமரா) வைத்துக்கொண்டு, பிறந்தநாள் கொண்டாடும் குழந்தைகளின் படங்களை எடுத்துவந்து, வீரகேசரிக்கும் தினகரனுக்கும் தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளுக்கும் கொடுத்து வருமானம் தேடிய அதேசமயத்தில், இப்பத்திரிகைகளில் நிரந்தரமற்ற ஒளிப்படக்கலைஞராகவும் பணியாற்றியவர்.

அதாவது அவர் இந்தப் பத்திரிகைகளுக்கு படங்களை கொடுத்து, அவை பிரசுரமானால்தான் பணம் கிடைக்கும்.

எனினும் மனைவியின் இசைப்பணியால் கிடைக்கும் வருமானத்தையும் தனது ஒளிப்படக்கலைத் தொழிலிலிருந்து கிடைக்கும் சன்மானங்களையும் வைத்து வாழ்க்கைப்படகை செலுத்தி வந்திருக்கும் அவருக்கு, அந்தப்படகை மேலும் வேகமாக செலுத்துவதற்கு துணைசெய்திருப்பவர், யார் என்பதை அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள்!

அந்த பெரும் புகழ்பெற்ற மனிதரும் இலங்கையில்தான் 1917 ஆம் ஆண்டில் பிறந்தவர். அவர்தான் மருதூர் கோபாலமேனன் இராமச்சந்திரன் என்ற இயற்பெயர் கொண்ட எம்.ஜீ.ஆர். இவருக்கு மக்கள் திலகம், புரட்சி நடிகர், பொன்மனச்செம்மல் என்றெல்லாம் பட்டங்கள் சூட்டப்பட்டன.

இவரது வெற்றிப்படம் எங்க வீட்டுப்பிள்ளை. 1965 ஆம் ஆண்டு சென்னை விஜயா கம்பைன்ஸ் தயாரிப்பில் வெளியாகி வெள்ளிவிழாக்கண்ட படம்.

கொழும்பில் தமிழ், சிங்கள, ஆங்கிலப்பத்திரிகைகளை வெளியிட்டு வந்திருக்கும் எம்.டீ. குணசேனா நிறுவனத்தின் வார இதழ் ராதா என்ற பத்திரிகையின் ஏற்பாட்டில் மலையகத்தில் வாழ்ந்த இந்திய வம்சாவளி மக்கள் மத்தியில் ஓர் அழகுராணி போட்டி நடந்தது. அதன் பிரதமவிருந்தினர்களாக வந்தவர்கள் அக்காலப்பகுதியில் தமிழ்த் திரையுலக காதல் நட்சத்திரங்கள் எம்.ஜீ.ஆரும் சரோஜாதேவியும்.

இவர்கள் இணைந்து நடித்த எங்கவீட்டுப்பிள்ளை இலங்கையிலும் திரைக்கு வந்த வேளையில்தான் ( 1965 அக்டோபர் மாதம்) ராதா பத்திரிகை இவர்களை அழைத்திருந்தது.




இரத்மலானை விமான நிலையத்தில் இவர்கள் வந்திறங்கிய விமானம் வரும் வரையில் காத்திருந்து, அன்று முதல் எம்.ஜீ.ஆர். செல்லும் ஊர்கள் மற்றும் இடங்கள் எங்கும் உடன் பயணித்து படங்கள் எடுத்து கொழும்பு பத்திரிகைகளுக்கு கொடுத்துக் கொண்டிருந்தவர்தான் இந்தப்பதிவின் நாயகன் ஒளிப்படக்கலைஞர் ராஜப்பன்.

நட்சத்திரக்காதலர்கள் தலைநகரில் தங்கியிருந்து இடம் காலிமுகத்திடலில் இன்றும் காட்சி தரும் கோல்பேஸ் ஹோட்டல். அருகில் கடற்கரைக்காற்று தழுவும் இந்த அழகிய உல்லாச விடுதியிலிருந்தவாறு எம்.ஜீ.ஆர். பல இடங்களுக்கும் சென்றார். வீரகேசரி பத்திரிகையின் வரலாற்றை எம்.ஜீ.ஆருக்குச் சொன்ன ராஜப்பன் ஒருநாள் அவரை அங்கும் அழைத்துச் சென்றார்.

எம்.ஜீ.ஆர். - சரோஜாதேவி ஜோடி



யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, மாத்தளை, நுவரேலியா முதலான நகரங்களுக்கும் சென்றனர். கடந்த வாரம் நாம் பதிவுசெய்திருந்த சினிமாஸ் குணரத்தினம் அவர்களின் விருந்தினர்களாக இலங்கையில் சுற்றுலா மேற்கொண்ட இவர்களை மட்டக்களப்பில் அச்சமயம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த செல்லையா இராசதுரை அவர்கள் வரவேற்று மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் மாபெரும் வரவேற்பு வழங்கினார்.

யாழ்ப்பாணம் திறந்தவெளி அரங்கிலும் இவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. மயிலிட்டி என்ற இடத்தில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் எம்.ஜீ.ஆர். உதவினார்.

அங்கு நடந்த நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளியான ஒருவர் பாதுகாப்பு தடைகளையும் மீறி மேடையருகே வந்து பொன்மனச்செம்மலின் பொன்னான கரத்தை தொட்டுப்பார்க்க ஆசைப்பட்டார்.

உடனே அந்த மாற்றுத்திறனாளியை அருகே அழைத்து, அவர் கையில் ஐநூறு ரூபா பணத்தை வைத்து வாழ்த்தினார் எம்.ஜீ.ஆர்.

எம்.ஜீ.ஆர். - சரோஜாதேவி கலந்துகொண்ட மற்றும் ஒரு நிகழ்ச்சியில் அச்சமயம் சிறுவனாக இருந்த நேசம் தியாகராஜன் என்பவர் மிருதங்க கலைஞர் அச்சுதனிடம் மிருதங்கம் கற்று வந்தார். இவரது அரங்கேற்றம் கொழும்பு ரோயல் கல்லூரியில் பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தலைமையில் ஏற்கனவே நடைபெற்றிருந்தது.

குறிப்பிட்ட இளம் கலைஞர் நேசம் தியாகராஜன் நிகழ்த்திய இசை நிகழ்ச்சியையும் எம்.ஜீ.ஆரும் சரோஜாதேவியும் கண்டு களித்தனர்.

இந்தக்கலைஞர்தான் பின்னாளில் கண்ணன் என்ற மற்றும் ஒரு கலைஞருடன் இணைந்து கண்ணன் - நேசம் இசைக்குழுவை உருவாக்கி நாடெங்கும் இசை நிகழ்ச்சிகளை நடத்தியவர். கோமாளிகள், ஏமாளிகள் ஆகிய மரைக்கார் இராமதாஸின் திரைப்படங்களுக்கும் பின்னணி இசை வழங்கியவர்கள்.

**ரஸஞானி**

எம்.ஜீ.ஆர், அச்சமயம் இலங்கை பிரதமராக பதவியிலிருந்த டட்லி சேனாநாயக்காவையும் சந்தித்துப்பேசினார். அக்காலப்பகுதியில் எம்.ஜீ.ஆர். திராவிட முன்னேற்றக்கழகத்தின் தீவிர ஆதரவாளராக இருந்தபோதிலும் தீவிர அரசியலுக்குள் பிரவேசித்திருக்கவில்லை. அவர் தொடர்ச்சியாக பல படங்களில் நடித்து திரையுலகில் சக்கரவர்த்தியாகத்திகழ்ந்தவர்.

எண்ணிறந்த ரசிகர்களின் மனங்களில் வாழ்ந்தவர். அவரது இலங்கைப்பயணத்தில் அவர் சென்று வந்த இடங்களுக்கும் பொது நிகழ்ச்சிகளுக்கும் உடன் சென்ற ஒளிப்படக்கலைஞர் ராஜப்பன், தன் வசம் வைத்திருந்த சிறிய கெமராவின் துணையுடன் ஏராளமான படங்களை எடுத்துக்கொண்டே இருந்தார்.

இன்றுபோல் அன்று கலர்ப்படங்கள் இல்லை. டிஜிட்டல் தொழில் நுட்பமோ, கணினி தொழில் நுட்பமோ இல்லாத காலம். கறுப்பு - வெள்ளை படம் எடுத்து அதன் பிலிம் சுருள்களை Dark Room இல் கழுவி பிரிண்ட் எடுத்து காயவைத்து தரவேண்டும்.

இவ்வாறு குறைந்தவளங்களுடன் அன்று எமது ஒளிப்படக்கலைஞர்கள் வாழ்ந்தனர். அவர்கள் நடந்தும் பஸ், ரயில் மார்க்கமாக பயணித்தும் தமது தொழிலை செவ்வனே நடத்தியவர்கள். அவர்களுக்கென்று சொந்தமாக இருந்த வாகனம் துவிச்சக்கர வண்டிமாத்திரம்தான்.

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# செங்கிஸ்கானின் வாரிசுகள்




ஜாஃபர் சையத் – பிபிசி உருது

13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வடகிழக்கு ஆசியாவில் இருந்து தோன்றிய ஒருவர் உலகத்தையே நடுங்கச் செய்தார். செங்கிஸ்கான் உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஆட்சியாளர்களில் ஒருவராக கருதப்படுகிறார். படையெடுத்து செல்லும் அவர், பேரழிவையும் பலத்த உயிர் சேதங்களையும் ஏற்படுத்தி, நாடு நகரங்களையும், தேசங்களையும் தனது முன்னால் மண்டியிடச் செய்தார்.

பல நாடுகளில் இரத்த ஆற்றை ஓடவிட்டு, எதிரிகளின் தலையை துண்டித்து, மலையாக குவித்த செங்கிஸ்கான், நகரங்களை சூறையாடியபடியே, பீஜிங் முதல் மாஸ்கோ வரை பல நகரங்களை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தார்.

ஒரு காலத்தில் மூன்று கோடி சதுர கிலோமீட்டர் பரப்பளவிற்கு பரந்து விரிந்திருந்த மங்கோலியப் பேரரசின் தற்போதைய எல்லைக்குள் வசிப்பவர்களின் மொத்தத் தொகையே மூன்று கோடிதான்.



ஆனால் செங்கிஸ்கானின் வெற்றி போர்க்களத்தோடு முடிந்துவிடவில்லை. மற்றொரு களத்திலும் அவரது செயல்பாடு மிகவும் வியப்பளிப்பதாக இருக்கிறது!

கிழக்கு மங்கோலியா எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மரபணு ஆராய்ச்சியில் ஏறத்தாழ எட்டு சதவிகித ஆண்களின் "ஒய்" குரோமோசோம்களில் மங்கோலிய ஆட்சியாளர்களின் குடும்பத்தின் தடயங்கள் உள்ளதாகத் தெரியவந்தது.

உலகில் சுமார் ஒரு கோடியே 60 லட்சம் ஆண்கள் அதாவது உலக ஆண்களில் 0.5% செங்கிஸ்கானின் பரம்பரையினர் என்று கூறுகிறது இந்த ஆராய்ச்சியின் முடிவுகள். பாகிஸ்தானில் ஹஜாரா பழங்குடியினப் பகுதியில் வசிக்கும் மக்களின் மரபணுக்களிலும் இதுபோன்ற தடயங்கள் தென்படுகின்றன. அந்த மக்களும் தாங்கள் மங்கோலிய இனத்தை சேர்ந்தவர்கள் என்றே தங்களை அடையாளப்படுத்துகின்றனர். இதைத் தவிர, முகல், சுக்தாய் மற்றும் மிர்ஸா போன்ற குடும்பப் பெயர்களைக் கொண்ட மக்கள் தாங்களும் மங்கோலிய இனத்தை சேர்ந்தவர்களாக கூறுகின்றனர்.

ஒருவருக்கு எத்தனை குழந்தைகள்?

அறிவியல் ரீதியான மரபணு ஆராய்ச்சிகள் ஒருபுறம் இருக்கட்டும், ஆனால் செங்கிஸ்கானின் வாரிசுகள் பற்றி வரலாற்றுப் பதிவுகள் என்ன சொல்கின்றன?

டஜன் கணக்கில் திருமணம் செய்துக் கொண்டவர் செங்கிஸ்தான் என்பதும் அவரது மகன்களின் எண்ணிக்கை 200 என்றும் சொல்லப்படுகிறது. அவருக்கு பிறகு, அவரது மகன்கள் ஆட்சியையும் சம்ராஜ்ஜியத்தையும் மட்டும் விரிவாக்கவில்லை, பரம்பரையையும், வாரிசுகளின் எண்ணிக்கைகளையும் விரிவுபடுத்தினர்.

செங்கிஸ்கான் மரணமடைந்து 33 ஆண்டுகளுக்கு பிறகு அவரது சரித்திரத்தை "தாரீக்-ஏ-ஜகாங்குஷா" என்ற பெயரில் எழுதினார் உதா மலிக் ஜுபாயனி என்ற வரலாற்றாசிரியர்.

"செங்கிஸ்கான் காலத்தில், அவரது பரம்பரையைச் சேர்ந்த 20 ஆயிரம் பேர் நிம்மதியாக வாழ்ந்துக் கொண்டிருந்தார்கள். இதைப்பற்றி நான் அதிகம் எதுவும் சொல்லப்போவதில்லை. ஏனெனில், ஒருவரால் எப்படி இவ்வளவு அதிகமான குழந்தைகளை பெறமுடியும்? என்ற கேள்வி எழும். இதை படிக்கும் வாசகர்கள் பொய்யான தகவல்களை பரப்புவதாக குற்றம் சாட்டப்படலாம்."

இந்த இடத்தில் ஒரு முக்கியமான சம்பவத்தை குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கலாம். செங்கிஸ் கானுக்கு 60 வயதாக இருந்தபோது, தனக்கு பிறகு அரசராக பதவியேற்பது யார் என்பதை முடிவு செய்யும் முக்கியமான கூட்டத்தை அவர் கூட்டினார். முதல் மனைவி மூலம் பிறந்த ஜோச்சி, ஒக்தாயி, சுக்தாயி, தோலி ஆகிய நான்கு மகன்களை கூட்டத்திற்கு அழைத்த செங்கிஸ்கான் அவர்களிடம் பேசினார்.

ஒரு கதையை உதாரணமாக கூறிய செங்கிஸ்கான் அதன் மூலம் ஒற்றை தலைமையின் அவசியத்தை மகன்களுக்கு எடுத்துரைத்தார். "எனது மகன்கள் அனைவரும் அரசராக விரும்பினால், ஒருவரின் கீழ் மற்றவர்கள் பணியாற்ற மறுத்தால், அது, இரண்டு பாம்புகள் பற்றிய பழைய கதை ஒன்றை நினைவுபடுத்துவதாக இருக்கும். அந்த கதையில் ஒரு பாம்புக்கு பல தலைகள் இருக்கும், மற்றொரு பாம்புக்கு ஒரு தலையும் பல உடல்களும் இருக்கும்."

"பல தலைகள் கொண்ட பாம்புக்கு பசியெடுத்து அது இரை தேட கிளம்பினால், எந்த வழியாக செல்லலாம் என்று அதன் பல தலைகளுக்கும் கருத்து வேறுபாடு எழும். ஒத்த கருத்து ஏற்படாத காரணத்தால் எங்குமே செல்லமுடியாமல் இறுதியில் பட்டினியிலேயே பல தலை பாம்பு இறந்துவிடும். ஆனால் ஒற்றைத் தலையும், பல உடம்பும் கொண்ட பாம்புக்கு இந்த பிரச்சினை இல்லை, அது பல உடல்களுக்கு தேவையான உணவை உட்கொண்டு நிம்மதியாக வாழ்ந்தது"

கதையை சொல்லி முடித்த செங்கிஸ்கான், தனது மூத்த மகன் ஜோசி கானை உரையாற்ற அழைத்தார். இதன் பொருள், பிற சகோதரர்கள், ஜோசி கானின் தலைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே.

இது இரண்டாவது மகன் சுக்தாயிக்கு பிடிக்கவில்லை.



"நீங்கள் ஜோசியை உரையாற்ற அழைப்பதால் அவனையே அரசனாக்க முடிவு செய்துவிட்டீர்கள் என்று பொருள் கொள்ளலாமா? தவறான வழியில் பிறந்த அவனை எங்கள் தலைவராக எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?" என்று தனது இருக்கையில் இருந்து எழுந்து நின்று தந்தையிடம் தனது மனத்தாங்கலை முறையிட்டார். 40 ஆண்டு கால கதை சுக்தாயி குறிப்பிட்டுச் சொல்ல விரும்பியது 40 ஆண்டு பழைய கதை. செங்கிஸ் கானின் எதிரிகளினால் கடத்தப்பட்டார் அவருடைய முதல் மனைவி போர்தா காதூன். 1161ஆம் ஓல்கோத் பழங்குடியினத்தில் பிறந்த போர்தாவுக்கும், தைமூஜினுக்கும் (செங்கிஸ் கானின் உண்மையான பெயர்) சிறு வயதிலேயே திருமணம் நிச்சயமாகிவிட்டது. திருமணம் நடக்கும்போது போர்தாவுக்கு 17 வயது, செங்கிஸ் கானுக்கு 16 வயது.




திருமணமான சில நாட்களிலேயெ செங்கிஸ் கானின் எதிரிகள், செங்கிஸ் கானின் குடும்பத்தினர் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஆறு தம்பிகள் மற்றும் தாயுடன் செங்கிஸ் கான் தப்பித்தாலும், அவரது மனைவி போர்தா மட்டும் அகப்பட்டுக் கொண்டார்.

உண்மையில் போர்தாவை கடத்துவதே தாக்குதல் நடத்தியவர்களின் நோக்கம். இந்த கடத்தலின் பின்னணியில் இருப்பதோ மற்றுமொரு கடத்தல் கதை. செங்கிஸ் கானின் தந்தை, தங்கள் இனத்திற்கு எதிரியாக இருந்த மற்றொரு பழங்குடி இனத்தை சேர்ந்த பெண்ணை கடத்திக் கொண்டு வந்து திருமணம் செய்துக் கொண்டார். அவர்தான் செங்கிஸ் கானின் தாய். செங்கிஸ்கானின் தாயான தங்கள் இனப் பெண் கடத்தப்பட்டதை பல ஆண்டுகளாகியும் மறக்காதவர்கள், பழி தீர்த்துக் கொள்வதற்காக செங்கிஸ்கானின் மனைவியை கடத்தினார்கள். மாட்டு வண்டி ஒன்றில் மறைந்திருந்த போர்தாவை கண்டுபிடித்து, குதிரையில் ஏற்றிக் கொண்டு விரைந்தார்கள் கடத்தல்காரர்கள்.

தனது மனைவியை தேடும் வேட்டையை தொடங்கினார் செங்கிஸ்கான். மனைவியை கடத்திய கானாபதோஷ் மர்கத் பழங்குடியினத்தவர் ஆசிய கண்டத்தின் பல ஆயிரம் மைல்கள் பரப்பளவிலான சமவெளிகளில் வசித்து வந்தனர். மனைவியைத் தேடி நீண்ட பயணம் மேற்கொண்ட தைமூஜின் என்னும் செங்கிஸ்கான், ஆட்களையும் திரட்டினார்.

"அவர்கள் என்னுடைய வீட்டை மட்டும் சூறையாடவில்லை, என்னுடைய மனதையும் சூனியமாக்கிவிட்டார்கள்" என்று சொல்லி வருந்துவார் செங்கிஸ்கான்.

இறுதியில் தனது மனைவியை சகாக்களின் உதவியால் மீட்டுவந்தார் செங்கிஸ் கான். இந்த சம்பவம் அவரது



வாழ்வில் மிக முக்கியமானது என்று சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். ஏனெனில் மனைவியை தேடி அவர் பயணித்த பாதையில் தான் பிற்காலத்தில் பயணித்து உலகின் மிகப் பெரிய சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கினார் செங்கிஸ் கான்.

போர்தா மீட்கப்படுவதற்கு எட்டு மாதங்கள் ஆகிவிட்டது. தனது இடத்திற்கு வந்த சில மாதங்களிலேயே ஜோசியை பெற்றெடுத்தார் போர்தா.

ஜோசியின் பிறப்பு பற்றி பல வதந்திகள் பரவினாலும், ஜோசியை தனது மூத்த மகனாகவே கருதினார் செங்கிஸ்கான். தனக்கு பிறகு ஜோசியே பதவியேற்கவேண்டும் என்று அவர் கருதியதற்கும் அதுவே காரணம்.
ஆனால் 40 ஆண்டுகளுக்கு பிறகு, ஒரே தாயின் வயிற்றில் பிறந்த மகன்களே, மூத்த சகோதரனின் பிறப்பு பற்றி கேள்வி எழுப்புவார்கள் என்று செங்கிஸ் கானுக்கு தோன்றவில்லை.

சகோதரர்களுக்கு இடையே சண்டை

-----------------------------------------------------------------

தம்பி சுக்தாயி, தன் மீது குற்றம் சுமத்துவதை தாங்க முடியாத ஜோசி, வேகமாக எழுந்து தம்பியின் கன்னத்தில் ஓங்கி அறைவிட்டார். இருவருக்கும் இடையே மூண்ட கைகலப்பை விலக்கிவிட அனைவரும் வர வேண்டியதாயிற்று. தனது காலத்திற்கு பிறகு மூத்த சகோதரன் ஜோசி அரியணை ஏறுவதற்கு மூன்று மகன்களும் தடைகளை ஏற்படுத்துவார்கள் என்பதை புரிந்துக் கொண்டார் தந்தை செங்கிஸ் கான். சகோதரர்கள் இடையே சண்டை மூண்டால் நாடு பிளவுபடும் என்று செங்கிஸ்கான் கவலையடைந்தார். இப்போது சுக்தாயி ஒரு யோசனையை முன்வைத்தார். மூத்த சகோதரர்கள் இருவரையும் விடுத்து, மூன்றாவது மகனான ஒக்தாயி என்பவரை அரசராக்கலாம் என்ற சுக்தாயின் திட்டத்திற்கு சகோதரர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டனர்.

இது செங்கிஸ் கானுக்கு வருத்தத்தை ஏற்படுத்தினாலும், வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்டது. அந்த சம்பவத்திற்கு பல நூற்றாண்டுகளுக்கு பிறகு இன்று செங்கிஸ்கானின் வழித்தோன்றல்கள் கோடிக்கணக்கில் இருப்பதாக சொல்லப்பட்டாலும், அவரது மூத்த மகனின் பிறப்பு பற்றி, பிற மகன்களே கேள்வி எழுப்பியது வரலாற்றின் வினோதமான முரண்பாடு.

1227 ஆகஸ்ட் 18ஆம் தேதியன்று தனது இறுதி மூச்சை விட்ட செங்கிஸ்கானின் வாழ்க்கையில் அவர் அனுபவித்த மிகப் பெரிய துக்கமாக இதுதான் இருந்திருக்கும்.








# தூணிபோன்றுத் தமிழ் வளர்ப்போம்!

# திருக்குறள் இன்பம் - 5

*(உலகப் பொதுமறையாக விளங்குகின்ற ஒப்பற்ற அறிவு நூலும், தனித்துவம்மிக்க காதல் இலக்கியமுமான திருக்குறள் இலக்கணமிட்டுள்ள காமத்துப்பாலின் இனிய காட்சிகளின் இன்பத்தைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத்தொடர்.)*

அவளா? மலரா?

காதலியைக் காண்பதற்காக வழமையாக அவளைச் சந்திக்கும் இடத்திற்கு அவன் நடந்து சென்றுகொண்டிருக்கிறான். அவன் செல்லும் பாதையின் ஒருபுறம் வயல். அந்த வயலிலே நிலத்தைத் தொடுவோமா, விடுவோமா என்று வளைந்து ஆடிக்கொண்டிருக்கும் நெற்கதிர்கள்! மறு புறம் வற்றாத நீர் நிறைந்தகுளம். குளத்தில் ஆங்காங்கே நிற்கும்



பட்டமரக் கிளைகளில் கொக்குகள் மீன்களைக்குறிவைத்துக் குந்தியிருப்பதும், எழுந்து பறப்பதுமாக இருக்கின்றன. அந்தக் காட்சி அந்தரத்தில் வெள்ளைச்சீலைத் துண்டுகள் காற்றில் பறப்பதும், மரத்தில் வீழ்ந்து சிக்கிக்கொள்வதும் போலத் தோன்றுகிறது. வழியிலே பலவண்ணப் பூமரங்கள் பூத்துக்குலுங்கி மணம்பரப்பிக்கொண்டிருக்கின்றன. வரிசையாக வம்மி மரங்கள் பூக்கள் நிறைந்து, இலைகள் மறைந்து, பொலிந்து சிரிக்கின்றன. ஒரு வம்மிப் பூவை எட்டிப் பறித்து, கையில் வைத்து அதன் மிருதுவான தன்மையை உணர்கிறான். பூவைத் தன் கன்னத்தில் ஒற்றிப்பார்க்கிறான். ஆகா! என்ன அழகான பூ இது. எவ்வளவு மென்மையாக இருக்கிறது என்று வியக்கிறான்.

அங்கே நின்றதோர் அனிச்ச மரத்திலே மலர்ந்துகிடக்கும் அனிச்சம் பூக்கள் அவனின் கவனத்தை ஈர்க்கின்றன. அதில் ஒரு பூவைப் பறித்து அதனைத் தடவிப் பார்க்கிறான். "ஓ! அதைவிட இது மிகவும் மென்மையாக இருக்கிறதே! உலகிலே இதைவிட மென்மையான மலர் இருக்கவே முடியாது" என்று நினைக்கிறான். அப்போது அவனுக்கு அவனின் காதலியின் மென்மையான தன்மை இதயத்தை வருடுவதுபோல நினைவு படர்கிறது. அந்த அனிச்சம் பூவை உற்று நோக்குகிறான். அதனிடம் பேசுகிறான்.

"அனிச்சம் பூவே! நீ வாழ்க. மலர்களிலே நீ தான் மிகவும் மென்மையான மலர் என்பது உண்மைதான். ஆனால், என் விருப்பத்திற்குரிய காதலியோ உன்னைவிடவும் மென்மையானவள்." (என்று அவன் அனிச்சம் பூவிடம் சொல்கிறான்)

"நன்னீரை வாழி! அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள் (1111)"

திருக்குறளில் இரண்டே இரண்டு மலர்கள்தான் பெயர்குறித்துச் சொல்லப்படுகின்றன. ஒன்று குவளை மலர். மற்றையது அனிச்சம் மலர். அனிச்சம் மலரின் மறு பெயர் காட்டு வாகைப்பூ. இது மிகவும் மிருதுவானது. இந்தப் பூவின் மென்மையைப் பற்றி இன்னும் ஒரு குறள் இப்படிச் சொல்கிறது.

விருந்தோம்பல் என்ற அதிகாரத்திலே, வீட்டுக்காரர் விருந்தினர்களை உபசரிக்கும்போது முகம் மலர்ந்து வரவேற்று, இன்சொல்பேசி

உபசரிக்க வேண்டும். அதைவிடுத்து முகத்தில் சற்றேனும் மாறுபாடு தெரியுமானால் விருந்தினர்களின் மனம் வாடிவிடும். அது எப்படியென்றால், மிகவும் மிருதுவான அனிச்சம் மலர் முகர்ந்துபார்த்தாலே வாடிவிடுமே அதைப்போல.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (90)"

முகர்ந்து பார்த்தாலே வாடிவிடுகின்ற மிகவும் மென்மையான அனிச்சம் பூவைவிடத் தன் காதலி மென்மையானவள், மிருதுவானவள் என்று ஒரு காதலன் தனது காதலியைப்பற்றிக் கூறும் இந்த அற்புதக் காட்சி, பெண்களின் மென்மையை மட்டுமல்ல, அந்த மென்மைதான் ஆண்களின் மனங்களை மிகவும் கவர்கின்றது என்ற உண்மையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

கண்களா? பூக்களா?

அப்படியே நடந்து சென்று கொண்டிருந்தவனுக்கு அங்கே பூத்துக் கிடக்கும் சில



மலர்கள் அவனது காதலியின் கண்களை நினைவுபடுத்துகின்றன. அவளின் கண்களைப் போலல்லவா இந்தப் பூக்கள் அழகாக இருக்கின்றன என்று ஒருகணம் நினைக்கின்றான். ஆனால் மறுகணமே தனது எண்ணம் தவறானது என்று அவனின் அறிவு சொல்கிறது. "சீச்சீ! இந்த மலர்கள் எவையுமே என்னுடைய காதலியின் கண்களுக்கு ஒப்பானவையே அல்ல. அவளின் கண்கள் இவற்றைவிட மிகவும் அழகானவை" என்று காதலியின் மீது கொண்ட காதல் அவனது அறிவை வசப்படுத்தி முடிவுசெய்கிறது. ஒரேமாதிரியாக இல்லாதவற்றையும், அப்படி இருப்பதாக எப்போதும் தவறாகவே நினைப்பதே தன் மனதிற்கு வழக்கமாகிப் போய்விட்டது, என்று தன்நெஞ்சைத் தானே கடிந்து கொள்கிறான்.

ஆம்! கருத்தொருமித்து நெஞ்சில் குடிகொண்ட காதலிக்கு நிகராக இந்த உலகில் எதையுமே ஒருவனால் ஒப்பிட முடியாது என்பதுதானே காதலின் பலமும், பலவீனமும்!

"மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று (1112)"

ஒவ்வாதனவற்றையெல்லாம், ஒத்தவை என்று தவறாக எண்ணுகின்ற நெஞ்சமே! எல்லோரும் காணுகின்ற மலர்கள் எல்லாம் என் காதலியின் கண்களைப்போன்றிருக்கின்றன என்று நீ பிழையாக நினைக்கின்றாய். (ஆனால் அவை ஒருக்காலமும் அவளின் கண்களுக்கு ஒப்பானவை அல்ல.) என்பது இந்தக் குறளின் நேரடிக் கருத்து.

அவள் வருவாள்! தலை கவிழ்வாய்!

அங்கே குளத்தில் குவளை மலரின் மொட்டு நீரின் மேல் எழுந்து வானத்தைப் பார்த்து நிமிர்ந்து நிற்கின்றது. அதனை இவன் பார்க்கிறான். "தான் மிகவும் அழகானவள் என்ற செருக்கினால் இந்தக் குவளை மலர் வானத்தைப் பார்த்து நிற்கிறது. இந்தப்பக்கம் நம்ம ஆள் வரவில்லை. அவள் மட்டும் வந்திருந்தால் அவளின் கண்களை இந்தக் குவளை மலர் கண்டால், ஐயையோ இவளின் கண்களின் அழகுக்கு முன்னர் நான் நிகராக மாட்டேனே என்று நாணமுற்று, தலை கவிழ்ந்து நிலத்தைப் பார்த்துக்கொண்டிருக்கும். இப்படி நிமிர்ந்து நிற்க மாட்டாது" என்று நினைக்கிறான்.

குவளைக்கு மறுபெயர் அல்லி. இது குளம், பொய்கை, நீரோடை களில் வாழும் தாவரம். இதன் பூக்கள் இரவில் மலர்ந்து, காலையில் குவிந்துவிடும். பகல் நேரத்தில் மொட்டுக்களாகத் தோன்றும் இந்தக் குவளை மலரின் குவிந்திருக்கும் மொட்டுக்கள்

பெண்களின் கண்களுக்கு உவமையாகப் பண்டைதமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. இங்கே தனது காதலியின் கண்களைக் கண்டால் இந்தக் குவளை மலர்கள் நாணித் தலை கவிழும் என்று காதலன் கூறுவதுபோலக் குறள் வடித்துள்ள வள்ளுவரின் கற்பனை எண்ணியெண்ணி இன்புறத்தக்கது.

"காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று (1114)"

தானே மிகவும் அழகுடையவள் என்று இறுமாப்புக்கொண்டு நிமிர்ந்து வானத்தைப் பார்த்தபடி நிற்கின்ற இந்தக் குவளை மலர், எனது காதலியின் கண்களை மட்டும் பார்க்க நேர்ந்தால், அவளின் கண்களுக்குத் தான் நிகராக முடியாது என்று உணர்ந்து தலைகுனிந்து நிற்கும் என்பது இந்தக் குறளின் கருத்து.

இப்போது அவளைச் சந்திக்கும் இடத்திற்கு வந்துவிட்டான். இனி அவளுக்காகச் சில நிமிடங்கள் அவன் காத்திருப்பான். அதுதான் அவர்களது வழமை. தனக்காக அங்கே தனிமையிலே அவள் காத்துநிற்பது சரியில்லை. அதனால் எப்போதும் அவனே முதலில் வந்து காத்திருப்பதும், சற்றுத் தாமதமாக அவள் வந்து சேர்வதும் அவர்களின் ஏற்பாடு. அந்தச் சில நிமிடங்கள், அவளுக்காகக் காத்திருப்பதில் உள்ள சுகத்தை அனுபவிப்பது அவனுக்கு மிகவும் பிடித்தமானது. குறுகிய அந்த நேரத்தில் அழகிய அவளின் தேகத்தை அவனது மனம் மேய்ந்து மகிழ்கிறது.

என்னவளே! உன்னில் எத்தனை அழகு!

தன் தனது காதலியின் கண்கள் மட்டுமா அழகு? அவளது அங்கங்கள் ஒவ்வொன்றுமே அழகுதானே என்று அவன் நினைக்கிறான். அதையே எண்ணியெண்ணி மகிழ்கிறான். அவளின் மனக்கண்முன்னர் தேவதைபோல அவள் தோன்றுகிறாள். அவளின் தோள்கள் மூங்கிலின் தண்டுகளைப்போல உருண்டு,

**சட்டத்தரணி, பாடும்மீன்**
**சு.ஸ்ரீகந்தராசா**

திரண்டு அழகாகவும், வழுவழுப்பாகவும் உள்ளன. தளிர்போன்று மென்மையானது அவளின் மேனி. அவளின் பற்கள் முத்துக்களைப் போல வெண்மையானவை. அவள் இயற்கையான நறுமணம் கொண்டவள். அவளின் கண்களோ ஈட்டியைப் போல கூர்மையானவை. இவ்வாறு அத்தனையும் ஒருங்கே கொண்ட பேரழகியாக அவனின் காதலி அவனது உள்ளத்தில் நர்த்தனம் ஆடுகின்றாள்.

"முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு(1113)"

மூங்கிலே தோள்களாகவும், தளிரே உடலாகவும், முத்துக்களே

பற்களாகவும், இயற்கையான மணம் கொண்டவளாகவும், வேலே கண்களாகவும் கொண்டவள் எங்காதலி. என்பது இந்தக் குறளின் நேரடிக்கருத்து.

காதலில் வீழ்ந்த எந்த ஆண்மகனுக்கும், இந்த உலகத்தில் உள்ள எல்லாப் பெண்களிலும் தனது காதலியே மிகவும் அழகியாகத் தெரிவாள். உலக அழகியென்று உலகோர் சொல்லும் பெண்ணைவிடத் தன்னைக் கவர்ந்த தன் காதலியே பேரழகியாகத் தோன்றுவாள். அதுதான் காதலின் சக்தி. (தொடரும்)

தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்காக மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின் சார்பில், அதன் தலைவர், புரவலர் விநாயமூர்த்தி ரஞ்சிதமூர்த்தியின் சமர்ப்பணம் இந்தப் பக்கம்.



# அருட்பா-மருட்பா வழக்கு எல்லாம் பொய்யப்பா

அருட்பா எதிர் மருட்பா எனும் கருத்தியல் போர் வள்ளலாரிற்கும், ஆறுமுக நாவலரிற்குமிடையே இடம்பெற்றதாகவும், அப் பிணக்கு முற்றி நீதிமன்றம்வரைச் சென்றதாகவும் ஒரு செய்தி பலரும் அறிந்திருப்போம். இவ் விடயம் பற்றிய ஒரு விளக்கமாகவே இக் கட்டுரை அமைகின்றது.



பொதுவாக வள்ளலாரின் பாடல்களை நாவலர் மருட்பா எனக் கூறியமையாலேயே வழக்குத் தொடரப்பட்டதாகவே வையாபுரிப்பிள்ளை போன்றோரும் எழுதியுள்ளனர். உண்மையில் இடம்பெற்றதோ மான இழப்பீட்டு வழக்கே, அதுவும் நாவலரின் எதிர்த்தரப்பில் முதன்மையாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் வள்ளலாரே அல்ல, மாறாக சபாநடேச



தீட்சிதரே என்பன போன்ற பல வியப்புக்குரிய செய்திகளை உள்ளடக்கி ஆய்வாளர் ப. சரவணன், 1190 பக்கங்களில் "அருட்பா மருட்பா கண்டனத் திரட்டு" என்னும் பெரியதொரு ஆவண நூலை வெளியிட்டுள்ளார்.

இந்த நூலின் சிறப்பே அவர் தனது கருத்துக்கள் எல்லாவற்றையும் உரிய ஆவணங்களுடன் சான்றுப்படுத்தியிருப்பதே. இக்கட்டுரையில் இடம்பெறும் பல விடயங்களும் அவரது நூலில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களினை அடிப்படையாகக் கொண்டே எழுதப்பட்டுள்ளன என்பதை நன்றியுணர்வுடன் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

உண்மையில் வள்ளலார் குழு, நாவலர் குழு, சிதம்பரம் தீட்சிதர் குழு போன்ற முத்தரப்பினரே இந்தப் பிணக்கில் ஈடுபட்டார்கள். மேலும் இப் பிணக்கானது வெறும் கருத்தியல் மோதல் என்பதனைக் கடந்து சாதி ஆதிக்கத்தினை நிலைநிறுத்திக் கொள்வதற்கான ஒரு வசைபாடலாகவே ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாக தொடர்ந்து இடம்பெற்றிருந்தது. இப் பிணக்கிற்குள் போவதற்கு முன் இதனுடன் தொடர்புடைய மூன்று தரப்பினரையும் மேலோட்டமாகப் பார்க்கவேண்டியுள்ளது. சிதம்பரம் தீட்சிதர்களைப் பொறுத்தவரையில் வேதங்களை அடிப்படையாகக் கொண்டு பார்ப்பனிய மேலாதிக்கத்தையும், வடமொழிப் பெருமைக்காகத் தமிழ் வெறுப்பினையும் இரு கண்களாகக் கொண்டவர்கள். சிதம்பரம் கோயிலிற்குள் தமிழில் தேவாரம் பாடப்படுவதனையே எதிர்ப்பவர்கள். ஆறுமுக நாவலரோ வேதங்களிற்குப் பதில் சைவ ஆகமங்களினை முதன்மைப்படுத்துபவர். ஈழத்தில் கிறித்தவத் திணிப்பினை எதிர்த்து சைவசமயத்திற்காகப் பாடுபட்டவர்.

ஒருவிதத்தில் ஈழத்தில் பார்ப்பன மேலாதிக்க விரிவாக்கத்திற்கும் தடையாகவிருந்தவர், ஆனால் பார்ப்பன மேலாதிக்கத்திற்குப் பதில் வேளாள மேலாதிக்கத்தினை நிலைநாட்ட முயன்றவர் என்ற குற்றச்சாட்டிற்கும் உள்ளானவர். இவர் எழுதிய "பள்ளு, பறை, பெண் மூன்றும் அடிவாங்குவதற்கு என்றே படைக்கப்பட்டவை" என்ற வசனம் இவரது பிற்போக்குத்தனத்தை படம்பிடித்துக் காட்டும். என்றபோதிலும் தமிழிற்கும், சைவத்திற்கும் பெரும் பங்காற்றியவராகவே பெருமளவான ஈழத்தமிழர்களால் இன்றும் மதிக்கப்படுபவர்.

வள்ளலாரோ ஒப்பீட்டுரீதியில் மேற்குறித்த இரு சாதி ஆதிக்கங்களையுமே கடுமையாக எதிர்த்தவர். அவரது பின்வரும் கூற்றுக்கள் அவரது கோட்பாடுகளை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் உதவும்.

"நால்வருணம் ஆசிரமம் ஆசாரம்
முதலா நவின்றகலைச் சரிதம்எலாம்
பிள்ளைவிளையாட்டு"

""சாதியும், மதமும், சமயமும் பொய்"

"கலையுரைத்த கற்பனையே
நிலையெனக்கொண்டாடும் கண்மூடி
வழக்கமெலாம் மண்மூடிப் போக"

**வி.இ.குகநாதன்**

மேற்கூறியவற்றையும் உள்ளடக்கி இவர் இயற்றிய அருட்பா பாடல்கள் 1867 இல் அச்சிடப்படுவதற்கு முன்னரே தமிழர்களிடம் பரவலடைந்திருந்தன. பாரதியார் "புதிய விழிப்பின் முன்னோடி" என்று வள்ளலாரை வியப்பார்.

தீட்சிதர்கள்- வள்ளலார் முரண்பாடு:

---

பார்ப்பனிய மேலாதிக்கத்தினையும், வடமொழிக்காக தமிழ்மொழி வெறுப்புணர்வையும் கொண்டிருந்த தீட்சிதர்களுடன் வள்ளலார் முரண்பட்டது ஒன்றும் வியப்பிற்குரியதல்ல. இதனால் வள்ளலாரே போட்டிச் சிதம்பரம் கோயிலினை வடலூரில் அமைத்ததுடன் "சிதம்பரத்திலிருப்பது சிற்றம்பலமே வடலூரிலேயே பேரம்பலம் உள்ளது" என்றும் கூறியதுடன்

"வருவாரழைத்து வாடி-வடலூர் வடதிசைக்கே

வந்தாற் பெறலாம் நல்வரமே

இந்த வெளியில் நடமிடத்துணிந்தீரே-யங்கே"

எனவும் பாடினார். பிற்காலத்தில் அனைத்து மதங்களிலுமுள்ள நல்ல கூறுகளை எடுத்து சன்மார்க்கம் என்ற அமைப்பினையும் தோற்றுவித்தவர்.

தீட்சிதர்கள்- ஆறுமுகநாவலர் முரண்பாடு:

---

யாழ்ப்பாணத்திலேயே பல சைவக் கோயில்கள் ஆகம விதிப்படி செயல்படவில்லை என்பதைத் தன்னுடைய "யாழ்ப்பாணச் சமய நிலை" என்னும் நூலில் நாவலர் விளக்கியிருப்பார். இதே குற்றச்சாட்டினை சிதம்பரம்கோயில் மீதும் வைத்து சிவதீட்சை பெறாத தீட்சிதர்கள் கையாலே திருநீறு வாங்கக்கூடாது என நாவலர் கூற இம் முரண்பாடு தொடங்கியது. இம் முரண்பாட்டினாலேயே சைவப்பிரகாச வித்தியசாலை அமைத்து சிதம்பரத்தில் காலூன்றும் நாவலரின் கனவு நிறைவேறவில்லை.

வள்ளலார்-நாவலர் முரண்பாடு:

---

வள்ளலாரும் ஆறுமுகநாவலரும் தொடக்கத்தில் நண்பர்களாகவேயிருந்தனர். பிற்காலத்தில் சிறிதளவு புலமைசார் ஆளுமை மோதல் ஏற்பட்டதாகக் கூறுவார்கள். ஒரு நாள் காலை நாவலர் பனிக்காலத்தால் இன்னலிற்குள்ளாகி "பனிக்காலம் கொடிது" எனக்கூற, வள்ளலாரும் அதே தொனிப்பட நல்லது எனக்கூறி நாவலரை வியப்படையவைத்துப் பின்னர் பனிக்கு ஆலம்(நஞ்சு) நல்லது என விளக்க, இந்தப் புலமைப்போர் தொடங்கியதாக ஒரு செவிவழிக் கதை உண்டு. உண்மையில் இந்த முரண்பாட்டினை ஆரம்பித்துவைத்தவை தமிழகத்திலுள்ள திருவாவடுதுறை ஆதினம் போன்ற மடங்களே. இதற்குப் பின்னாலிருந்த சாதிப்பின்புலம் பற்றிப் பார்ப்போம்.

சாதிச் சண்டை:

---

தமிழகத்திலுள்ள மடங்கள் (ஆதினங்கள்) பலவற்றில் இன்றுவரை எழுதப்படாத ஒரு விதியாக அம் மடங்களிற்கான மடாதிபதிகளாக கார் காத்த வேளாளர் (கார் காத்த பிள்ளைமார்) சாதியில் பிறந்தவர்களே வரமுடியும். சைவ மடங்கள் அனைத்தையும் கைவசம் வைத்திருந்த கார் காத்த வேளாளர்களிற்குப் போட்டியாக சாதியில் குறைவாகக் கருதப்பட்ட தொண்டை மண்டல முதலியார் சாதியைச் சேர்ந்த வள்ளலார் புதிதாக ஒரு மடம் அமைத்திருப்பதும், அதற்கப் பெருமளவு மக்கள் அன்பைப் பெற்றிருப்பதனையும் பார்த்துக் கொதித்துப்போன மடங்களே நாவலரை வள்ளலாரிற்கு எதிராகக் களத்தில் இறக்கின.
ஏற்கனவே பார்த்தபடி வேளாள சாதிப்பற்றில் ஊறிப்போன நாவலர் இதற்கு இணைந்து போனமை ஒன்றும் வியப்பிற்குரியதன்று. பார்ப்பனியச் சாதி அடுக்குகளின் நுட்பம் இங்கு தனது வேலையினைக் காட்டிற்று. ஆம், தீட்சிதர்களை எதிர்த்து சிதம்பரத்தைவிட்டு வெளியேறிய இரு பிரிவினரும் தமக்குள் மோதிக்கொள்ள வைக்கப்பட்டனர். தீட்சிதர்களால் சூத்திரர்கள் என இழிவுபடுத்தப்பட்டவர்கள் இப்போது தமக்கிடையே யார் உயர்ந்த சூத்திரர் எனப் போரிடத்தொடங்கினார்கள்.

இந்த நிலையிலேயே வள்ளலாரின் பாடல்களை அவை அருட்பா அல்ல மருட்பா என நாவலர் கூற, அதனைத் தொடர்ந்து அறிக்கைப் போர் இரு தரப்பிலும் இடம்பெற்றது. இங்கு நாவரலரின் வாதம் தேவாரம், திருவாசகம் போன்றவற்றுடன் சேர்த்துக் தமிழகக் கோயில்களில் வள்ளலாரின் அருட்பாவினைப் பாடக்கூடாது என்றிருக்க, யாழ்ப்பாணத்திலோ சைவர்கள் அவரை ஆறுமுக நாயனார் என்றே அழைத்ததுடன் அப்பர், சம்பந்தர் வரிசையில் 'ஐந்தாம் குரவர்' என்றும் அழைத்தனர். இவ்வாறு கருத்தியல் ரீதியில் தொடங்கிய மோதல் விரைவிலேயே வசை பாடலாக மாறியது. இருபக்க வசைபாடல்களும் எழுத்துவடிவிலேயே இடம்பெற்றதனால் இன்றும் அவற்றினை ஆவணமாகக் காணக்கூடியதாகவுள்ளது. அவற்றில் சிலவற்றின் தலைப்புக்களைக் கொண்டே (குதர்க்காரணிய நாச மகா பரசு கண்டனம், இராமலிங்கப்பிள்ளை அங்கதப்பாட்டு, குதர்க்கிகளின் பொய்க்கோள் விலக்கு, சைவ தூஷணப் பரிகாரம்) அவற்றின் உள்ளடக்கத்தினை உய்த்துணரலாம். உள்ளேயோ நாவலர் இணையற்றவர் என்பதனை இணை(சோடி) அற்றவர் எனவே ஆண்மையற்றவர் என வள்ளலார் தரப்பும், மறுபுறத்தில் நாவலர் தரப்பு வள்ளலாரை "பூப்புப் பெண்களைப் புணர்ந்தார்…" "பகலிலே துறவி, இரவிலே காமுகர்", "புறப்புணர்ச்சி செய்பவர்" என்றும் இருதரப்பிலும் கேவலமாகத் திட்டித் தீர்க்கப்பட்டது. சமய ஆச்சாரங்களை கடைப்பிடிப்பவர்களே ஒழுக்கசீலர்கள், சமய நம்பிக்கை கூடக் கூட ஒழுக்கமும் கூடும் என்பவர்கள் ஒருமுறை இந்த ஆவணங்களைப் படித்துப்பார்ப்பது நல்லது. இங்கு இரு பக்கத்திலும் எரிகின்ற நெருப்பினிலே எண்ணை ஊற்றிவளர்க்கும் வேலையினை தீட்சிதர்கள் (பார்ப்பனியம்) செய்துகொண்டிருந்தார்கள்.

மேற்கூறிய முத்தரப்பு முரண்பாட்டினைச் சிறப்பாக பயன்படுத்திக்கொண்டவர்கள் சிதம்பர தீட்சிதர்கள் தரப்பே. தீட்சிதர்கள் தேவையானபோது நாவலர் மூலம் வள்ளலார் தரப்பைத் தாக்கியும், மற்றொரு வேளையில் வள்ளலாரைத் தாங்கியும் கவனமாகக் காய்களை நகர்த்திவந்தனர். ஒரு கட்டத்தில் தீட்சிதர்கள் வள்ளலாரை முழுவதுமாக அணைத்துக்கொண்டு நாவலரைக் கண்டித்து ஒரு கூட்டத்தினை சிதம்பரத்தில் நடாத்தினார்கள். இந்தக்




கூட்டமே வழக்கிற்குக் காரணமான கூட்டமாக அமைந்தது. வள்ளலார் இக் கூட்டத்தில் நாவலர் என்ற சொல்லிற்கு பொய்யன், வித்தையில்லாதவன், நாவில் பழிச்சொல்லுடையோன் போன்ற தவறான விளக்கங்களைக் கொடுத்தார். வள்ளலார் தவறாகப் பேசினார் என்பதனைவிடத் தீட்சிதர்களால் தவறாகப் பேசவைக்கப்பட்டார் என்பதே பொருத்தமாகவிருக்கும். வள்ளலார் இத்துடன் நிற்க, தலைமைத் தீட்சிதரான சபா நடேச தீட்சிதரோ "நாவலரை அடித்து நொருக்கவேண்டும்" என வன்முறையினை வெளிப்படையாகவே தூண்டினார்.


வழக்குப் பற்றிய தவறான விளக்கம்:

---

வையாபுரிபிள்ளை, மா.பொ.சி போன்றவர்கள் எழுதியதனை அடிப்படையாகக் கொண்டு இந்த வழக்குப் பற்றிய ஒரு தவறான

தொடர்ச்சி... (பக்கம் -23 )

# கணிதம் கடினமல்ல ...



கணித தத்துவங்களை நீங்கள் வெறுக்கலாம் அல்லது விரும்பலாம். உங்களுக்கானதே இந்த பகுதி.

உங்கள் மனம் கணிதத்தை விரும்பச் செய்வதற்காக வாராவாரம் கணிதப் புதிர்கள் மற்றும் சவால்களுடன் நான் வருவேன்.

கணிதத்தில் வெறுப்புக் கொண்டவர்களுக்கான ஆலோசனைகளை வழங்குவதும் இதன் நோக்கமாகும்.

இந்த வாரம், கணிதம் குறித்த அடிப்படை அறிவு ஏன் அவசியம் என்பதை விளக்க நான் விரும்புகிறேன்.

இதனை ஆராய நாம் எமது அன்றாட வாழ்க்கையை கவனத்தில் கொள்ளவேண்டும். அலுவலகம் செல்ல பஸ்ஸுக்காக காத்திருக்கும் போது, அதற்கு எவ்வளவு நேரம் பிடிக்கும் என்று நாம் கணித்தாக வேண்டும். எமது மாதாந்த மின்சார, தொலைபேசி கட்டணங்களை செலுத்தும்போது, ஏனைய வீட்டுச் சாமான்களை வாங்கவும், அவசியமான மளிகைப் பொருட்களை வாங்கவும் எவ்வளவு பணம் நமது சம்பளத்தில் மீதம் இருக்கும் என்று எமக்கு தெரிந்திருக்க வேண்டும். அவ்வளவு ஏன், வீட்டில் சமைக்கும் போதுகூட, கறிக்கு எவ்வளவு வாசனைத்திரவியங்கள், உப்பு, புளி போடவேண்டும் என்றும் நாம் அண்ணளவாக கணித்தாக வேண்டும். நாம் தினமும் செய்யும் சில கணிப்பீடுகள் இவை. ஒரு நாளை நீங்கள் எந்த அளவுக்கு கணக்கீடுகளை செய்கிறீர்கள் என்பதை உணர்ந்தால், ஒரு கணித நிபுணராக வர நீங்கள் அதில் பெரும் பி எச் டி பெற்றிருக்கத் தேவையில்லை என்பது உங்களுக்கு புரியும். அந்த அளவுக்கு நீங்கள் அதிகமான கணிதத்தை

**சஹானா ஜோசப்**

தினமும் செய்கிறீர்கள். உண்மையில் நீங்கள் எல்லோரும் ஏற்கனவே கணித நிபுணர்கள்தான். ஆனால், நீங்கள் அதனை உணர்ந்துகொள்ளவில்லை. அவ்வளவே..

(தொடரும்)

## இவ்வாரத் தகவல்:

கணிதம் எவ்வளவு இலகுவானது என்பதை நாம் புரிந்துகொள்ளவில்லையானால், நாம் வாழ்க்கை எவ்வளவு சிக்கலானது என்பதை புரிந்துகொள்ளவில்லை என்றுதான் அர்த்தம் --- ஜோண் வொண் நியுமன்

இவ்வார கணிதப் புதிர்:

பின்வரும் சமன்பாட்டைக் கொண்டு x இன் பெறுமானத்தை கணியுங்கள்.
x ஐ 30 ஆல் பெருக்கி, பதிலை 6 ஆல் வகுக்கவும். விடை என்ன?

A: 1155  B: -127.5  C: 150  D: இவை எதுவும் அல்ல

பதிலுக்கு அடுத்தவாரம் அரங்கம் செய்திகள் பத்திரிகையை பார்க்கவும்.

## விளம்பரம்




## கவிதை

# மறத்தமிழர்!

**சட்டத்தரணி, பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா**



அரங்கேற்றமாம் அழைப்பு வந்தது!
ஆங்கிலத்திலும் தமிழிலும்!
அழகான வண்ணத்தில், மினுமினுக்கும்
தாளில்!

நமது சனம் நாடுவிட்டு நாடு வந்தாலும்
நமது மொழியை மறக்கவில்லை!
பண்பாட்டைத் துறக்கவில்லை!!
உடல் புல்லரித்தது!

ஒவ்வொரு மயிரும் நிலைகுத்தி நின்றது.
தமிழனா கொக்கா? மண்ணாங்கட்டி!
காதல் மனைவி காஞ்சிபுரம் பட்டுடுத்தாள்
பேதம் சொல்லாமல் என் பிள்ளை
தாவணியில்

நானும் பச்சைக் கரைவேட்டி பகட்டாய்
உடுத்தி
இச்சைக்குகந்த எழிலான சால்வையினை
எட்டாய் மடித்து இருதோளில் ஊசிகுத்தி..

ஆகா! என்னே அழகு!
காரில் ஏறினோம், கலகலப்பாய்ப்
பயணித்தோம்
மாலை ஐந்தரைக்கே மண்டபத்தில்
நின்றிட்டோம்!

குத்து விளக்கென்ன, கும்பமென்ன
குங்குமம் சந்தனக் கிண்ணமென்ன
பத்து மங்கையர்கள் மண்டப வாயிலில்
இருபுறமும்

பாவாடை தாவணியில் பவ்வியமாய்
நின்றார்கள்
பன்னீர் தெளித்தார்கள், திருநீறு
சந்தனம் சீராகத் தந்தார்கள்
புன்னகைத்த முகத்தோடு கற்கண்டு
பகிர்ந்தார்கள்

அத்தனையும் தமிழ் பண்பாட்டை
அழகாகக் காட்டினவே!
ஆகா இவர்கள் தமிழர்கள்! இவர்கள்தான்
தமிழர்கள்!
அன்னிய மண்ணிலும் அன்னைத்
தமிழுக்கு

அணிசெய்யும் மறத்தமிழர்கள்!
எண்ணியபோதே இதயம்
இறும்பூதடைந்தது!
திண்ணிய நெஞ்சும் ஒருகணம் திரண்டு
நிமிர்ந்தது!

அரங்கேற்றம் தொடங்கிற்று.
ஐயர் வந்தார்!
பையப் பையவே பூசைகளை
பக்குவமாய்ச் செய்தார்.
வந்திருந்த எல்லோரும் எழுந்து நிற்க
மந்திரம் சொன்னார் ஐயர் வடமொழியில்!
சுக்கிராம் பிரதணம்...விஸ்னும் சசீபர்ணம்..

ஐயர் தமிழர்தான், தமிழ் ஆண்டவனுக்கு
விளங்காது!
தமிழில் சொல்வதற்குத் தர்ப்பை
வழிவிடாது
மெய்யாவே வடமொழி அவருக்கும்
தெரியாது

விளங்காது கும்பிட்டோம் நாமேதும்
பறையாது

பாடியவர் தமிழர், பாட்டுக்களும்
தமிழ்தான்
ஆடிய பிள்ளை அசல் தமிழிச்சி!
அவளின் பெற்றோரும் அசல் பச்சைத்
தமிழர்
பயிற்றுவித்த ஆசிரியையின் பரம்பரையே
தமிழ்தான்
பக்கத்தில் இசைகொடுத்த எல்லா
விற்பன்னரும் தமிழர்தான்.

ஆயிரம்பேர் பார்வையாளர்கள்
அமர்ந்திருந்தார்
அனைவரும் தமிழர்கள்,
ஆங்கிலத்தில் தூசு துப்பரவாய் பேசத்
தெரியாதோர்
அவர்களிலே அறுபது வீதம் இருப்பார்
ஆடியவர், பாடியவர், அரங்கிலே கூடியவர்
அழகாய் உடுத்தி வந்த அறிவிப்பாளர்

அத்தனையும் தமிழர்!
ஆனால் அறிவிப்புமட்டும் ஆங்கிலத்தில்!

தமிழர் பெயரையெல்லாம் தாறுமாறாய்க்
கடித்து
தடக்கி முடக்கி தாள, ராக வகை
சொன்னாலும்

ஆங்கில உச்சரிப்பு அழகிலே அவையே
சொக்கியது

அறவே விளங்காதோரும் அடுத்தவரைப்
பார்த்து

அடிக்கடி சிரித்தே ஆகாவென்று
கைதட்டுகிறார்.

அவ்வைக்குச் சுட்டபழம் அழகான
அபிநயத்தில்
ஆனால் விபரிப்போ ஆங்கிலத்தில்!
கண்ணன் தயிரைக் களவாடித்
தின்றதெல்லாம்
வண்ணத் தமிழில் வடித்தெடுத்த
பாடலுக்கு
மின்னும் அரங்கில் மிகவடிவாய்
அபிநயித்தால்
என்ன இழவுக்கு இங்கிலீசு
வியாக்கியானம்?

வாழ்க தமிழ்!
எவரும் தமிழனை அடிமையென்று
சொல்லவில்லை!
எவருக்கும் அடிமையாகாமல் தமிழனால்
இருக்கவே முடியவில்லை!



## மீன்பாடும் தேனாட்டில் பயணியின் பார்வையில்...

# 'நகைச்சுவை நாயகம்' பாக்கியநாயகம் (1931-1994) நினைவுகள்



ரீ. பாக்கியநாயகம்

கிழக்கிலங்கையை 1978 இல் சூறாவளி தாக்கிய சமயத்தில் எனது உறவினர்கள் சிலர் அங்கு பாதிப்புக்குள்ளாகியிருந்தனர். கொழும்பு - மட்டக்களப்பு மார்க்கத்தில் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

ஒருநாள் வீரகேசரியில் மாலை வேலை முடிந்து எனது ஊருக்குச்செல்வதற்காக புறக்கோட்டை பஸ் நிலையம் வந்து, மட்டக்களப்பிற்கு பஸ் செல்லுமா? என விசாரித்தேன். அன்று நள்ளிரவு ஒரு பஸ் பதுளை மார்க்கமாக அம்பாறை சென்று, அங்கிருந்து மட்டக்களப்பு பாதை சீராக இருந்தால் செல்லும் என்றார்கள்.

தாமதிக்கமால் ஊர் திரும்பி அவசர அவசரமாக சில உலர் உணவுப்பொருட்களும் அரிசி, சீனி, மாவு, தேயிலை, கோப்பி ஆகியனவற்றையும் வாங்கிச்சேகரித்து எனது தம்பியையும் அழைத்துக்கொண்டு அன்றிரவே பதுளை மார்க்கமாக மட்டக்களப்பு பயணமானேன்.

மட்டக்களப்பில் ரயில் நிலையத்திற்கு சமீபமாக அமைந்த வீடமைப்புத்திட்டத்தில் வசித்த கலை, இலக்கியவாதி எதிர்மன்ன சிங்கம் அவர்களின் மனைவியின் தங்கையை எனது சித்தப்பா முறையான ராஜா என்பவர் திருமணம் செய்திருந்தார்.

அவர்களின் திருமணத்திற்கும் நான் சென்றிருக்கின்றேன். சித்தப்பாவின் தாயார் மட்டக்களப்புக்கு சென்றிருந்த வேளையில் சூறாவளி அங்கு கோரமாக நர்த்தனமாடியிருந்தது.

மேலும் சில உறவினர்கள் கல்முனை - பாண்டிருப்பிலும் பாதிக்கப்பட்டிருந்தனர். இவர்களைப் பார்த்து தேவையான உதவிகளை செய்வதற்காகத்தான் அந்தப்பயணத்தை மேற்கொண்டேன்.

எதிர்மன்னசிங்கம் அப்பொழுது மட்டக்களப்பு கச்சேரியில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவரைச்சந்தித்ததும் " இங்கு எழுத்தாளர்கள் யாரையாவது பார்க்கவேண்டும்" என்றேன்.

உடனே எங்கள் அத்தை, " நீ... எழுத்தாளர்களைப்பார்க்க வந்தாயா...? அல்லது எங்களைப்பார்க்க வந்தாயா..?" என்று உரிமையுடன் கேட்டார்.

"நான் எங்கு சென்றாலும் எனது வர்க்கத்தினரையும் தேடிச்செல்வேன்." என்றேன்.

அத்தைக்கு வர்க்கம் என்ற சொல் புரியவில்லை. பின்னர் அதுபற்றியும் அவர்களுக்கு விளக்கவேண்டியிருந்தது. "மட்டக்களப்பு கச்சேரியில் ரீ. பாக்கியநாயகம் பணியாற்றுகிறார்" எனச்சொன்னார் எதிர்மன்னசிங்கம்.

பாக்கியநாயகத்தின் பல நடைச்சித்திரங்கள் எங்கள் வீரகேசரியில் வெளிவந்துள்ளன. அவற்றை தொழில் ரீதியில் ஒப்புநோக்கியிருக்கின்றேன். நகைச்சுவையாக எழுதுவார். சமகால பிரச்சினைகளை அவற்றில் நயமாகத்தொட்டிருப்பார்.

அவரது வாசகனாக மாத்திரமே அவரது எழுத்துக்களை விரும்பிப்படித்திருக்கின்றேன்.

அவர் கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டுநகரில் பல கலை - இலக்கிய - சமூகப்பணிகளுக்கு உந்து சக்தியாகத் திகழ்ந்திருப்பவர்.

தாமதிக்காமல் அவரைப்பார்ப்பதற்காக மட்டக்களப்பு கச்சேரிக்குச்சென்றேன். அது கோட்டையினுள் அமைந்திருந்தமையால் அந்தப்பிரதேசம் எனது மனதில் பசுமையாக பதிந்திருக்கிறது.

ரீ. பாக்கியநாயகம் அவர்கள் அந்தக்கோட்டைக்குள்ளிருந்து கலை, இலக்கிய கொடி கட்டிப்பறந்தவர் என்றுதான் சொல்லவேண்டும். கல்வி, தொழில், அந்தஸ்து இருப்பவர்கள் - புகழ், செல்வம் மிகுந்தவர்கள் அவற்றை தமது சமூகத்தின் மேன்மைக்காக பயன்படுத்தல் வேண்டும்.

அவ்வாறு செய்தால்தான் அவர்கள் அனுபவிக்கும் வளங்களுக்கு அர்த்தம் இருக்கும்.

இந்தப்பதிவை நான் எழுதிக்கொண்டிருக்கும் போது ஒரு இலக்கிய சகோதரி, கனடாவிலிருந்து எனக்கு அனுப்பிய மின்னஞ்சலில், தான் தமிழில் எம். ஏ. படிப்பதாகவும் அதற்கான பரீட்சைக்கு தயாராகியிருப்பதாகவும் எழுதியிருந்தார்.

அவருக்கு வாழ்த்து தெரிவித்து பதில் அனுப்பியபோது, "உங்கள் தமிழ் எம்.ஏ. பட்டம் சமூகத்திற்கும் பயன்படல் வேண்டும்" என்று குறிப்பிட்டேன்.




இந்தப்பதிவில் நான் எழுதும் இலக்கிய நண்பர் 1931 ஆம் ஆண்டு பிறந்து 1994 ஆம் ஆண்டு மறைந்துவிட்டார்.

அவர் மட்டக்களப்பில் தான் வகித்த பதவியை குடும்பத்தின் வருமானத்திற்காக சம்பளம் பெறும் ஊழியமாக மாத்திரம் கருதவில்லை. தனது பதவியின் ஊடாக பல கலை, இலக்கிய செயற்பாடுகளுக்கு ஊக்கியாகவே வாழ்ந்திருக்கிறார்.

மட்டக்களப்பு கச்சேரியில் சமூகசேவைத் திணைக்களத்தில் எழுதுவினைஞராக பணியாற்றியவாறு, எழுத்துத்துறையில் ஈடுபட்டு எழுதிக்கொண்டே இருந்தவர். மற்றவர்களையும் எழுதுவதற்கு தூண்டியவர். அக்காலகட்டத்தில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர்களாக பதவி வகித்தவர்களுடன் நல்லுறவைப்பேணி பல பொதுப்பணிகளில் கலை, இலக்கியவாதிகளையும் தமிழ் அறிஞர்களையும் இணைத்துக்கொண்டார்.

தொடர்பாடல் சமூகத்திற்கு இன்றியமையாதது. பல எழுத்தாளர்களிடம் எழுதும் ஆற்றல் இருந்தாலும் தொடர்பாடலில் மிகுந்த பலவீனமானவர்களாகவும் கூச்ச சுபாவம் கொண்டவர்களாகவும் இருப்பர். ஆனால், பாக்கியநாயகம் போன்றவர்கள் இதுவிடயத்தில் விதிவிலக்கு.

மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராக, மட். பிரதேச கலா மன்றத்தின் செயலாளராக, 1976 இல் அங்கு நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டின் அமைப்புச்செயலாளராக இயங்கியவாறு " சுமைதாங்கி" என்ற மாத இதழின் ஆசிரியராகவும் செயல்பட்டவர்.

தமிழ், ஆங்கில இதழ்களிலும் தொடர்ந்து எழுதிவந்தவர். அத்துடன் சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். மட்டக்களப்பு பிரதேசத்தில் நடக்கும் முத்தமிழ்

**முருகபூபதி – அவுஸ்திரேலியா**

விழாக்கள், கலை -இலக்கிய சந்திப்புக்கள், மாணவர்கள் மத்தியில் நடத்தப்படும் கலை, இலக்கியப்போட்டிகள், தமிழகத்திலிருந்து எழுத்தாளர்கள் எவரேனும் வருகை தந்தால் அவர்களுக்காக நடத்தப்படும் நிகழ்ச்சிகள், அண்ணாவிமார் மாநாடு, இன்னிசை மாலைகள், நூல், இதழ் வெளியிட்டு அரங்குகள் யாவற்றிலும் பாக்கியநாயகம் அவர்களின் பங்களிப்பும் கடும் உழைப்பும் நிச்சயம் இருக்கும்.

சுருக்கமாகச் சொன்னால் அவர் மேற்குறித்த சமூகப்பணிகள் யாவற்றிலும் அச்சாணியாகவே திகழ்வார். வீரகேசரி வாரவெளியீட்டில் " சொல்லத்தான் நினைக்கிறேன்" என்ற தலைப்பில் தொடர்ச்சியாக நகைச்சுவை நடைச்சித்திரங்களை எழுதிவந்தார். அத்துடன் தமிழக இதழ்களான ஆனந்தவிகடன், கலைமகள் முதலனாவற்றிலும் மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் பற்றிய ஆய்வுகளையும் வரவாக்கினார். அதன் ஊடாக தமிழக வாசகர்களுக்கு ஈழத்தின் தொன்மையான நாட்டார் இலக்கியத்தை அறிமுகப்படுத்தினார்.

அதிர்ந்து பேசத்தெரியாத இயல்புகொண்டவர். அவரை 1978 இல்தான் முதல் முதலில் சந்தித்துப்பேசினேன். எளிமையானவர் என்பதனால் உள்ளம் கவர்ந்தார். அவருக்கு ஆன்மீக நம்பிக்கைகளும் இருந்தன.

கச்சேரியில் தான் வகித்த பதவியை சமூகத்திற்காக நன்கு பயன்படுத்திய பெருந்தகைதான் அமரர் ரீ. பாக்கியநாயகம். சமூகத்தின் அன்றாட நடப்புகளை அவதானித்து, அங்கதச்சுவை குன்றாமல் பதிவுசெய்து வந்திருக்கும் பாக்கியநாயகம் அவர்களை நகைச்சுவை நாயகம் எனவும் அழைப்பர்.

அவரது மறைவு மட்டக்களப்பு தமிழகத்திற்கு ஈடு செய்யவேண்டிய இழப்பு என்றுதான் கருதுகின்றேன். அத்தகைய மனிதர்கள் மறைந்தால், அவர்கள் விட்டுச்சென்ற பணிகளை தங்கு தடையின்றி தொடருவதுதான் அன்னார்களுக்கு செய்யும் சிறந்த அஞ்சலியாகும்.

அவர் வாழ்ந்த வாழ்க்கையை இன்றைய இளம் தலைமுறைப்படைப்பாளிகளும் கலைஞர்கள், சமூகப்பணியாளர்களும் தெரிந்துகொள்ளத்தக்க நினைவு அரங்குகளை மட்டக்களப்பு தமிழ் சமூகம் நடத்தவேண்டும் என்ற வேண்டுகோளையும் இச்சந்தர்ப்பத்தில் அரங்கம் இதழின் ஊடாக விடுக்கின்றேன்.

## இரத்ததான நிகழ்வு



மட்டக்களப்பு தாண்டவன்வெளி, புனித காணிக்கை அன்னை ஆலயம் தனிப்பங்காக ஏற்படுத்தப்பட்ட நூற்றாண்டு நிறைவை இவ்வருடம் அனுட்டிக்கின்றது. இதனைச் சிறப்பிக்குமுகமான நிகழ்வாக 19.08.2018 அன்று காலை பேர்டினன்ஸ் மண்டபத்தில் தாண்டவன்வெளி, பங்கு மேய்ப்புப்பணிச்சபையின் ஏற்பாட்டில் பங்குத்தந்தை அருட்தந்தை.ப.ரமேஷ்



கிறிஸ்றி தலைமையில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, இரத்தவங்கியின் வைத்தியர், தாதிய உத்தியோகத்தர்கள் உட்பட பலர் இந்நிகழ்வுக்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் பங்கின் இளைஞர், யுவதிகளுடன் ஏனையோரும் வருகைதந்து இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

- ஜே.எச்.இரத்தினராஜா

# மூதாதையரின் காலடிகள்

## மூதூர்



பாலசுகுமார் சேனையூர்
மேனாள் முதன்மையர்
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக் கழகம்

மூதூர் என நாம் அறியப்படுகிற நகரத்தின் வரலாறு மிகப் பழமையானது. மூதூர் என்பதற்கு நாம் இரண்டு வகையாக பொருள்கோடல் செய்யலாம்;. ஒன்று மூதூர் என்பது மூத்த ஊர் அல்லது பழைய ஊர் என்பதாகும். மற்றயது முத்தூர் என்பதாகும். அதாவது முத்துக்கள் விளைந்த ஊர் முன்னைய நாட்களில் முத்தெடுக்கும் தொழில் நடைபெற்றதாக கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. ஒரு முறை மூதூரை அடுத்துள்ள எங்கள் சேனையூர் கழியோடையில் எடுக்கப்பட்ட மட்டியிலிருந்து என் அம்மம்மா முத்தெடுத்த சம்பவத்தை இந்த கதைகளினூடு பொருத்திப் பார்க்க முடியும்.

மூதூரில் முத்து விளைந்ததை திருஞான சம்பந்தர் தன் தேவாரப் பதிகத்தில் இப்படிச் சொல்லியுள்ளார்.

“குரை கடலோதம் நித்திலம் கொலிக்கும்
கோணமா மலை அமர்ந்தாரே“.

திருகோணமலை துறைமுகம் பண்டைக் காலம் முதல் உலக அளவில் அறியப்பட்டதாயும், கேந்திர முக்கியத்துவம் உடையதாயும் விளங்கியதைப் போல மூதூரும் ஈழத்தின் பண்டைய வியாபார துறைமுகமாக விளங்கியதற்கான சுவடுகள் இன்னமும் உள்ளன. தமிழர்களின் பூர்விக நிலங்களில் மூதூர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று நகரம். பண்டைக் காலத்தில் ஒரு வணிக நகராக இது இருந்திருக்கிறது.

பரதவர் குடியிருப்பு நிலம்

சங்க இலக்கியங்கள் பரதவர் பற்றி நிறையவே சொல்கின்றன. கடல் வணிகம் இவர்கள் கைகளிலேயே இருந்திருக்கிறது. கப்பல் கட்டுதலும், கடல் வணிகமும், மீன் பிடியும் முக்கியப்பட்ட இடமாயும், மாவலியின் கடல் சங்கமிப்பு, அதன் கரை வழி நாகரிகமும், விவசாயமும் இணைந்த வாழ்வாய் மூதூர் விளங்கியதுடன் நெற்களஞ்சியமாய் திகழவும் வழிவகுத்தது.

ஈழத்தின் தமிழர் துறைமுகங்களாய் இருந்த வல்வெட்டித்துறை, மன்னார், நீர்கொழும்பு, அமிர்தகழி ஆகியவற்றுடனான தொடர்புகள் மூதூருக்கு இருந்திருக்கின்றன.

பண்டைய தமிழக துறைமுகங்களான தொண்டி, கொற்கை ஆகியவற்றுடனான தொடர்புகளுக்கான சாத்தியப்பாடுகளும் உள்ளன. முத்து வணிகம் செய்வோர் இங்கு வந்து முத்துக்கள் மற்றும் யானைத் தந்தங்கள் ஆகியவற்றை கொள்வனவு




செய்து பாரசீக நாடுகளுக்கு சென்றிருக்க வாய்ப்புக்கள் உண்டு.

என் இளமை நாட்களாகிய 1965ம் ஆண்டுகளில் மூதூர் பழைய துறைமுகத்தில் சிறிய கப்பல்கள் கட்டும் தொழிலை பார்த்திருக்கின்றேன். அத்துடன் பல பாய்மரக் கப்பல்கள் தரித்திருந்து பொருட்களை ஏற்றுவதையும், இறக்குவதையும் கூட கண்டிருக்கிறேன். சிறிய கப்பல்கள் “வத்தை“ என அழைக்கப்பட்டன.

இலக்கிய கலாநிதி வ.அ.இராசரெத்தினம் தன்னுடைய சந்தானாள் புரவி எனும் நாவலில் இந்த பண்பாட்டை அழகாய் விபரித்திருப்பார்.

கடந்த பல நூற்றாண்டுகளில் தமிழக திருநெல்வேலி, தூத்துகுடி துறைமுகங்களினூடான தொடர்புகளும், வணிக உறவுகளோடு திருமண கொண்டு கொடுப்புகளும் இருந்திருக்கின்றன .

சோழர்களின் கடலாதிக்க காலத்தில் மூதூர் கவனம் பெற்ற ஒரு துறைமுகமாக இருந்திருக்கிறது.

மூதூர் முகத்துவாரத்துக்கு பக்கத்திலிருக்கும் கங்கைத்துறை வருடம்தோறும் ஆதிகோண நாயகர் தீர்த்தமாடும் கலாசார மையமாக திகழ்கிறது. தம்பலகாமம் ஆலங்கேணி, கொட்டியாரம் என உறவுகள் சங்கமிக்கும் வரலாற்றின் நீட்சியும் இங்கு காணமுடிகிறது.

மூதூர் நகரத்தை அண்மித்ததாய் இருக்கும் மூன்றாம்கட்டை மலை அதன் பழைய பெயர் ராஜவந்தான் மலை. அந்த மலை உச்சியில் ஒரு சிவன் கோயில் இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

மலையின் கிழக்கு அடிவாரத்தில், 1979ல் நானும் பேராசிரியர் இந்திரபாலாவும் ஒரு சோழர் கால கல்வெட்டை கண்டறிந்தோம். அது இராஜேந்திர சோழன் காலத்து கல்வெட்டு அதில் சுவஸ்தி சிறி பொறிக்கப்பட்டு மலையில் இருக்கும் கோயிலுக்கே கண்ணுக்கெட்டிய தூரம் வரையுள்ள வயல்கள் சொந்தம் என பொறிக்கப் பட்டிருந்தது.

---

தொடர்ச்சி...

### ‘தமிழ் கட்சிகளின் சந்திப்பு - கிழக்கு தமிழர் ஒன்றிய முயற்சி களுக்கு கிடைத்த பெரு வெற்றி’

இணைந்து போட்டியிடுவது குறித்த ஒரு புரிந்துணர்வு ஒப்பந்த வரைபு ஒன்று உருவாக்கப்பட்டு அது அனைத்துக் கட்சிகளின் பரிந்துரைகளுக்காக அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று அறிவித்துள்ள கிழக்கு தமிழர் ஒன்றியம், அதன் பின்னர் தமது இறுதி முடிவை மக்கள் முன்பாக தாம் கொண்டு செல்வோம் என்றும் கூறியுள்ளது.

கிழக்கு மாகாண மக்களின் நலன் சம்பந்தமாக தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றாக கூடிய முதல் சந்திப்பு இது என்றும், நீண்ட காலமாக இந்த முயற்சிகளில் ஈடுபட்டுவரும் கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழ் கட்சிகள் மத்தியில் கொள்கை ரீதியில் பல முரண்பாடுகள் காணப்பட்டாலும், அவற்றை முன்னிலைப்படுத்தாமல், மக்களின் நலனை முன்னிட்டு, முரண்பாட்டுக்குள் ஒரு இணக்கப்பாட்டை காணும் முயற்சிதான் இந்த திறந்த சந்திப்பின் நோக்கம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தமிழர் நலனை முன்னிட்டு, அவர்களுக்கு கிழக்கு மாகாண சபையில் அதி உச்சபட்ச ஆசனங்களை உறுதிப்படுத்திக் கொள்வதுதான் இந்த முயற்சியின் நோக்கமே தவிர, இது எந்தவொரு சமூகத்துக்கும் எதிரானது அல்ல என்றும் கோபாலகிருஷ்ணம் தெரிவித்தார்.



---

தொடர்ச்சி...

### விமர்சனம் எது? தனிநபர் இழிவுபடுத்தலின் எல்லை எது?

இல்லை.

இன்னும் ஒன்று கருத்துச் சுதந்திரத்தை கையில் எடுத்துகொண்டு கருத்து சொல்கின்றோம் என்றோ அல்லது விவாதிக்கிறோம் என்றோ வாயில் வந்ததை எல்லாம் எழுதுவர் பேசுவர். இதில் ஊடகங்களுக்கும் பொறுப்பு உண்டு, இப்போதெல்லாம் எல்லாரும் வேப்சைட்டே வைத்துள்ளனர், மற்றும் சமூக வலைத்தளங்களிலும் செய்தி என்ற பெயரில் வெறுப்பையும் இனவாதத்த்யும் மத வாதத்தையும் கக்குகின்றனர்.

கருத்து சுதந்திரம் எல்லோருக்கும் உண்டு ஆனால் எம் கருத்து இருவருக்கிடையேயோ அல்லது இரு குழுக்களுக்கிடயேயோ அல்லது இனத்துகிடையேயோ, வன்முறையையோ, பிரிவினையையோ துவேஷத்தையோ உண்டக்கலாகாது. இன்னும் தெளிவாக சொன்னால் உன்னுடைய கருத்தால் இன்னும் ஒருவரை கொலை செய்ய தூ ண்டும் கருத்துச் சுதந்திரம் உனக்கில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். .

இந்த இரு குறைகளாலும் ஆண்களை விட பெண்கள் பன்மடங்கு பாதிக்கப்படுகின்றனர், காரணம் குடும்ப மானம் அல்லது கௌரவம் என்பவை பெண்களின் மீதே சமூகத்தால் திணித்து வைக்கபட்டுள்ளன. ஆகவே பொதுவெளியில் பெண் சமூகம் சார்ந்து சொன்ன விடயங்கள் அல்லது கருத்துக்கள் அல்லது அவளுடைய செயற்பாடுகள் அவளை தனிநபர் தாக்குதல் அல்லது விமர்சனதுக்கு உள்ளாக்குகின்றது. துணிவான பெண்ணும் கூட குடும்பமானம், துணைவரின் கௌரவம் அல்லது பிள்ளைகளில் எதிர்காலம் என்ற காரணங்களுக்காக இவ்வகையான தனிநபர் தாக்குதல் அல்லது விமர்சனம் காரணமாக காணாமலே போகின்றாள். அவளுடைய சேவை சமூகத்து கிடைக்காமலே போகின்றது.

இவை எல்லாவற்றுக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக எங்களுடைய கல்வி முறையும், கல்வி கற்பிக்கும் முறையும் பரீட்சையில் சித்திபெற கணிப்பில் எடுக்கப்படும் விடயங்களும் காரணமாக இருக்கின்றான. உதாரணமாக வினாத்தாளில் எழுதப்படும் விடையை மையப்படுத்தியே அவர்கள் சித்தி அடைய வைக்கப்படுகின்றனர். பத்துவருட கடந்தகால வினாத்தாள்களை செய்து முடித்தால், கொடுக்கும் குறிப்புக்களை மனப்பாடம் செய்தால் பரீட்சையில் வேற்றி பெறலாம்.

பாடசாலைகளில் இன்னும் பிள்ளைகள் சுதந்திரமாக ஆசிரியரை அல்லது ஆசிரியையை கேள்வி கேட்கமுடியாது, அல்லது அவர் கற்று கொடுப்பதில் விமர்சன



ரீதியில் கேள்வி இருந்தால் அதை சொல்ல முடியாது.

அப்படி சொல்லும் இடத்து வகுப்பை குழப்புகிறார்கள் அல்லது அதிகப்பிரசங்கி என்ற பெயர்கள் வருகின்றது.

கல்விகற்கும் காலத்திலிருந்தே நாம் எல்லாவிடயங்களையும் பல கோணங்களில் பார்க்கவும் சிந்திக்கவும், விமர்சிக்கவும் கேள்வி கேட்கவும் பழக்கப்படுத்தப்படவேண்டும், ஊக்கபடுத்தப்படவேண்டும், இவ்வாறு செய்வதன் மூலம் எம் குழந்தைகளுக்காவது ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்து கொடுப்போம் என உறுதி பூணுவோம்.

---



# கட்டிளமைப் பருவ உளநலம்




## உளச்சோர்வு / மனச்சோர்வு நோய்



மனச்சோர்வு நோய் தற்போது நோய் பரம்பலில் 3வது இடத்தில் உள்ளது. 2030ம் ஆண்டளவில் இது முதலாவது இடத்தை எட்டிவிடும் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை செய்கிறது. தற்போதைய அளவில் 350 மில்லியன் மக்கள் உளச்சோர்வு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இது வயது, பால், நிறம், மொழி, சமயம் என்ற எந்த வேறுபாடுமின்றி அனைத்து வயதினரையும் பாதிக்கின்றது. அபிவிருத்தியடைந்தது, அடைந்து வருகின்ற, அடையாத என்ற வேறுபாடுகள் இன்றி அனைத்து நாடுகளிலும் உள்ள மக்களிடையே பொதுவாக காணப்படுகின்றது. இந்நோயால் ஒருவர் பாதிக்கப்படும் போது சாதாரணமாக ஒருவரால் செய்யப்படுகின்ற நாளாந்த செயற்பாடுகள், ஏனையவர்களுடனான உறவு முறைகள், உரையாடல்கள், கல்விச் செயற்பாடுகள், தொழில் நடவடிக்கைகள், எதிர்கால திட்டங்கள், வருமானம் ஈட்டக்கூடிய செயற்பாடுகள் போன்ற ஒரு மனிதனின் உயிரியல் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து விடயங்களும் பாதிக்கப்படுகின்றன.

உளச்சோர்விற்கும் தற்கொலைக்கும் இடையில் மிகப்பெரிய தொடர்பு உள்ளது. 15-29 வயதினரிடையே ஏற்படுகின்ற மரணங்களில், தற்கொலையால் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் இரண்டாவதாக உள்ளது. மிக மகிழ்ச்சியான செய்தி “உளச்சோர்வு“ நோய் வராமல் தடுப்பதற்கான வழிமுறைகள் இருப்பது போல், முற்றிலும் குணமாக்கலிற்கான பயனுடைய சிகிச்சைகளும் உளநலத்துறையில் உள்ளன.

டாக்டர். பி. யூடி ரமேஸ் ஜெயக்குமர்
உளநல மருத்துவர்
வாழைச்சேனை மருத்துவமனை



உளச் சோர்வு / மனச்சோர்வு நோய்

---

கடுமையான மனச்சோர்வு நோயினால் பாதிக்கப்பட்டர்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். மனச்சோர்வு மிகப்பரவலாக காணப்படும் ஒரு முக்கிய உள நோய் ஆகும். இது சிலவேளை தற்கொலைக்கும் இட்டுச்செல்லும். மனச்சோர்வின் குணங்குறிகள் பொதுவாகப் பல்வேறு விதமான இயலாமைகளாய் வெளிப்படுத்தப்படுகின்றன. உதாரணமாக படிக்க இயலாமை, வேலை செய்ய இயலாமை, விளையாட இயலாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அன்புக்குரிய குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் ஒருவரின் இழப்பு (இழவிரக்கம்), வீடு, வாசல் மற்றும் சொத்து இழப்புக்கள், கடும் வறுமை, வேதனை தருகின்ற அல்லது ஆயுட்காலத்தை குறைக்கின்ற நாட்பட்ட மோசமான நோய்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை போன்றன மனச்சோர்வுக்குரிய மிகப் பொதுவான காரணங்களாகும். இதை விட ஒருவர் தனது சொந்த சமூதாயத்திலேயே மதிப்பிழக்கக்கூடிய அல்லது மற்றவர்களால் கீழ்நிலையில் பார்க்கப்படக்கூடிய நிலைமைகளான வேண்டத்தகாத கர்ப்பம், குடும்பப் பிரிவு அல்லது விவாகரத்து, வேலையை இழத்தல், வேலையால் நிற்பாட்டப்படுதல் போன்றனவும் மனச் சோர்வுக்கு காரணமாகலாம். இவற்றை விட பயத்தையும், உளப்பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகளான கற்பழிப்பு,கொள்ளை, ஆட்கடத்தல் போன்றனவும் மனச் சோர்வை ஏற்படுத்தும்.இருந்தபோதும், சில மனச் சோர்வு நோயாளிகளில் அதை ஏற்படுத்தியிருக்கக்கூடிய எந்த விதமான காரணங்களையும் கண்டுபிடிக்க இயலாது இருக்கும். இவர்களில் மனச்சோர்வு நோயானது ஒருவிதமான புறக்காரணிகளுமின்றி தானாகவே ஏற்பட்டிருக்கும்.

சாதாரணமாக ஒருவருக்கு ஏதாவது ஓர் இழப்பு ஏற்பட்டால் அவர் சிறிது காலம் கவலைப்பட்டுவிட்டு, பின்பு தானாகவே அதிலிருந்து மீண்டு விடுவார். அவர் மனச் சோர்வு நோயால் பாதிப்புறுவதில்லை. ஆனால் மனச் சோர்வு நோய் ஏற்பட்ட ஒருவர் கிழமைக்கணக்காக, மாதக்கணக்காக மிகவும் கவலையாக இருப்பார். வாழ்க்கையில் எதுவுமே உதவப்போவதில்லை என்ற விரக்தியில் இருப்பார். பொதுவாக அவர் தனக்கு தேவைப்படும் உதவிகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க மாட்டார். எதுவுமே தனது நிலமையை மாற்றப் போவதில்லை என்றோ, தான் இவற்றுக்கெல்லாம் “லாயக்கில்லை என்றோ“ அவர் எண்ணுவார்.

மனச்சோர்வின் பொதுவான குணங் குறிகளாவன

---

கவலையில் மூழ்கியிருத்தல். சோகத்தில் ஆழ்ந்திருத்தல். இலகுவில் அழுதல் அடிக்கடி அழ வேண்டும் போலத் தோன்றுதல், தொடர்ச்சியாக யோசித்தபடி இருத்தல்.

எதிர்காலத்தில் நம்பிக்கையின்மை (விரக்தி). தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கைக் குறைவு, வாழ்க்கையில் சந்தோஷமின்மை (வெறுப்பு - ஒன்றுக்கும் விருப்பமில்லை) உதவியற்றநிலை (கையறு நிலை), தான் பிரயோசனமற்றவர் என்ற நினைப்பு (ஒன்றுக்கும் உதவாமல் போன நிலை, மற்றவர்களுக்குச் சுமையாக இருத்தல்; தனக்குத்தானே தீங்கு செய்யும் மனநிலை - தற்கொலை எண்ணங்கள், குற்றவுணர்வுகள், இறப்பு பற்றிய, தற்கொலை பற்றிய எண்ணங்கள் (இருந்தென்ன பிரயோசனம்), நித்திரை குழப்பம், (நித்திரையின்மை - வழமையாக எழும் நேரத்திலும் முன்னராக எழும்புதல், ஆனால் படுக்கையை விட்டு எழுந்து வேலை செய்ய மனமின்மை), பசியின்மை, உடல் மெலிவு, பாலுறவில் நாட்டமின்மை, இலகுவில் களைப்படைதல், பலவீனமாக இருத்தல் (இயலாமை), கருத்தூன்றல் மற்றும் ஞாபகசக்தி என்பவற்றில் குறைபாடு (மறதிக்குணம்), முன்னர் விருப்பமாக செய்த விடயங்களை செய்யமுடியாமை, தலையிடி, நெஞ்சு நோ, கைகால் உளைவு, உடம்பு முழுவதும் எரிதல் போல உணருதல் போன்ற நாட்பட்ட மெய்ப்பாட்டு முறைப்பாடுகள்.

மருத்துவமற்ற சிகிச்சைகள்.

---

உளவள ஆலோசனை. பிரச்சனையை கண்டறிந்து தீர்த்தல். வாழ்க்கைத் திறன் பயிற்சிகள். நாளாந்தச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல். பயனுடைய பொழுதுபோக்கு செயற்பாடுகள். யோகாசனம், தியானம் என்பவற்றில் ஈடுபடுதல்.

மருத்துவ சிகிச்சை

---

நோயாளிக்கு மனச்சோர்விற்கு எதிரான ஒரு மருந்தை மருத்துவர் ஆலோசனையுடன் கொடுக்கலாம். மருந்துகளை கொடுக்கும் போது வாய் உலர்தல், பார்வை குறைதல், தலை சுற்றுதல் போன்றபக்க விளைவுகள் இருக்கின்றனவா என்பதனை அவதானித்துக்கொள்ளவும்.

இருதய நோய்கள் (பரிசோதனையின் போது ஒழுங்கற்ற நாடித்துடிப்புகள், மேலதிக இருதய ஒலிகள் போன்றன அவதானிக்கப்படும், காக்கை வலிப்பு, முன்னீச் சுரப்பி வீக்கம், கண்களில் உயர் அமுக்கம் போன்ற நோய்கள் இருக்குமானால், மேற்கூறப்பட்ட மருந்துகளை எக்காரணம் கொண்டும் கொடுக்க வேண்டாம்.

தீவிர மனச்சோர்வு, தற்கொலை எண்ணம் அல்லது முயற்சிகளில் ஈடுபட்டவர்கள், பசியின்மை, முற்றிலும் நாளாந்த செயற்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களை விரைவாக பழைய நிலைக்கு கொண்டுவர மின்வலிப்பு சிகிச்சை மிகப்பயனுடையது. மருந்துகள் மூலமும், உளவளத்துணை மூலமும் குணமடையாத மனச் சோர்வு நோய்கள் ஏதாவது உடல் நோய் ஒன்றின் வெளிப்பாடாக இருக்கலாம். இப்படி குணமடையாத ஒரு நோயாளியை ஒரு விஷேட நிபுணருக்குக் காட்டவேண்டியது அவசியமானது என்பதனை நினைவில் வைத்திருக்கவும்.

---

கவிதை

### தண்ணீர் கேட்ட கடவுள்



காயும் பயிரின் முகத்தைப் பார்க்க முடியாமல்
உள்ளறையிலேயே கிடக்கும் கடவுளைத் தேடிச் சென்றனர் சனங்கள்

குடிப்பதற்கே நீரில்லாமல் தவிக்கும்
விதியைப் பார்த்துக் கவலையோடிருக்கிறாள்
ஊடகப் பெண்ணொருத்தி

அவளுடைய கைப்பையிலிருக்கும்
குடிநீர்ப்போத்தலைக் கண்ட கடவுள், அதில்
ஒரு மிடறு நீர் தருமாறு கெஞ்சிக் கேட்கிறார்

நீர்ப்போத்தலைக் கடவுளிடம் கொடுத்தவள்
கேட்டாள், நேற்றிரவு தென்திசையில்
வெள்ளத்தில் சிக்குண்டு தவித்தவள்
உங்கள் பெண்ணல்லவா என்று.

அவள் கைபற்றிக் காத்தவர் யாரம்மா? என்று
கேட்டார் அவர்.

சனங்கள்தானென்றாள்.

கடவுளைத் தேடி வந்த கூட்டத்தின் குரல்
கேட்டுச் சட்டென மறைந்தார் கடவுள்.

வந்தவர் தாகமிகத் தவித்துக் கேட்டனர்
ஒரு துளி நீர் எங்கேனுமுண்டா என
அவளிடம்

மிஞ்சிய நீரைக் கைப்பையிலிருந்தெடுத்தாள்
அதைக் கண்டவர் கையெடுத்துச் சிரம்
கூப்பித் தொழுதனர் நீயே தெய்வம் என.


--- கருணாகரன் ---

# வடபுலத்து பெண்ணின் பார்வையில் மட்டக்களப்பார்...

## மட்டுநகர் மண்ணைத்தொட்டு 26

தமிழ்க்கவி

### "பாடும்மீன்" - புலிகளின் இசைக்குழு



இசைக்குழுவை அறியாதவர்கள் இருக்கமுடியாது. அகில இலங்கை மட்டத்தில சாதனை படைச்சவங்கள். அருமையான பாட்டுக்காறரை அறிமுகப்படுத்தினாங்கள். நல்லதொருவாத்தியக் கலைஞர்களக் கொண்டவங்கள்.. ஆயினும் இவர்கள் சாஸ்த்திரீய சங்கீதத்தை கரைத்துக் குடிச்சவையில்ல எண்டுதான் சொல்லவேணும் . பெரும்பாலும் இவயளின்ர இசையமைப்பில மண்மணம் இருக்கும் சும்மா தெருவில் விளையாடித்திரியிற சிறுவர்களும் முணுமுணுக்கும்படி இருக்கும்.

இந்த மட்டக்களப்பின்ர முத்திரைபதிச்ச பாடும்மீன் இசைக்குழு யாழ்ப்பாணம் வந்திது.

பாக்க மாட்டீங்க அவ்வளவு அழகா ஒருமேடை அதில பாடினவை வாத்தியம் வாசிக்கிறவை எல்லாருமா வரிச்சீருடையில நிக்கினம். எங்கடசனம் சிதம்பர சக்கரத்த பேய்பாத்த மாதிரியிண்டு சொல்லுவினமே அப்பிடிபாக்குதுகள்.

"எடேய்க் புலியள் இப்பிடியும் ஒரு அவதாரம் எடுத்திருக்கிறாங்களடா" எண்டு. அதில் ஒரு அறிவிப்பாளர், சூ...சொல்லிவேலயில்ல. கே.எஸ் ராஜா தோத்திட்டான் போங்கோ. அந்த மாதிரி நக்கல் என்ன, நையாண்டி என்ன, குதர்க்க மென்ன, வருணனை என்ன. கலக்கியடிச்சாங்கள். இன்னும் தேவையான பாட்டுக்காரர் மட்டக்களப்பால வந்திச்சினம். இதுவரையும் பாட்டில சேர்க்காம ஒதுக்கி வச்ச பாட்டுக்காரரெல்லாம் இதுக்குள்ள நுழைஞ்சு பாடவெளிக்கிட்டினம். இஞ்சயும் அந்த வித்துவக்காச்சலால பாதிக்கப்பட்ட ஆக்கள் இருந்தவைதானே. பாட்டில நான்தான் வாத்தியத்தில நாந்தான் என்னவிட்டா கொம்பனில்ல.. எண்டவை யெல்லாம் வாயடைச்சுப்போச்சினம். சரிகமபதநி தெரிஞ்சவதான் பாடலாம் எண்டதுபோய் தாளமும் சுருதியும் பிடிச்சா பாடலாம் எண்டுவந்துது. பாட்டுகளும் பிச்சலாத்தான் கிடக்கு. இவையோட சேந்து பாட இந்தியாவில இருந்தெல்லாம் பாட்டுக்காரர் வந்திச்சினம். சொன்னா நம்பமாட்டியள்

இசைக்குழு புரட்சிப்பாடல்களையும் அட அதாங்க, போராட்டத்தை வளக்கிற பாட்டுக்களையும் பாடினாங்க. என்ன சொல்லுவினமே காலத்தை உள்வாங்காத கலை அழிஞ்சு போகுமிண்டு இது காலத்தை உள்வாங்கனதால அழியப்பாத்திது. அப்பிடியொரு காலத்திலதான் ஆனையிறவில ஆகாயகடல் வெளிச்சமர் முடிஞ்சுது. முதல் முதலா பெருந் தொகையான போராளியள் செத்தது இந்தச் சண்டையிலதான். இதை சண்டையிண்டு சொல்லுறதவிட விடுதலைப்புலியள் யுத்த இறுதியில செய்தது போல வந்தாவா போனாப்போ எண்டு பரீட்சாத்தம் பண்ணக் குடுத்த பலியும் அதிகந்தான்.

பின்ன என்னங்கோ முழுசா போர் அனுபவம் இல்லாத ஒரு கூட்டம்; மணல் வெளியில, எந்தக் காப்பும் எடுக்கமாட்டாம சண்டைபிடிக்குது. அதுபோதாதெண்டு தரை இறங்கின எட்டாயிரம் படைய வழிமறிச்சுப்பாப்பமிண்டு சில நூறு புலியள் போய் கடசியா பொடியும் எடுக்கமாட்டாம முடிஞ்சுது. இதையெல்லாம் புலியளின்ர வீரத்துக்க மடக்கி அங்க செத்துப்போன அறுநூத்துஅம்பத்தாறு புலியளுக்குமா மிருசுவில்லில ஒருநினைவாலயங் கட்டிச்சினம். பெரியசிலவுதான் அதை திறக்கிற விழாவில அந்தசண்டையில மாண்டபிள்ளையளின்ர பெற்றார அழைச்சுக் கொணந்திச்சினம். அந்த நிகழ்ச்சியல பாடுறதுக்கெண்டுதான் முதல் முதலா அந்தக் கலக்கு கலக்கிறான்.


பாட்டுகளும் எல்லாம் இயக்கப்பாட்டுத்தான் ஆனா மட்டக்களப்பாற்ற பாட்டுக்கு எழும்பிக் குதிக்க வேணும் போலதான் இருக்கு, எல்லாம் துள்ளிசைதான். யாழ்ப்பாணப்பாட்டுக்காரரும் ரெண்டொரு பாட்டுப்படிச்சினம்.

ஆனா இந்த இசைக்குழுமட்டும் இயக்கத்தின்ர கையில விழுந்திட்டுது. எண்டா அவைக்கு திறமான வாத்தியங்களக்குடுத்து இஞ்சயேமறிச்சும் போட்டினம்; பாடும்மீன் எண்டபேர் மட்டுந்தான் மட்டக்களப்புக்கு போச்சுது. இசைக்குழு தமிழீழ இசைக் குழுவெண்டபேரில இஞ்சயே நிண்டிட்டுது. பிறகென்ன யாழ்ப்பாணம் வன்னியெல்லாம் ஏழை பாளை எழுதினதெல்லாம் பாட்டாகி ஒலிநாடாவுக்க ஏறிச்சு.

அறிவிப்பாளரா இருந்த மனிசன் திறமான மனிசன் சாதாரணமா பாக்கிறவை அவரை ஒரு அறிவிப்பாளரெண்டு சொல்ல ஏலாது. அவ்வளவு அமைதியாக் கதைப்பார். பேசக்க சத்தம் வெளியாலவராது. அப்பிடியே அவரை புலிகளின் குரலுக்க வேலைக்கும் விட்டினம். அவற்ற பெஞ்சாதியும் அங்கதான் வேலை. முதல் அவா ஒரு நகரவிளம்பர சேவையில இருந்தவவாம். ஒரு மலையகத்தை சேந்த பொம்பிளை ஆனா சொந்த இடம் யாழ்ப்பாணம் தாயும், தேப்பனும் கனகாலமா மலையகத்தில படிப்பிச்சவையாம் இவையப் பத்தி விரிவாப்பாப்பம்.

## குறுக்கெழுத்துப்போட்டி இல:--10

அரங்கம் இரா. தவராஜா.



**இடமிருந்து வலம்:**

01. எதிராளிகளுடன் சமாதானம் பேசி அவர்களின் விடையுடன் வருபவன். இவனுக்கு ஊறு விளைவிக்கக் கூடாது என்பது சம்பிரதாயம்.
04. மிருகங்களை இது செய்யக்கூடாது என்று இப்போ பெரும் விளிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.
05. அருளுக்கு எதிர்மறை.
06. திக்கற்றவன்.
07. மிகத் துரிதமாகச் செயற்பட வேண்டிய நிலை.
09. "துணி வெளுக்க மண்ணுண்டு எங்கள் முத்துமாரி – அம்மா எங்கள் முத்துமாரி" என்று பாரதி குறிப்பிட்ட அந்த மண்.
11. மாட்டின் பிரதான தீனி.
12. வீட்டுக்கு மேலே வீடு.
13. "உயர் மட்டத்தில் வாழும் மனிதன்" மலைக்காதீர்கள் நன்றாக வாசித்துப் பாருங்கள்.

**மேலிருந்து கீழ்:**

01. தூய நவமணிகளில் ஒன்று.
02. இரும்புதான் இதன் வாகனம்.
03. திருக்குறளை தந்தவர்.
04. மகா விஷ்ணுவின் அவதாரங்களில் ஒன்று.
06. அரன்மனையின் காவல் பெருஞ்சுவர்.
07. சிலரின் வாய்க்குள் இது கிடந்தால் போதும் சப்பிக்கொண்டு இருப்பார்கள்.
08. ஒரு பக்க சார்பற்ற நிலை.
09. இது இல்லாத பண்டம் குப்பையில் ஆனால் குழம்பிக் கிடக்கின்றது.
10. இது உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள் என்போரும் உண்டு.
12. தையின் முடிவில் இதன் பிறப்பு.

இதற்குரிய சரியான விடையை அரங்கம் செய்திக் கூப்பனில் நிரப்பி அஞ்சல் அட்டையில் ஒட்டி 03.09.2018க்கு முன்னர்

அரங்கத்துக்கு அனுப்பி வைக்கவும்.
அரங்கம் நிறுவனம்:
227 பார் வீதி, மட்டக்களப்பு.

சரியான விடையை எழுதி அனுப்புவர்களில் அதிஸ்டசாலிகள் மூவருக்கு தலா 100 ரூபாய் பரிசளிக்கப்படும்.

குறிப்பு:
சென்ற இதழான 17.08.2018ல் வெளியான குறுக்கெளுத்துப் போட்டியில் 27.08.2018 என்று குறிப்பிடப்பட வேண்டிய திகதி 28.06.2018 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.
இடமிருந்து வலம் வரும் 6ம் கட்டத்திற்கு 06. எதையும் ஈடுபாட்டுடன் அனுபவித்தால் என்பது அனுப்புதல் என்று அச்சிடப்பட்டுவிட்டது என்பதையும் வாசகர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.



## தமிழர் திருமண சம்பிரதாயங்கள் மாறி வருகின்றனவா?

# தமிழர் திருமணம் அன்றும் - இன்றும்

*அண்மையில் ஈழத்தின் முக்கிய கவிஞர் மஹாகவி ருத்ரமூர்த்தியின் பேர்த்தி அரசி திருமண விழா கொழும்பில் பேராசிரியர் எம் ஏ.நுஹ்மான் தலைமையில் நடைபெற்றது. வழமையான தமிழர் திருமண முறைக்கு மாறான திருமணம் அது. அக்கினி இல்லை. ஹோமம் இல்லை ஐயர் இல்லை சமஸ்கிருத கோசங்கள் இல்லை.மூத்தோர் வாழ்த்தினர். உறவினர் ஆசி கூறினர் ,வாழ்த்த என்னையும் பேராசிரியர் தில்லை நாதனையும் பேராசிரியர் சிவசேகரத்தையும் அழைத்திருந்தனர். நாம் அவர்களின் உறவினர் கூட இல்லை. அவ்விரு குடும்பங்களுடனும் நீண்டகாலம் நட்புக் கொண்டிருந்த, அவர்களை நன்கறிந்த நண்பர்கள். மணமகளின் தாய் மாமன் சேரன் நன்றி கூறினார். அந்த விழா தந்த தாக்கத்தால் எழுதிய குறிப்புகள் இவை*

---

தமிழரின் பண்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நாம் வரலாற்று ஓட்டத்தினூடாகத்தான் விளங்கிக் கொள்ள முடியும்.

பண்பாடுகளில் ஒன்று திருமண சம்பிரதாயம். தமிழ் மக்கள் பண்டு குறிஞ்சி,முல்லை மருதம் நெய்தல் ஆகிய நான்கு நிலங்களில் வாழ்ந்துள்ளனர்.

பாலைக்கு நிலமில்லை. கால வேறுபாட்டால் முல்லையும் குறிஞ்சியும் பாலையாக மாறும். இந்த நான்கு நிலங்களுக்கும் வித்தியாசம் வித்தியாசமான பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் இருந்துள்ளன.

கி, பி 2 ஆம் நூற்றாண்டு சிலப்பதிகார காலம் ஆகும். இந்தக் குறு நில அரசுகள் தகர்ந்து சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் உருவான காலம்,இது.

அவர்களிடையே ஆரியப்பழக்க வழக்கங்கள் செல்வாக்குச் செலுத்தியகாலம்.

ஐயர் வந்து சடங்கு செய்யும் நிலைமை இக்காலத்தில் வந்தது.

முற்காலத்தில் நம்பிக்கையும் வாழ்த்துமே திருமணச் சடங்கு. சமூக வளர்ச்சி காரணமாக பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தோன்றின, மக்களிடையே பொய்யும் வழுவும் வந்தன.

அன்பினடியாக இணைக்கப்பட்ட தாம்பத்திய வாழ்க்கை பிரச்சனைக்குள்ளானது.

இக்காலகட்டத்தில்தான் பார்ப்பனச் சடங்குகள் தமிழர் மத்தியில் புகுகின்றன.

தொல்காப்பியர் தன் நூலில்;

*"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் ஐயர் யாத்தனர் கரணம் என்ப"*
*எனச் சூத்திரம் வகுத்துள்ளார்*

கி,பி.2ஆம் நூற்றாண்டில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்கும் கோவலனுக்கும் நடக்கும் திருமணம் ஐயர் நடத்தி வைக்கும் திருமணம்.

மா முது பார்ப்பான் மறை வழி காட்டிய திருமணம் அக்கினி சாட்சி என்பது பின்னால் வந்தது என்கிறார் பேராசிரியர், வித்தியானந்தன். சங்ககாலத் திருமணம் எப்படி இருந்ததென்பதை தனது தமிழர் சால்பு நூலில், சங்க இலக்கிய ஆதாரங்களுடன் பேராசிரியர் வித்தியானந்தன் கூறுகிறார்.

அகநானூறு 86 ஆம் பாடல்

உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த செவ்விய பொங்கலொடு பெரிய சோற்றுத் திரள் ஆக்கி வைத்திருக்கின்றனர்,

மரத் தூண்கள் நிறுத்திச் செய்த அழகிய பந்தரின் கீழ் புது மணல் பரப்பியுள்ளனர். மனையின் கண் விளக்கினை ஏற்றி மாலைகளைத் தொங்க விட்டிருக்கின்றனர்.

தீய கோள்களின் தொடர்பு நீங்கப் பெற்ற திங்களை குற்றமற்ற சிறந்த புகழினையுடைய உரோகிணி எனும் விண்மீன் சேர்ந்த இருள் நீங்கிய விடியற்காலையில், முது பெண்டிர் உச்சியிற் குடத்தினையுடையவரும் கையினிற் புதிய அகண்ட கலத்தினையுடைவருமாகி அவற்றை முறை முறையாகத் தரத் தர ஆரவாரம் இருந்தது.



மகனைபெற்ற தூய மகளிர் நால்வர் கூடி நின்று"கற்பின் வழாது பல பேறுகளையும் பெற்று நின்னை எய்திய கணவனை விரும்பி பேணும் விருப்பத்தை உடையையாக:" என்று நீர் தெளிக்கப்பெற்ற குளிர்ந்த இதழ்களை யுடைய பூக்களை மிக்க கரிய கூந்தலில் நெல்லுடன் தூவிமண மக்களை வாழ்த்தினர்.

இவ்வினைகள் யாவும் முடிந்த பின்னர் சுற்றத்தார் "சிறந்த இல்லக் கிழத்தியாக விளங்குவாய்" எனக்கூறி பெண்ணை உரியவனிடம் கொடுத்தனர்"

இது ஒரு வகைத் திருமணம் கைபற்றிக் கொடுத்தல் என்பது இன்னொரு முறையாம்

*மணமகள் கை பற்றி அவளை மணமகனிடம் பெண்ணின் பெற்றோர்கள் கொடுப்பர் பெரியோர்கள் வாழ்த்துரைப்பர் மணமக்கள் வீட்டில் திருமண சடங்கிற்கெனச் சமைத்த உணவினை ஒருவருக்கொருவர் ஊட்டுவர்*
நாட்கணிப்பு,,
பந்தல் அமைத்தல்,
முரசம் முழங்கல்,

சுற்றத்தார்க்கும் மற்றவர்க்கும் உணவளித்தல்,

பெண்ணை அலங்கார விதானத்தின் கீழ் அமர்த்தல், முதுபெண்டிர் மணமகளுக்கு குடங்களும் கலன்களும் வழங்குதல்,

முருகனை வணங்கல்.

புதல்வர் பெற்ற பெண்டிர் மணமக்களை வாழ்த்துதல். மணமகளை மணமகனுக்கு கைபிடித்துக் கொடுத்தல் என்பன பண்டைய தமிழர் மண முறைகளாகும் தாலி அணிந்தமைக்கும் சான்றுகள் இல்லை பண்டைக்காலத்தில் தமிழர் திருமணத்தில் தாலி இருந்திருக்கவில்லை எனச் சில அறிஞர்கள் எழுதியுள்ளனர்

*அக்கினி முன்னிலையில் மணவினை நடைபெற வேண்டுமென்பது பிற்காலத்திற்குரிய கொள்கையாகும்.*
*மணச் சடங்கிற்குத் தலைமையாகப் பார்ப்பனும் அங்கு இருக்கவில்லை.*
*மந்திரம் ஓதுதல் பார்ப்பனருக்குத் தானம் வழங்குதல் போன்ற வழக்கங்களும் இருக்கவில்லை,*

எனவே சங்க காலத்திலிருந்த மணச்சடங்கு தமிழருக்கே சிறப்பாக உரியது.

ஆரியப்பண்பாட்டின் தாக்கத்தினால் மாற்றமடையாத ஒன்று என்று எழுதியுள்ளார் பேராசிரியர் வித்தியானந்தன். (தமிழர் சால்பு பக் 243-326)

எழுதியமை மாத்திரமன்றி தனது திருமணத்தை அவர் 1950 களில் தமிழ் முறைப்படியே நடத்தியும் காட்டினார்.

ஐயருக்குப் பதிலாக அவரது ஆசான் பேரா. கணபதிப்பிள்ளை நின்று திருக்குறள் ஓதி அனைத்தையும் நடத்தி ஆசிகள் கூறினார் என அறிகிறோம்.

பெரும்பாலும் இச் சங்ககாலத் திருமணமுறை பலகாலத்திற்கு முன்னர் ஈழத் தமிழ்க் கிராமங்கள் எங்கும் இருந்தன.

பெற்றோரும் உறவினருமே திருமணம் நடத்தி வைத்தனர்.

நான் பிராயமறிந்த காலம் தொட்டு மட்டக்களப்புத் தமிழரிடையே இவ்வழக்கமே இருந்தது;
அங்கு பிராமணர் வரவில்லை. கைபிடித்துக்கொடுத்தல், கலத்தில் போடுதல் என்பன திருமண நடை முறைகளாக இருந்தன.

கைபிடித்துக்கொடுத்தல் என்றால் மணமகளின் பெற்றோர் மணப்பெண்ணின் கையைப்பிடித்து மணமகன் கையில் ஒப்படைத்தலாகும்.

கலத்திற்போடுதல் என்றால் சாதத்தினை பால் பழங்களுடனும் பலவகை கறிகளுடனும் கலம் எனும் பாத்திரத்தில் கலந்து மணமகனும் மணமகளும் ஒருவருக்கொருவர் ஊட்டுதலாகும்.

இதற்கு மட்டக்களப்பில் சேவரக்கலும் வட்டிலும் பாவிக்கப்படும். திருமணம் பெரும்பாலும் வீடுகளிலேயே நடைபெற்றன.

அக்கினியில் நெய்விடல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், மெட்டி பூட்டுதல், பானைக்குள் மோதிரம் எடுத்தல், தீவலம் வரல், கண்ணாடி பார்த்தல், தர்ப்பை பூணல், என்ற ஐயர் வழிப்படுத்தும் சடங்குகள் அங்கு இருக்கவில்லை.

காலப்போக்கில் இத் திருமணச் சடங்குகள் மிக ஆடம்பரமாகிவிட்டன. வீட்டில் நடைபெற்ற சடங்குகள் கோவில் நோக்கி நகர்ந்தன. ஒரு நாளில் அவசரம் அவசரமாக பல சடங்குகளை நடத்தும் முறையும் உண்டானது. ஐயர் என்ன சொல்கிறார் என்பதை விளங்காமலேயே அதில் பங்கு கொள்ளும் பண்பும் உண்டானது. இதனைப்பார்த்து சாதாரண மனிதர்களும் திருமணச் சடங்குகள் நிகழ்த்த வேண்டியதாயிற்று,தாலிகள் பலவகையாயின.

தாலிக்கொடிகள் கயிறளவு பருப்பமாயின. அவற்றின் நிறைகளும் அதிகரித்தன. விலைகளும் அதிகரித்தன

*இப்போது மருதோண்டி வர்ணங்களை கைகளிலும் உடல்களிலும் வரைந்து உடலில் வர்ணம் தீட்டல் முகத்தை அழகு படுத்தல் (பேசியல்) மிக மிக விலையுயர்ந்த சேலைகள் அணிதல் என்பனவெல்லாம் தமிழர் திருமணத்திற்கு அத்தியாவசியமாகிவிட்டது"*

மாப்பிள்ளையின் மணப் பெண்ணின் ஆடை அலங்காரத்தில் வடநாட்டு ஆடம்பர சினிமாக் கதாநாயக கதாநாயகிகளின் உடையமைப்பையே காணுகிறோம்.

ஐயர்தான் முன்னாளில் எல்லோரை அடக்கி வைப்பர்

அவரையே அடக்கும் வீடியோகாரர் இப்போது புதிதாக முளைத்துவிட்டார்.




திருமணம் வந்திருப்போருக்கன்றி இனிமேல் திரையில் பார்ப்போருக்கான படப்பிடிப்பாவும் மாறிவிட்டது.

திருமணச் சடங்குகள். தமது செல்வச் செழிப்பையும் செல்வாக்கையும் காட்டும் ஒரு சடங்காகி விட்டன.

திருமணச்சடங்குகளில் பல புதிய புதிய கிரியைகள் உருவாக்கப்பட்டன. அவற்றிற்குப் புதிய சமய விளக்கங்களும் அளிக்கப்பட்டன.

கிரியைகளுக்கு ஏற்ப கட்டணங்களும் வசூலிக்கப்படத் தொடங்கி விட்டன.

*தமிழர் திருமணசடங்கு மிகப் பெரும், ஒரு ஆடம்பரச் சடங்காக மாறி விட்டன.*
*அதன் மிக மோசமான வடிவங்களை நாம் முகநூலிலும் வலையமைப்பிலும் காணுகிறோம்.*

இன்னும் இது என்ன என்ன வடிவங்கள் எடுக்குமோ?

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்
எளிமையும் அழகும் உண்மையும் நிறைந்த ஒரு முக்கிய விழா, ஆடம்பரமும், போலியும், பொய்மையும் நிறைந்த விழாவாகி வருகிறதோ என்ற துயரம்தான் மிஞ்சுகிறது.

# எல்லோரும் கவனிக்க வேண்டும்!

பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

கடந்த வார "அரங்கம்" இதழில் "யார் கவனிப்பார்?" என்ற தலைப்பில், சின்ன ஊறணியைச் சேர்ந்த மன்னுயில் பெ.செல்வம் அவர்கள் எழுதிய கட்டுரைக் குறிப்பிற்கு எனது கருத்தினைப் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

இந்த விடயத்தினைத் தீர்மானிப்பதற்கு அதிகமான மொழி அறிவு அவசியமில்லை.

" ர" என்ற எழுத்தும் அரவும் சேர்ந்தால்தான் "ரா"ஆகமுடியும்.

உதாரணமாக "க" என்பது அரவுடன் இணைந்து "கா" ஆகிறது. குற்று இட்டதும் "க்" ஆகிறது. "க" வுக்கு ஒற்றைக் கொம்பு வைத்தால் "கெ" ஆகும். "ச" அரவுடன் இணைந்து "சா" ஆகிறது. குற்று இட்டதும் "ச்" ஆகிறது. "ச" வுக்கு ஒற்றைக் கொம்பு வைத்தால்தான் "செ" ஆகும்.

அதேபோலத்தான், "ர" என்ற எழுத்தின் நெடில்தான் "ரா" ஆகமுடியும். அரவுக்குக் குற்று வைத்தால் அது ஈரன்னா அல்ல. இரண்டு அரவுகள் "ரா" ஆகிவிடுமா? இல்லையே! அப்படியிருக்கும்போது அரவுக்குக் குற்று வைத்தால் அது எப்படி ஈரன்னாவாகும்? அரவுக்குக் (ா) கொம்பு வைத்தால் எப்படிக் "ரெ" ஆகமுடியும்.

அரவுக்கு கால் இழுக்கப்பட்டு எழுதப்பட்டால் அது "ர" ஆகிறது.

அவ்வாறு கால் இழுக்கப்படாமல் அரவாகவே இருப்பது தமிழில் ஒரு தனி எழுத்தே அல்ல.

கணனிப்படுத்தப்பட்ட தமிழ் மொழியில் உள்ள சில எழுத்துருக்களில் "ர" என்பது இல்லை. அதனாலேயே அரவினை "ர" வாகவும் "ர்" என்பதற்குப் பதிலாக அரவுக்குக் குற்றுவைத்தும் பயன்படுத்தவேண்டிய தவிர்க்க முடியாத நிலை ஏற்படுகின்றது.

ஆனால் பலர் இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் இருக்கிறார்கள். சிலர் இரண்டுமே சரி என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மொழிக்காக அப்படிப்பட்ட கணனி எழுத்துருக்களைத்தான் மாற்ற வேண்டுமே தவிர, கணனிக்கேற்ப மொழியை மாற்றக்கூடாது. அவ்வாறு மாற்றவேண்டிய அவசியமும் தமிழ் மொழிக்கு இல்லை. எத்தகைய கணனி வளர்ச்சிக்கும் இசைந்து போகக்கூடியவாறுதான் தமிழ்மொழி இருக்கிறது. அத்தகைய செம்மையும், செழுமையும், பெருமையும் கொண்டது நமது தொன்மை வாய்ந்த தமிழ்மொழி.




வைகாசி மாதம் 18.05.2018ல் வெளிவந்த அரங்கம் 13ம் இதழின் 16ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட இறைச்சிக்கடை தேவை. மட்டு மாநகர சபை கவனிக்குமா? என்ற பத்தியில் மாநகர சபையிடம் மட்/பொதுச் சந்தையில் பல மாதங்களாக கோழியிறைச்சிக்கடையில்லாத குறையை சுட்டிக்காட்டி பல தேவையான ஆதாரங்களுடன் எழுதியிருந்தேன்.



இக்கட்டுரைக்கு செவிசாய்த்து கவனத்திற்கெடுத்து, தற்போது தற்காலிகமாக கோழியிறைச்சிக் கடையை நடைமுறைப்படுத்தியமைக்காக "கௌரவ மாநகரத் தந்தைக்கும்," சக அங்கத்தவர்களுக்கும் அவதானியாரின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்திரிகையின் குரலுக்கும் வரியிறுப்பாளர்களின் எதிர்பார்ப்புக்கும் கரிசனை காட்டி செயல்படும் மேமிகு தி.சரவணபவன், நகர பிதாவுக்கு அவ்வப்போது இப்படியான ஆலோசனைகளை எழுதிக்கொன்டிருப்பேன் என்பதை மிக மகிழ்ச்சியோடு அறியத்தருகிறேன். இது ஒரு சாதக விமர்சனமே. மக்களின் நலனே எமது இலக்கு. அதுவே மாநகர சபையின் மற்றும் ஏனைய உள்ளூராட்சிகளின் இலக்காகவும் இருக்கும்போது எல்லோருக்கும் பெருமை விளையும்.

-- நன்றி –

### அடுத்த பார்வை-

மட்/ மாநகர சபையின் எல்லைக்குள்ளிருக்கும் "காத்தான்குடி பொலிஸ் நிலையம்" என்னும் பெயர்ப் பலகையை "மஞ்சந்தொடுவாய் பொலிஸ் நிலையம்" என்று மாற்ற வேண்டும் அல்லது இப் பொலிஸ் நிலையத்தை காத்தான்குடி எல்லைக்குள் நிர்மாணிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்/மாநகர சபையின் துடிப்பான இளம் அங்கத்தவர்களான பூபால், புஸ்பரூபன், துரைமதன் போன்ற இன்னும் பலரின் ஆலோசனைக்கமைய துரைமதன் அவர்களால் தீர்மானமாக கொண்டுவரப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.


இது நியாயமான ஒரு கோரிக்கை மற்றும் தீர்மானம். இன்னுமொரு மாநகர எல்லைக்குள் எப்படி இன்னுமொரு ஊரின் பொலிஸ் நிலையம் அமையமுடியும்?

தீர்மானம் கொண்டுவந்த இளைஞர்களுக்கு பாராட்டுக்கள். இந்த புதிய மாநகர சபையில் நிறைய இளைஞர்கள் உறுப்பினர்களாக இடம்பிடித்துள்ளார்கள். கட்சிகளைக் கடந்து பார்த்தால் இது ஒரு ஆரோக்கியமான நிலை. அவர்கள் அரசியல் ரீதியாக வளர்க்கப்பட வேண்டும். உள்ளூராட்சிதானே, அரசியல்வாதிகள் அரசியலை கற்கும் ஆரம்பப் பள்ளி. அது இந்த இளைஞர்களுக்கு ஒரு பல்கலைக்கழகமாக அமைய, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நகர பிதா கவனிப்பாராக.

## கடுகுக் கதை

# பழுத்த மக்கு ஜீவி


பண்டிதர்கள் பலரோடு போட்டியிட்டு, அவர்களை தோற்கடித்து, பாராட்டுகளையும் பரிசும் பெற்றவர் பாலக்குளத்தைச் சேர்ந்த பண்டிதர் பரஞ்சோதிலிங்கம். இதனால் இவருக்கு கர்வம் வந்து விட்டது.



வீதியால் யார் போனாலும் அவர்களை அழைத்து ஏதாவது இடக்கு முடக்கான கேள்விகளைக் கேட்டு அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திணறுவதைப் பார்த்து ஏளனம் செய்து, கேலி செய்வார்.

இதனால் இவர் இருக்கும் தெருவால் வர மக்கள் அஞ்சி வேறு பாதைகளால் செல்வார்கள்.

ஒருமுறை பக்கத்து ஊரில் அறிவுப்போட்டி நடக்கவிருக்கும் செய்தியைக் கேள்விப்பட்டு பண்டிதர் அந்தப் போட்டியில் கலந்து கொள்ள "மக்கு ஜீவி" துரையப்பாவின் மாட்டு வண்டியை வாடகைக்கு அமர்த்தி, போட்டி நடக்கும் ஊருக்கு புறப்பட்டுப் போனார்.



மாட்டுவண்டி ஒரு அடர்ந்த காட்டின் வழியே சென்றுகொண்டிருந்தது. அதுவரை பேசாமல் இருந்த பண்டிதர் வண்டிக்காரனிடம் ஏதாவது கேள்வி கேட்டு, அவனைத் திணறடிக்க வேண்டுமென எண்ணி, ஒரு கஷ்டமான கேள்வியை கேட்டார். அதற்கு வண்டிக்காரன் "ஐயா நான் அதிகம் படிக்காதவன் உங்களின் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது." என்று அமைதியுடன் சொன்னான்.

அதைக்கேட்ட பண்டிதர் உன்னைப்போன்ற மக்கு ஜீவிகள் இந்த மாட்டுக்கு சமம். அதிகாரம் என் கையில் இருக்குமென்றால் உன்னைப்போன்றவர்களை பிடித்து தூக்கில் போடுவேன் என்று கர்வத்தோடு கதைத்தார், கடுகு போல வெடித்தார்.

வண்டிக்கார துரையப்பா அதைக்கேட்டும் ஒன்றும் பேசாமல் மிகுந்த அமைதியுடன் வண்டியை செலுத்திக்கொண்டிருந்தான்.

அப்பொழுது.....

ஒரு புதரினுள் இருந்து புலியொன்று பாய்ந்து வந்தது. புலியை பார்த்து பயந்த மாடுகள் உயிருக்கு பயந்து தாறுமாறாக வண்டியை இழுத்துக்கொண்டு ஓடின. இதனால் வண்டியிலிருந்த பண்டிதரும் வண்டிக்காரனும் கீழே விழுந்தனர். புதருக்குள் புலி அவர்களை நெருங்கி விட்டது.

வண்டிக்காரன் விருட்டென்று எழுந்து பக்கத்திலிருந்த மரத்தில் ஏறிவிட்டான். மரம் ஏறத்தெரியாத பண்டிதர் "வண்டிக்காரா என்னையும் மரத்தில் ஏற்றிவிடு என்றார்."

அதற்கு வண்டிக்காரன் "ஐயா நீங்களோ



படிப்பறிவு மிகுந்த புத்திஜீவி, ஆனால் நானோ படிப்பறிவில்லாத மக்கு ஜீவி. அதுவும் இந்த மாடுகளுக்கு சமனானவன். நீங்கள் என் உதவியை நாடுவது புத்தி ஜீவியான உங்களுக்கு கேவலம் என்றான்.

பண்டிதருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

"வண்டிக்காரா உனக்கு படிக்கத்தெரியாது, எனக்கு மரமேறத் தெரியாது. ஆகவே இருவரும் ஒரு விதத்தில் முட்டாள்கள்தான், தயவு செய்து படித்த மக்கு ஜீவியான என்னை படிக்காத புத்தி ஜீவியான நீ காப்பாற்று" என்று கெஞ்சினார் பண்டிதர்.

இவரின் கர்வமும் தற்பெருமையும் அழிந்துவிட்டது என்பதை உணர்ந்த வண்டிக்காரன் சிறிதும் தாமதியாது அவரையும் மரத்தில் ஏற்றிவிட்டான். புலி கண்ணிலிருந்து மறைந்த பின் தான் மரத்திலிருந்து இறங்கினார்கள்.

கலாபூசணம் இரா.தவராஜா

***'புத்தி ஜீவியின் படிப்பு புகழுக்கு, மக்கு ஜீவியின் உழைப்பு உயிருக்கு***

***சர்வமும் எல்லோருக்கும் இல்லை கர்வமோ உயர்வைத் தருவது இல்லை.***



தொடர்ச்சி...

## அம்பாறையில் கடும்வரட்சி : தண்ணீருக்கு அலையும் தமிழ்மக்கள்!



அண்மைய வரட்சி காரணமாக அக்கிணறு வற்றிவிட்டது. மேலும் ஆலயம்வரை வந்த குழாய்நீர்விநியோக இணைப்புகள் எமது பகுதிக்கு விஸ்தரிக்கப்படவில்லை. இது எமக்கு இழைக்கப்பட்ட அநீதியாகும். நாம் தமிழர்கள் ஏழைகள் என்பதால் இந்தப்புறக்கணிப்போ தெரியாது.

மொத்தத்தில் தண்ணீர் இல்லை. வாரமிருமுறை வவுசர்களில் விநியோகிக்கப்படும் தண்ணீரை இருக்கின்ற கொள்கலனில் பிடித்து சேமித்து வைக்கின்றோம். அது குடிதண்ணீருக்கு மாத்திரமே பயன்படுத்துகின்றோம்.

ஏனைய குளிப்பு முழுக்குகள் சலவை போன்ற தேவைகளுக்கு கனதூரம் சென்று சிறுகுளத்தைப் பயன்படுத்தவேண்டியுள்ளது. வரட்சி நீடித்தால் அதுவும் கைவிட்டுவிடும்நிலை தோன்றும். எம்கதி அதோகதிதான்.' என்றார்கள்.

(காரைதீவு நிருபர் சகா)

தொடர்ச்சி...

## நடந்தாய் வாழி களனி கங்கை ..... அங்கம் 15

## மக்கள் திலகத்தின் இலங்கைப்பயணம்

ராஜப்பனும் அவ்வாறு எளிமையாக வாழ்ந்தவர். அவர் வசித்த புதுச்செட்டித்தெருவில்தான் கொழும்பு மத்திய தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வி. ஏ. சுகததாசவின் இல்லமும் அமைந்திருக்கிறது. அதனால் தொகுதி எம். பி. என்ற அடிப்படையில் அவரது நட்பும் ராஜப்பனுக்கு கிடைத்திருந்தது.

வி. ஏ. சுகததாச கொழும்பு மாநகரின் மேயராகவும் பதவி வகித்தவர். இவரது பெயரில் விளங்கும் சுகததாச ஸ்ரேடியத்தை இன்றும் காணமுடியும்.

எம்.ஜீ.ஆர் - சரோஜாதேவியுடன் அவர்களின் பயணங்களில் தொடர்ந்து பின்தொடர்ந்து படங்கள் எடுத்துக்கொண்டிருந்த ராஜப்பன் எம்.ஜீ.ஆரின் மனதில் நிரந்தர இடத்தை பிடித்துக்கொண்டார்.

இந்த நட்சத்திர ஜோடி தமிழகம் திரும்பும் நாள் நெருங்கியது. ஒரு நாள் கலை காலிமுகத்திடல் கோல்பேஸ் ஹோட்டலுக்கு ராஜப்பன் ஒரு பெரிய அல்பத்துடன் சென்றார்.

அதில் மக்கள் திலகம் எம்.ஜீ.ஆரின் இலங்கைப்பயணம் என்று அச்சில் பதிவுசெய்து அழகாக பொதிசெய்து எம்.ஜீ.ஆரிடம் வழங்கினார். கொழும்பு இரத்மலானையில் அவர் விமானத்திலிருந்து இறங்கியது முதல், கொழும்பு நகரில் காரில் பவனி வந்த காட்சிகள் உட்பட அவர் எங்கெங்கு சென்றார், யார் யாரைப்பார்த்தார், எந்தெந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார் முதலான அனைத்துவிபரங்களும் அழகான கறுப்பு - வெள்ளைப்படங்களாக பெரியதொரு ஆவணமாகவே காட்சியளித்திருந்தது.

எம். ஜீ.ஆர். திகைத்துப்போனார்! அதற்கு முன்னர் அவ்வாறு எந்தவொரு கலைஞனும் அப்படி ஒரு ஒளிப்பட ஆவணத்தொகுப்பினை அவர் முன்னால் வைத்ததில்லை. எத்தனையோ திரைப்படங்களில் அவர் நடித்திருந்தாலும்கூட எந்தவொரு ஸ்டில் ஃபோட்டோ கிராஃபரும் இத்தகைய அரிய செயலை அவருக்காக செய்திருக்கவில்லை.

இலங்கைப்பயண நிகழ்சிகளில் கூடுதல் கவனம் செலுத்தியிருந்த அவருக்கு ராஜப்பனுடன் சாகவாசமாக பேசுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை. அதற்கு உகந்தநேரம் காலைவேளைதான் என்பதை புரிந்துகொண்டு ராஜப்பன் அன்று அவரைச்சந்தித்து தனது நினைவாக அந்த ஆவணத்தை (அல்பத்தை) வழங்கினார்.

ராஜப்பனின் பூர்விகம் கேரளா! எம். ஜீ.ஆரும் கேரளா! " இவன் நம்மாளு! இவன் எங்க வீட்டுப்பிள்ளை! இவனை கவனிக்கவேண்டும்" என்று அந்தக்கணமே அந்த பொன்மனச்செம்மல் தீர்மானித்திருக்கவேண்டும்.

" இப்படி எத்தனை நாட்களுக்கு இந்த சின்னக்கெமராவை வைத்துக்கொண்டு காலம் தள்ளப்போகிறாய். சொந்தமாக ஒரு ஸ்ரூடியோவை தொடங்கு.

நான் உதவி செய்கின்றேன்" என்றார் மக்கள் திலகம்.

அடுத்த கணம் அவரை இலங்கை அழைத்திருந்த எம்.டீ. குணசேனா நிறுவனத்தின் இயக்குநர் சபைக்கு தகவல் சென்றது. கணிசமான ஒரு தொகையை ராஜப்பனுக்கு வழங்குமாறு உத்தரவிட்டார்.

எம்.ஜீ.ஆர். அந்த அழகிய நினைவுப்பரிசு அல்பத்துடன் தமிழகம் திரும்பினார். சில வாரங்களில் ராஜப்பன் சொந்தமாக ஒரு ஸ்ரூடியோவை திறந்தார்.

அதனைத்திறந்து வைத்தவர் பிரதமர் டட்லி சேனாநாயக்கா. பிரதம விருந்தினர்கள் வி.ஏ. சுகததாச, ஆர். பிரேமதாச.

எம்.ஜீ.ஆர் செய்த மகத்தான உதவிக்காக ராஜப்பனும் செய்நன்றி மறவாதிருக்க ஒரு காரியம் செய்தார். வீரகேசரியில் ஒரு சிறிய விளம்பரம் கொடுத்தார். தனது " ராஜா ஸ்ரூடியோவில் அடுத்து ஒருவாரத்திற்குள் படம் எடுக்க வருபவர்களுக்கு ஒரு எம். ஜீ.ஆர். படம் இலவசமாகத்தரப்படும் " என்று அந்த விளம்பரம் சொன்னது!

தலைநகரிலிருந்த எம்.ஜீ.ஆர். ரசிகர்கள் ராஜா ஸ்ரூடியோவுக்குப்படை எடுத்தனர். அங்கு படம் எடுத்துக்கொண்டவர்களுக்கு தான் அளித்த வாக்குறுதியின் பிரகாரம் இலங்கைப்பயணத்தில் எம். ஜீ.ஆர். சம்பந்தப்பட்ட படம் இனாமாக வழங்கப்பட்டது.

இந்தப்பதிவின் தொடக்கத்தில் எழுதிய வரிகளை மீண்டும் பாருங்கள்.

"ஒரு கல்லில் இரண்டு மாங்காய்கள்"

(தொடரும்)

தொடர்ச்சி...

## அருட்பா-மருட்பா வழக்கு எல்லாம் பொய்யப்பா

விளக்கமே மக்களிடமிருந்து வருகின்றது. அதாவது வள்ளலாரின் அருட்பாவினை நாவலர் மருட்பா எனக்கூறியதனாலேயே அது உண்மையிலேயே அருட்பாவா அல்லது மருட்பாவா என்று அறியவே வழக்குப் போடப்பட்டதாகவும், வள்ளலாரிற்கும்-நாவலரிற்குமிடையேயான வழக்கினை முத்துச்சாமி என்ற நீதிபதியே விசாரித்தார் எனவும் தவறாகக் கருதப்பட்டுவருகின்றது. வழக்கின் முடிவு பற்றி இருவேறு கருத்துக்கள் உண்டு. வள்ளலார் தரப்போ வள்ளலார் நீதிமன்றத்திற்கு வந்தபோது நாவலர், நீதிபதி உட்பட எல்லோரும் எழுந்து நின்றதாகவும், அதனையடுத்து நாவலரே வள்ளலாரினைப் பெரியவராக நினைத்து எழுந்து நின்றுவிட்டபடியால் நீதிபதி வழக்கினை வள்ளலாரிற்குச் சார்பாகத் தீர்ப்பளித்துவிட்டதாகக் கூறினார்கள். மறுபுறத்தில் நாவலர் தரப்போ நீதிபதி வழக்கின் ஆரம்பத்தில் வள்ளலாரைப் பார்த்து குற்றவாளியா? சுற்றவாளியா? எனக் கேட்க வள்ளலார் சுற்றவாளி எனக்கூறிப் பொய் கூறியதால், பொய் கூறியவருடன் வழக்காடுவது மானக்கேடு என நினைத்து வழக்கினைத் திரும்பப்பெற்றதாகக் கூறுவார்கள். இவையாவுமே தவறான விளக்கங்களாகும்.

வழக்கின் உண்மை நிலை:

------------------------------------------------------------

உண்மையில் நாவலரால் தொடரப்பட்ட வழக்கு மான இழப்பீட்டு வழக்கே (அவதூறு வழக்கு) ஆகும். அதாவது நாம் மேலே பார்த்த சிதம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தன்மீது நிகழ்த்தப்பட்ட அவதூறுகளிற்காக நாவலர் தொடர்ந்த மான இழப்பீட்டு வழக்கே இதுவாகும். இந்த வழக்கில் முதலாவது எதிரியாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் தலைமைத் தீட்சிதர் சபா நடேசரே. அடுத்ததாக மேலும் நான்கு தீட்சிதர்களும், ஆறாவது எதிரியாகவே வள்ளலார் குறிப்பிடப்பட்டிருந்தார். எனவே இதனை `வள்ளலார் எதிர் நாவலர்` வழக்காகக் கருதுவதே தவறானது. வழக்கம்போலவே பார்ப்பனர்கள் தமது வஞ்சனைச் செயலினை வரலாற்றில் தமது ஊடக செல்வாக்கினால் மறைத்துவிட, இது வெறும் "வள்ளலார் எதிர் நாவலர்" வழக்காகவே பெருமளவிற்கு அறியப்பட்டது. மஞ்சக் குப்பம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கின் நீதிபதியாக இருந்தவர் ராபர்ட் என்பவரே (ஒரு கிறித்தவர் நீதிபதியெனில், அது சைவத்திற்கு மானக்கேடு என்பதற்காகவும், வள்ளலார் வரும்போது நீதிபதியே எழுந்து நின்ற கட்டுக்கதையினை நம்பமாட்டார்கள் என்பதற்காக முத்துச்சாமி என மாற்றிவிட்டனர்).

வழக்கின்போது வள்ளலார்தான் உண்மையில் நாவலர் என்ற பட்டத்திற்கே விளக்கம் கூறியதாகவும், அது ஆறுமுகநாவலர் என்ற தனிமனிதர் குறித்தன்று எனவும் வாதாடினார். இதனை ஏற்று வள்ளலார் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். தலைமைத் தீட்சிதர் மட்டுமே குற்றவாளியாகக் கருதப்பட்டு ஐம்பது ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது. (பார்ப்பனர் யார் மீதாவது குற்றவறிக்கை {FIR} தாக்கல் செய்யப்பட்டுள்ளதா எனக் கேட்கும் S.V.சேகர் போன்றோரிற்கு, அன்றே தலைமைத் தீட்சிதரே குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் என்பதனை அறிந்து கொள்வது நல்லது). இதுவே வழக்கின் உண்மையான நிலை.

இவ்வாறான பிணக்கு நாவலரிற்குப் பின்னரும் கதிரைவேற்பிள்ளை - மறைமலை அடிகளார் போன்றோரால் பல ஆண்டுகளிற்கு அறிக்கைப்போராகத் தொடர்ந்திருந்தது. இதில் பல சுவையான தமிழ்ச்சொல் விளையாட்டுக்களும் உண்டு. எடுத்துக்காட்டாக அருட்பாவினை "ஆபாசத் தத்துவம்" எனக் குற்றஞ்சாட்டப்பட்டால், மறுதரப்பு அதே சொற்களையே திருப்பி "ஆ! பாசத் தத்துவம்" என எதிர்த்தாக்குதல் செய்தல் ஒரு வகை. "இறந்தார் எழுவர்" என்பது (செத்தோரை எழுப்புதல் அல்ல ) "மனம், புத்தி, அகங்காரம், சித்தம் எனும் நான்கும், ஆணவம், கன்மம், மாயை எனும் மலங்கள் மூன்றும் அப்பாடலில் எழுவர் எனக் கூறப்பட்டுள்ளன. இவை ஏழும் ஒடுங்கி ஆன்ம போதம் முற்படுதலையே இறந்தார் எழுவர் எனக் குறிப்பிட்டுள்ளார் வள்ளலார்". இறந்து ஆர் எழுவர்? இறந்தார் யார்தான் எழுவர்? "என விளக்குவது மற்றொரு வகை. இவை போன்ற பல சுவையான தமிழ்ச்சொல் விளையாட்டுக்கள் உண்டு.

அதேபோன்று இந்த விடயத்திலிருந்து பெறவேண்டிய படிப்பினை முதன்மையானது. இந்த முத்தரப்பு பிணக்கில் வெற்றிபெற்றது பார்ப்பனியமே. வள்ளலாரைப் பொறுத்தவரை அவரது இறுதிக்காலத்தில் தனிமைப்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் அல்லது தற்கொலைக்குத் தூண்டப்பட்டார்.

அத்துடன் வள்ளலாரின் சன்மார்க்கம் இன்று நீர்த்துப்போய் வெறும் அன்னதான மடங்களாக சுருங்கிப்போய்விட்டது. நாவலர் தரப்பினரைப் பொறுத்தவரையில் இன்று ஈழத்திலேயே பார்ப்பனியம் ஆகமங்களை எல்லாம் புறந்தள்ளி வேதங்களை முன்நிறுத்திவிட்டது. அண்மைக் காலத்தில் ஈழத்தில் இந்துத்துவா அமைப்புக்களின் ஊடுருவலிற்குப் பின்னர் `சைவம்` என்ற சொல்லே `இந்து` என்ற சொல்லால் பதிலீடு செய்யப்பட்டு வருகின்றது. மறுபுறத்தில் தீட்சிதர்களோ அசைக்கமுடியாத ஆற்றலுடையவர்களாக உருவெடுத்து நிற்கின்றார்கள்.

சில ஆண்டுகளிற்கு முன்னர் கூட சிவனடியார் ஆறுமுகம் நீதிமன்ற இசைவுடன் தமிழில் தேவாரம் பாடச் சென்றபோது, அவரைத் தாக்கிக் கோயிலிற்கு வெளியே கொண்டுவந்து விடுமளவிற்கு அதிகாரம் படைத்தவர்களாகவே திகழுகின்றனர்.

வரலாறு திரும்புகின்றது:

------------------------------------------------------------

இராமயணக் கதையில் வாலி-சுக்கீரிவன் மோதலிலிருந்தோ அல்லது மகாபாரதக் கதையில் பாண்டவர்- கௌரவர் மோதலிருந்தோ பார்ப்பனியம் எவ்வாறு பலனடைந்தது என்பதனை வள்ளலாரோ அல்லது ஆறுமுக நாவலரோ உணர்ந்து கொள்ளாமையால், அதற்கான விலையினைச் செலுத்தினார்கள்.

அதேபோன்று இந்தப் பிணக்கிலிருந்து எந்தப்பாடமும் கற்றுக்கொள்ளாமல் தமிழகத்தில் இன்று மோதிக் கொள்ளும் திராவிட - தமிழ்த்தேசிய மோதலிலும் பலனடையப்போவது உறுதியாகப் பார்ப்பனியமாகவே இருக்கப்போகின்றது. வரலாறு கற்றுத்தருவதற்கு எப்போதும் தயாராகவே உள்ளது, நாம்தான் பல வேளைகளில் கற்றுக்கொள்வதற்குத் தயாராகவிருப்பதில்லை

நன்றி - இனியொரு



# ஓராண்டு நினைவாஞ்சலி



# டாக்டர். ராஜசிங்கம் நரேந்திரன்

ஊருக்கு உழைப்பவர்கள் பலர் உண்டு.
ஆனால், அடுத்தவர் ஊருக்கும் உழைக்க நினைத்த மாண்பு மிகு மனிதர் நீர்!
நீங்கள் நடந்த தரையில், உங்கள் காலடிகள் இன்னமும் இங்கு அழியவில்லை.
எங்கள் வழியில் முன் நடந்து முட்களை காலில் ஏந்தியவர் நீர்.
இது உம்மை நினைந்து அழுவதற்கான நேரமல்ல.
உம் வழியில் நாம் நீண்ட அடியெடுத்து நடப்பதற்கான காலம்.

*(லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவுடனான மட்டக்களப்பு புலையவெளி கிராம அபிவிருத்தி திட்டத்தின் முகாமைத்துவ ஆலோசகர், மறைந்த டாக்டர். ராஜசிங்கம் நரேந்திரன் அவர்களின் முதலாமாண்டு நினைவாஞ்சலி)*

Printed and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa